14 May 1934

ஊ211, N15AB
N34 19.11.
187518



# சேவா

ஸ்ரீ தேசிக தர்சன பத்திரிகை


| ஜய ஸ்ரீ வைகாசி | ஜூன் | ஸம்புடம் 3 ஸஞ்சிகை 9 |
|---|---|---|


வரு நாள் பழுதற்று வாழும்

பொருளடக்கம்

வகையதில் மன்னுவமே


| | பக்கம் |
|---|---|
| நாடுவாழ நல்லவழி | 2 |
| ஸ்ரீராமாநுஜார்ய திவ்யாக்ஞை | 3 |
| வேண்டுகோள் | 4 |
| குருபரம்பரை | 5 |
| நினைத்ததுண்டா? | 6 |
| அட்டைப்பட விளக்கம் | 7 |
| பிராட்டியின் பிரபாவம் | 8 |
| ஸ்ரீ விஷ்ணுபுராணம் | [illegible] |
| உத்தி பறத்தல் | 13 |
| திருமாலை | 17 |
| வைகுந்தன் வழிபாடு | 25 |
| ஸ்ரீவைஷ்ணவ பரிபாஷைகள் | 28 |
| [illegible]ளிடை | 30 |
| குறிப்புரை | 31 |
| ஆராய்ச்சி மேடை | 32 |
| யார் அழகு? | 35 |
| செய்திகள் | 40 |
| நித்யகர்மங்கள் | 41 |
| முக்தா கலாபம் | 44 |
| புராண பூங்கா | 45 |
| வேண்டுவன விலக்குவன | 48 |
| ரஸமான விஷயம் | 49 |
| ஸ்த்ரீகள் பகுதி | 51 |
| கேள்வி பதில் | 55 |
| நல்வார்த்தை | 5[illegible] |
| ஹயக்ரீவ ஸ்தோத்ரம் | |

# நாடு வாழ நல்ல வழி

நமது தேசம் நன்றாக இருக்கவேண்டுமென்று நமக்கு ஆசை. நாம் செய்யக் கூடிய நல்ல காரியங்கள் தோறும் ப்ரார்த்தனையாகவோ ஆசாஸனமாகவோ இதைத்தான் தேசோயம் நிருபத்ரவோஸ்து, ஸர்வேஜநாஸ்ஸுகிநோபவந்து என்று விடாது சொல்லி வருகிறோம்.

நாடு எப்படி இருந்தால் மேன்மையை அடையும்? நாட்டுக்கு எது நன்மை? என்றெல்லாம் ஒரு சில ப்ரச்னைகள் உண்மைத் தொண்டர்களின் முன்னிலையில் நிற்கின்றன. இயந்திரத் தளவாடங்களைப் பெருக்குவதும், விஞ்ஞானத் துறையை விரும்பியபடியெல்லாம் வ்ருத்தி செய்வதும் நன்மையையும் மேன்மையையுமே தருமா? நினைப்பும் நாம் நேராகக் காண்பதும் ஒன்றோடொன்று பொருந்துவதில்லை. அதனால் எவ்வளவு இன்பம் உண்டு என்று எண்ணுகிறோமோ அவ்வளவும் மற்றொரு பக்கத்தில் பயத்தை விளைவிப்பதாயிருக்கும். இன்றுள்ள குண்டு பேச்சு ஒன்றே இதற்குப் போதுமானது. விரும்பினால் இவற்றையெல்லாம் ஒரு திட்டத்துடன் வைத்துக் கொள்வதுதான் நலம்.

நாட்டுக்கு நிலையான மேன்மையைத் தருவது தர்மமே என்று நாலுமறிந்த நாவலர்கள் நவின்றனர். இதனால் தான் நிலையான மேன்மை நாட்டுக்கு என்பதை யாராலும் அசைக்க முடியாது.

இதில் ஒவ்வொரு மக்களும், அவர்களை நல்வழியில் கொண்டு போக நினைக்கும் அரசாங்கமும் முக்கியமான நோக்கத்தைக் கைப்பற்ற வேண்டும். தர்மத்தினலாவது மற்ற எந்த முறையைக் கையாண்டாலும் ஆகாது என்பது திண்ணம்.

தானே வாழவேண்டும், தனக்கே எல்லாம் வேண்டும் என்பவை போன்ற எண்ணங்களும், காமக்ரோதம் முதலியவற்றின் சேர்க்கையும், போட்டியிட்டு நிற்குமானால் அந்த நாடு சீர்படுவது சிரமம் தான். விஞ்ஞானமோ யந்திரமோ இங்கு எதையும் செய்ய இயலாது.

கடமையை யுணர்ந்து கண்ணியத்தைப் பெறும் வழி தர்மத்தில் தான் உளது. மதங்களைக் கண்டு மிரளுவது நன்றன்று. பாலுடன் சர்க்கரை கலந்த மாதிரி மக்களுடைய மனத்திலே தர்மசிந்தை கலந்திருக்க வேண்டும்.

பலகாலும் பாடுபட்டுத் தேடிய பணத்தை எத்தனை வகையில் பக்தியும் ச்ரத்தையும் அணியாய் விளங்க பகவானுக்கு அர்பணம் செய்திருக்கின்றனர்! செய்து வருகின்றனர். சட்டமொன்றினால் மட்டும் இவ்வகையில் பொது மக்களிடமிருந்து பணம் சேகரிக்க முடியுமா? முடிகின்றதா? என்பதை எல்லோரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்று நாளில் அறநிலையத்தின் மூலம் வரும் பணம் அளவு கடந்தது. அதனாலே வாழும் மக்களும் அனந்தம். எல்லா விஷயத்திலும் எல்லா வசதியையும் செய்து வரும் அரசாங்கம் தனிப்பட்ட வகையில் பணத்தை ஒதுக்காவிட்டாலும் அறநிலைய வழியாக வரும் பணத்தையாவது அதே அ[illegible] தக்க முறைகளைக் கையாண்டு வருதல் நல்லது. [illegible] மக்களின் மனம் மாறி வருகின்[illegible]மத்தில் ச்ரத்தை குறை[illegible]து. இதைத் தடுப்பது அர[illegible] பொறுப்புகளில் ஒன்றும் நாட்டுக்கு நல்லதும்.

# நேயர்கட்கு ஒரு வேண்டுகோள்.

## 20-வது ஆண்டின் முன்னறிக்கை

நிகழும் பவ ஆண்டு ஆடித்திங்கள் 1-ம் தேதி (16-7-34) நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகைக்கு 20-வது ஆண்டு பிறக்கப் போகிறது. "ஆனந்தபோதினி" பருவத்திற்கேற்ற வளர்ச்சி பெற்றுப் பற்பல சிறப்பியல்புகளுடன் விளங்கி வருவது நேயர்கள் அநுபவத்தில் உணர்ந்துள்ள விஷயமாகும். தமிழ் மக்கட்கு எல்லாத் துறைகளிலும் ஒரு விழிப்பையும் எழுச்சியையும் உண்டாக்கித் தக்க வழிகாட்டியாய் விளங்குவதே "ஆனந்தபோதினி"யின் முதற்பெரு நோக்கம். 20-வது ஆண்டில் இன்னும் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சங்களுடன் "ஆனந்தபோதினி" உங்கட்கு மகிழ்ச்சிப் பெருக்கை அளிக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஆகையால் "ஆனந்தபோதினி"யின்பால் அன்பு பூண்டு ஆதரித்துவரும் அன்பர்கள் எல்லாரும் 20-வது ஆண்டின் சந்தாத் தொகையை நிகழும் பவ ஆனி மீ 27-ம் தேதிக்(11-7-34)குள் மணியார்டர் மூலமாகவோ நேரிலோ எங்கட்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டுகின்றோம். சந்தாத் தொகையின் பொருட்டு வி. பி. அனுப்புவதால் தபால் செலவு 4-அணு மணியார்டர் கமிஷன் 2-அணு ஆக 6-அணு அதிகச் செலவும் சஞ்சிகை வந்து சேர வீண் காலதாமதமும் ஆகும். ஆகையால் எல்லா நேயர்களும் மேற் குறிப்பிட்ட தேதிக்குள் மணியார்டர் செய்து விடுவதுதான் உங்கட்கும் எங்கட்கும் லாபமும் சௌகரியமும் ஆகும். வி. பி. அனுப்புவதால் இன்னொரு சங்கடமும் உண்டு. அதாவது வி. பி. வந்தால் ஏழு நாளைக்குமேல் தபாலாபீஸில் வைத்திருக்க மாட்டார்கள். அதற்குமேல் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கள் நாள் 1-க்கு 2-அணு வீதம் ஸ்டாம்பு வாங்கி ஒட்டி விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும். அதுவும் பத்து நாட்களுக்குமேல் தபாலாபீஸில் வைத்திருக்க மாட்டார்கள். இந்தச் சங்கடங்களையெல்லாம் நோக்கும்போது அன்பர்கள் எல்லாரும் சந்தாத்தொகையை முன்பணமாக அனுப்பி ஆதரிப்பதே நலம்.

குறிப்பு:—முன் பணம் அனுப்புவோர் பழைய சந்தாதாரர்களாயிருந்தால் மணியார்டர் கூபனில் தங்களுடைய சந்தா நம்பரைக் குறிப்பிட்டு "20-வது ஆண்டுக்கு" என்று விவரம் எழுதவேண்டும். புதிய சந்தாதார்கள் 'புதிய ஆண்டுக்கு' என்ற விவரம் எழுதவேண்டும்.

மானேஜர்.

கூச்சலிடும் சப்தம் காதில் விழுந்தது. அவர்கள் பலாத்காரஞ் செய்ய வும் ஆரம்பித்தனர். இன்னுஞ் சற்று தொடர்ந்து அவ்வித பலாத் காரச் செயல்களை அவர்கள் செய்திருந்தால் நான் ஏறிச் சென்ற மோட்டார் வண்டியின் மேல்மூடியைத் தூள் தூளாகச் செய்துவிட் டிருப்பார்கள். அம்மூடியைத் தடிகொண்டு பலமாக அடித்தார்கள். பின்னலிருந்த கண்ணாடி ஜன்னலைத் தூள் தூளாக உடைத்துவிட்டார் கள். நல்லவேளையாக பலத்த காயமில்லாமல் ஆண்டவன் அருளால் நான் தப்பிப் பிழைத்தேன்"

"............மற்றொரு கக்ஷியார் என்னை எதிர்க்கிறார்கள். ஒருவரை எல்லோரும் எக்காலத்திலும் ஒரே மாதிரியாக நேசிப்பதென்பது நடவாத காரியம். ஆகவே, முன் எனக்கு நண்பர்களாக இருந்த சிலர் இப்போது எதிர்க்கக்ஷியி லிருப்பதைக் காண எனக்கு ஆச்சரிய மேற்படவில்லை. ஆனல் அவர்கள் நடந்துகொண்ட முறைதான் எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. என் விஷயத்தில் பொது மக்கள் அன்பு கொள்வதை விட்டுவிட வேண்டுமென்பதற்காக என்னைப் பற்றிப் பொய்யான விஷயங்களை நிரப்பித் துண்டுப் பிரசுரங்களை வெளி யிட்ட தற்கு அவர்கள்தான் காரணம். அவர்கள் மரியாதையான வார்த்தை களை உபயோகிக்கவுமில்லை."

இவ் வார்த்தைகளி லிருந்து சநாதனிகள் மகாத்மா விடத்தில் எவ்வளவு நேர்மையற்ற முறையில் நடந்துகொண் டிருக்கிறார்கள் என்பது தெளிவாக விளங்குகிறதல்லவா! இவர்கள் செய்கை அறக் கொடிது! அறக்கொடிது!! தாழ்த்தப்பட்ட மக்களைக் கோயிலுக் குள் விடுவதால், 'மதம் கெட்டுப் போய்விடும்! சமயம் போய்விடும்!' என்று கதறும் இச் சநாதன கோஷ்டியார், பலாத்காரத்தைக் கைக் கொண்டு ஹிம்சையி லிறங்குவார்களானல் இவர்கள் சமயத்தைக் காப்ப தெப்படி? சமயம் இவ்வாறு பலாத்காரத்தில் இறங்கும்படி கூறு கிறதா? சநாதன தன்மைக்கு மாறாக நடந்து கேவலம் அறிவற்ற மக் கள் கையாளும் பலாத்காரத்தை யுபயோகிக்கத் துணிந்த இவ்வைதிகர் கள் எவ்வாறு உண்மைச் சநாதனிக ளாவார்கள்?

இயேசு பெருமானை யூதர்கள் சிலுவையி லறைந்தபோது, தாம் அத னால் துன்பமடைவதைப் பொருட் படுத்தாது "இவர்கள் தாங்கள் என்ன விதமான கொடிய தீங்கை இழைக்கிறோம் என்று தெரியாது இப்பாப காரியத்தைச் செய்கிறார்கள். ஆதலால் ஆண்டவனே இவர்களைப் பாபத் தினின்றும் காப்பாயாக." என்று இறைவனை நோக்கி இறைஞ்சியது போல், மகாத்மா காந்தியும், "இவர்களின் செய்கை ஒருகால் பின்னல் அவர்களை வருந்தக்கூடிய ஒரு விபத்திலும் முடிந்திருக்கக் கூடும்" என்று கூறிய அமுத மொழியை இச்சநாதனிகள் கவனித்து இனியே னும் இவ்வித கொடிய செயலை மேற்கொள்ளாது நல்வழியில் சநாதன தருமத்தைக் காப்பார்களாக.

ஓம் தத் ஸத்.




## முருகனும் முழுமதியும்.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி. எல்.)

அந்திமாலையில் வானத்தே எழுந்த முழுமதி எங்கும் வெண் ணிலா விரித்தது. செம்பொன்னுலாய செழுங்கனிபோல் அமுதம் பொழியும் அழகிய மதி விண்ணிலே ஊர்ந்து சென்றது. நிலமெங் கும் பொன்னுடை போர்த்தாற்போலவும், பாலாவி பரந்தாற்போலவும், வெண்ணிலா விரித்தது. நெடுந்திரை சுருட்டும் கருங்கடல் சேயைக்கண்ட தாய்போற் பொங்கிக் கரைபுரண்டு நுரைத்தெழுந்து கொந்தளித்தது. காதல னைக்கண்ட கற்புடையாள் மனம்போல் குமுதமலர் முகையவிழ்ந்து தேன் சொரிந்து மலர்ந்தது. மலையிடைப் பிறந்த மந்தமாருதம் மெல்லெனத் தவழ்ந்து நல்மணம் கமழ்ந்தது. இத்தகைய அழகு வாய்ந்த அந்திப் பொழு தில் ஈசனார் மைந்தனாய குமரன் என்னும் இளம்பாலன் தண்டை யணிந்த கால்களால் தளர்ந்து நடந்து விண்ணிலே இலங்கிய வெண்மதியின் செம்மை யைக் கண்டு வியந்து கைகொட்டி, விரலாற்சுட்டி; முகமலர்ந்து, அளவிலா மகிழ்வுற்றான்.

குறுநடை பயிலும் குமரனைக் கண்ட முழுமதி அவனையே அருளுடன் நோக்குவதுபோல் விளங்கிற்று. இவ்வாறு விண்ணிலே செஞ்சுடராய் இலங் கிய தண் மதியை முருகன் அருகே வந்து விளையாட அழைத்தான். தன் விருப்பிற் கிசைந்து விண்மதி உடனே வாராமைகண்டு குமரன் கண் பிசைந்து அழுது கரைந்தான். மழலை தேரா இளங்குமரன் விம்மி அழக்கண்ட முனிவர் ஒருவர் மனம் பொறாது நால்வகை உபாயத்தால் விண்மதிக்கு நன் மதி புகட்டத் தொடங்கினர். "வெண்ணிலா விரிக்கும் விண்மதியே! நீயும் முருகனைப்போலவே அமுத மயமாய் விளங்குகின்றாய். உயிராய பயிர் தழைக்க உயரிய அருள் சுரக்கின்றாய்; கண்டோர் கண்ணையும் கருத்தையும் குளிர்விக் கின்றாய்; குமுதவாய் விரித்துக் குளிர் நிலா வீசுகின்றாய்; பிள்ளைப் பெருமா னாய முருகனோடு பிறப்பிலும் சிறப்பிலும் ஒப்புவாய்ந்த நீ அவனோடு விரும்பி விளையாட வாராய் என்று முனிவர் நயந்தழைக்கும் முறையில் சதுர்வித உபாயத்தின் முதலாய சாமம் விளங்கக் காணலாம்.

"உன்செய்கை எம்பிரான்தன் செய்கை போலுமால் உனையுமிவன்
[ஒவ்வாநிரான்
அற்பொதி களத்தவன் அளித்தருமை நேசனுடன் அம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன் அம்புலீ யாடவாவே."

என்று குழைந்த மொழிகளால் வருந்தி யழைத்தும் வாராமை கண்டு முரு கனது பெருமையும், மதியின் சிறுமையையும் எடுத்துரைத்து, அப்பேதத்

தால் முனிவர் விண்மதியை வெல்லக் கருதினார். "மாலை மதியே! ஒருவாறு சில துறைகளில் நீ முருகனை ஒப்பா யாயினும் பல துறைகளில் அப்பெருமானுக்கு நீ நிகராகாய். முக்கட் பெருமானாய முதல்வனுக்கு நீ ஒரு கண்ணாய் அமைந்தாய். முருகனோ கண்ணின் மணியாய் அமைந்தான். நிறைந்தும் குறைந்தும் நீ வேறு படுகின்றாய். முருகனோ கலைநிறைந்த கனியாய் இலங்குகின்றான். நீ புறவிருளைப் போக்குகின்றாய். அப்பெருமான் அகவிருளை அகற்றுகின்றான். உலகில் நீ ஒருபால் மறைகின்றாய். முருகனோ புவனப் பரப்பெலாம் பொலிந்து விளங்குகின்றான். குளத்திற் பூக்கும் குமுதப்பூவை நீ மலர்விக்கின்றாய். முருகனோ அன்பரது மனமாய திருமலர் திறக்கின்றான். ஆகவே உன்னிலும் அப்பெருமான் உயர்ந்தவன் அன்றோ! என்று முனிவர் கூறும் மொழிகள் மிக அழகு வாய்ந்தனவாம்.

"பாயிருள் போதத்து இருட்டன்றி அகவிருள்
படலம் கிழிப்ப துணராய்
பனிவிசும் பிற்பொலிவ தோன்றலால்
புவனப் பரப்பெலாம் பொலிவதோராய்
சேயிதழ்க் குமுதம் திறப்ப தல்லால்
உளத் திருமலர் திறக்க அறியாய்"

என்று அடிகள் கூறும் முறை நால்வகை உபாயத்தில் பேதமென்னும் வகையிலமைவதாகும்.

இவ்விருவகையாலும் விண்மதியை வெல்ல இயலாத முனிவர் தானத்தைக் கையாளும் முறை கருதத்தக்கதாகும். மாலையில் தோன்றி மகிழும் முழுமதியே! இன்னும் நீ முருகனது இணையற்ற பெருமையை அறிந்தாயல்லை! கருநோயை வேரறுக்கும் பெருமானருள் பெற்றால் உனது கரு நோய் கதிரவனைக் கண்ட பனிபோல் கடுகியோடுமே! அந்தமில் இன்பத்து அழியா வீட்டையும் தரவல்ல முருகனுக்கு உனது சிறு நோயை ஓட்டுதல் அரிதாமோ? அன்பர் கண்ணெதிரே நின்று தண்ணளி சுரந்து வரங்கொடுக்கும் தெய்வம் இத்தெய்வமல்லால் உலகில் வேறுண்டோ?

"ஒழியாத புவனத்து உயிர்க்குயிரதாய்
நிற்பதொரு தெய்வ முண்டென எடுத்து
உரையால் உணர்த்துவதை யொழிய
எவரெவர்கட்கும் ஊன்கண் உளக்கண்ணதாம்
விழியாக முன்னின்று தண்ணளி சுரந்து
அவர்கள் வேண்டிய வரங்கொடுப்பான்
மெய்கண்ட தெய்வம் இத்தெய்வ மல்லாற் புவியில்
வேறில்லை யென்றுணர்தி யால்
பொழியாத புயல் தங்கு புவனமும் திசைமுகப்
புத்தேள் பெரும் புவனமும்
பொன்னுலகும் மண்ணுலகும் எவ்வுலகு வேண்டினும்
பொருளன்று இவற்கு மற்றை
அழியாத வீடும் தரக் கடவன் இவனுடன்
அம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழைய வரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே"

என்று நாவாரத் தொழும் அன்பர் கண்ணெதிரே தோன்றிக் கலியுக வரதனாய் அருள்புரியும் குமரனது பெருமையை அடிகள் கூறும் திறம் அறிந்து மகிழத்தக்கதாகும். இவ்வாறு தானமாய உபாயத்தாலும் தண்மதியை வெல்ல இயலாத முனிவர் தண்டத்தைக் கையாளுதல் இயல்பேயன்றோ. "குறையாகிப் பிறையாகி வளரும் குளிர்மதியே! குன்றமெறிந்த குமரனது ஆற்றலை நீ அறியாய் போலும்! அப்பெருமான் குன்றமெறிந்தான் குரை கடலிற் சூர்தடிந்தான்; குலிசனைச் சிறைவிட்டான். இப்பெருமானது பேராற்றலறியாது பாலன் என்றெண்ணி இகழ்ந்த சூரன் பட்டபாட்டை அறியாயோ? அப்பெம்மானது வேலின் வெம்மைக்கு ஆற்றாத சூரன்,

"கோலமா மஞ்ஞை மீது குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாள் பரிசிவை யுணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி யன்றோ."

என்று மயக்கம் தெளிந்துரைத்த மாற்றம் நீ அறியாயோ? கோலமா மயில்மீது குலவிய குமரனைப் பாலன் என்றெண்ணிச் சூரன் இகழ்ந்தான். ஆறு நாள் அண்டமுற்றும் அலைந்து திரிந்தான். அப்பால் பாலனது வேலின் வெம்மைக்கு ஆற்றாது முருகனே மூலகாரணமாய் நின்ற மூர்த்தியென்று தெளிந்து அவனருள் பெற்றுய்ந்த கதையை நீ அறியாயோ? இன்னும் தக்கன் வேள்வியைத் தகர்த்த நாளில், வேள்விக்களமே கொலைக்களமாக முடியமரர் மொத்துண்டு நீயும் மானம் குலைந்ததை மறந்தனையோ? இத்தகைய வலிமைசான்ற வேலன் வரவழைக்க நீ வாராவிடில் அவன் விம்மிப் பொருமி அழுது கண்கள் சிவந்து கண்ணீருகுப்பான். அப்பெருமான் அருங் கருணையால் உன்னை வாளாவிடினும் இளைய வீரனாய வீரவாகு பொறுப்பவனல்லன். அவனது சீற்றத்தை மாற்ற எவராலு மியலாது. ஆதலால் முருகன் அருமையாக அழைக்குங்கால் அன்புடன் வந்து விளையாடுவதே உனக்கு அழகாகும்.

"தள்ளும் பவக்கடல் உழக்கும் எனைமுத்தித்
தடங்கரை விடுப்பவன் உனைத்
தலையளிப்பான் வர வழைப்பவும் வராவிடில்
தண்ணளி சுரந்து கருணை
வெள்ளம் கொழிக்கும் கடைக்கண் சிவப்பஇவன்
வெகுளாது விடினும் அழுது
விழிசிவப்பக் காணில் இரவிபகை சாய்த்தஇள
வீரன் பொறுப்பா னலன்
கள்ளம் பழுத்தகண் கடைசியர் சிறாஅர்
திரைக் காவிரித்தண் துறை தொறும்
கதிர் நித்திலங்குவி மணற்குன்றம் ஏறிநின்
கலைமதிக் கலச அமுதை
அள்ளும் தடம்பணைச் சோணாடன் இவனுடன்
அம்புலீ யாட வாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாட வாவே."

என்று முனிவர் கூறும் மொழிகள் நால்வகை உபாயத்திற் கடையாய தண்டத்தின் பாற்படுதல் நன்குணரப்படும். இவ்வாறு நயமொழிக்கும் இசை

யாது பயமொழிக்கும் அஞ்சாது விண்ணிலே விளங்கிய தண்மதியின் செருக்கையும் மதியற்ற மதியை மறந்து மற்றொரு விளையாட்டிற் செல்ல மனமற்ற மைந்தன் விருப்பையும் கண்ட முனிவர் செயலற்றுச் சிந்தனையில் ஆழ்ந்தார். அப்பொழுது மைந்தனைக் காணாத தந்தை "முருகா, முருகா" என்றழைத்துக் கொண்டு வீட்டின் முற்றத்தை யடைந்தார். அருகே யிருந்த கரும்பாறைமீது முற்றத் துறந்த முனிவரும், பச்சைப் பசும்பாலனும் அமர்ந்திருக்கக் கண்டு அவ்விடம் நோக்கி விரைந்து சென்றார். மைந்தனை யெடுத்து மடியில் வைத்துக் கண்ணீர் துடைத்து முருகனது முகத்தை இனிது நோக்கி, "கண்ணே! கண்மணியே! ஏன் அழுகின்றாய்? பாலும் பசுந்தேனும் வேண்டுமோ? கனியும் தினையும் வேண்டுமோ?" என்று கனிவுடன் வினவி முருகனை முத்தமிட்டார். முத்தமிட்ட அத்தனது சடையில் அமைந்த சந்திரனை முருகன் கண்டுகொண்டான். தனது விருப்பத்திற் கிணங்கி விண்ணினின்றும் இறங்கிய தண்மதியைக் கைகளாற் பற்றித் தழுவி விளையாட எண்ணினான். மழையின்றவானத்தில் வெயில் வீசினாற்போல் முருகனது முகத்தில் கண்ணீர் மாறிக் குறுநகை தோன்றியது. மலர்ந்த முகத்தோடு தந்தையின் மணித்தோளிலேறிக் கார்மேகம்போல் விளங்கிய கற்றைச் சடையைக் கையா லிழுத்து அதன்மீது விளங்கிய செஞ்சுடரைத் தன் கமலக் கைகளால் வளைத்தான். முழுமதியின் முன்னே முருகனது இளநலம் முன்னினும் அதிகமாய் இலங்கிற்று. மதியின் தண்மையையும் வெண்மையையும் கண்டு முருகன் களித்தான். அதன் வட்ட வடிவத்தைத் தன் முகத்தோடு ஒட்டிப் பார்த்தான். மதியின் மத்தியிலமைந்த மறுவைத் தன் மலர்க்கரத்தால் துடைத்தான். இவ்வாறு மதியுடன் விளையாடி மைந்தன் மகிழ்வதைக்கண்ட தந்தையார் மனம் குளிர்ந்தார். 'யாவர்க்கும் முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள் உளதோ' என்றெண்ணி முனிவரும் மனம் களித்தார். இவ்வாறு ஈசனார் மேனியில் தவழ்ந்து இனிது விளையாடிய முருகனது பெருமையை முனிவர் போற்றிப் புகழும் பொருளுரை அன்பர்க்கு ஆராவின்பம் அளிப்பதாகும்.

"மழவுமுதிர் கனிவாய் பசுந்தேறல் வெண்துகில் மடித்தலம் நனைப்ப
[அம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி எம்பிரான் மார்பினில் குரவையாடி
முழவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கி அளமோலி நீர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின் வாய்மடித்து இளமானின் முதுபசிக்கு
[அறுகு அருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு நுண்எழ மிகப் புழுதியொட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின்று இருவிழிகள் சேப்பமுழு வெள்ளநீர்த்
[துளையமாடிக்
குழவுமுதிர் செவ்விப் பெருங்களிவரச் சிறுகுறும்பு செய்தவன் வருகவே
குரவுகமழ்தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுருபரன் வருகவே."

என்று முனிவர் அருளிய மொழிகளைப் போற்றி வருந்தி அழைத்தால் முருகன் வாராதிருக்க வழக்குண்டோ?

# வில்லி பாரதச் செய்யுளாராய்ச்சி

(பண்டித. ரா. திம்மப்பய்யர்.)

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஐந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் நம் தமிழகத்து வேந்தனாகிய கொங்கவேந்தர் பெருந்தகை வரபதி யாட்கொண்டானால் ஆதரிக்கப்பட்டு அவனது வேண்டுகோட்கிணங்கிச் செந்தமிழ் மொழியில் விருத்தப் போக்கு நடையிலே பாரதத்தைப் பாடியருளிய மகா கவி வில்லிபுத்தூராழ்வாரை யறியாதா ரெவருமில ரென்பது முற்றுந் தேற்றமேயாம்.

இக்கவிஞர் பெருமான், தமது நூலிற் பன்முறையும் நுனித்தறிந்த பின்னரே அரிதின் விளங்கற்பால பல வரும்பெருஞ் செய்திகளைத் திருத்தமாக வமைத்துள்ளா ரென்பது நுண்ணறிவினர்க்கு விளங்காமலிரா. இத்தகைய சீரிய விடயங்களடங்கிய பாசுரங்களுட் சிலவற்றை யீண்டுத் தமிழுலகமறிந்தின்புறற்பொருட்டு எழுதத் தொடங்குவாம்.

துரியோதனனறியாது வஞ்சச் சூழ்ச்சியினால், கொன்றை மாலை கொண்டு வீமசேனனிடையே புகுந்து துணைபுரியாவாறு தகைந்திட்டு இறுதியில் அபிமன்யுவைத் தனது கதாயுதத்தை வீசிக் கொன்ற சயிந்தவனது செய்தியைப் போர்க்களத்தொரு புறத்திருந்த அர்ச்சுனன் அறியாது போயினன். பின்னர் அருச்சுனன் தெருளுதற்குரிய உபாயமொன்றை முனிவன் வேடம் பூண்ட இந்திரனைக் கொண்டு கற்பித்து, இறுதியிற்றன் மெய்க்குறிகளால் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கண்ணபிரான் உணர்த்த, மெல்லவறிந்த அர்ச்சுனனாற்றாது அரற்றுவானாயினன். அச்சமயத்து,

"அயர்ந்தனன் வீழ்ந்த கோவை யச்சுதன் பரிவோ டேந்திப்
புயந்தழீஇ யெடுத்து வாசப் பூசுநீர் தெளித்து மாற்றிப்
பயந்தரு கோடிக் கூட பாகலந் தணிந்து மெல்லக்
கயர்தெளி வுற்ற தென்னக் கண்மலர்ந் தழுத லுற்றான்."

என்ற கவியை, வில்லிபுத்தூரார் அருளினார்.

இனி, இதன் பொழிப்புரையையும் இன்றியமையா விசேடக் குறிப்புக்களையும் ஆய்ந்து நிலையிடுவோம்.

(பொ—ரை) மூர்ச்சித்துக் கீழ் விழுந்த அருச்சுன வேந்தனைக் கண்ணபிரான் அன்போடு தாங்கிக் கைகளால் அணைத்தெடுத்துப் பரிமளத்தையுடைய பூசுதற்குரிய பனிநீரை (அவன்மேல் தெளித்து) அவனது மூர்ச்சையைப் போக்க, (அவ்வருச்சுனன்) அச்சத்தைத் தருகிற கொடுமையான கூடபாகலமென்னும் நீரப் பெருநோய் குறைய, யானை மெல்லத் தெளிவை யடைந்தாற்போலக் கண்களை விழித்து (தெளிந்து) புலம்பத் தொடங்கினான்.

இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட 'கூடபாகலம்' என்னும் சொல்லை யாம் தேடியபோது, அது சாமானிய அகராதிகளிற் காணப்பட்டிலது. சில புலவரைக் கேட்டபோது, தமக்குப் புலப்படவில்லை யெனப் புகன்றுவிட்டனர். யாழ்ப்பாணத்து நல்லூர்த் தோன்றிப் பற்பல சைவ நூல்களையும் இலக்கணவிலக்கிய தருக்க நூல்களையுஞ் செவ்விதிற் பதிப்பித்துதவிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் வெளியிட்ட வில்லி பாரதப் பதிப்பில் அடியிற் குறித்தவாறு அதற்குக் குறிப்புரை காணப்படுகிறது. அது வருமாறு:

‘பயந்தரு கோடிகூடப் பாகலந்தணிந்து, கயம் தெளிவுற்றதென்ன’ என்பதற்குப் பாலிலே நனைத்த கோடி வஸ்திரத்தைக் கழுத்திலே சுற்றப் பாகலமென்னும் மத நீர் மிகுதியான் வரும் மயக்க நோய் குறைந்து மெல்ல வாக யானையானது அறிவு தெளிந்தாற்போல எனப் பொருள் கொள்க. பயம்-பசும் பால், கோடி-புது வஸ்திரம், பாகலம்-யானைக்கு மதமிகுதி மயக்கத்தான் வரும் ஓர் நோய்’ என்பதே.

இனி இதன் உண்மைப் பொருளை விரிவாக வரைவாம்.

பாகல மென்பது யானை நோயின் பெயரென்று தமிழ் நிகண்டு பிங்கலந்தைகளாற் றெரிகிறது. அந்நோயின் வகைகளையும், அவற்றில் பரிகாரமில்லாத கூடபாகலமென்னுங் கொடிய பகுப்பின் தன்மையையும் அடியிற் காண்க.

உருத்திர மூர்த்தியின் கோபத்தினின்றுண்டான ஜ்வரம் யானையிடத்திற் காணும்பொழுது அதற்குப் பாகலமென்று பெயர்; இப்பெயர், பாகஞ் செய்வது (வேவிப்பது) என்னும் பொருளுடையது. இது-சுத்த பாகலம், பால பாகலம், பக்வல பாகலம், ம்ருதுக்ரஹ பாகலம், குக்குட பாகலம், சராங்க க்ரஹபாகலம், ப்ரசுப்தபாகலம், கூடபாகலம், புண்டரீகபாகலம், மகாபாகலம் எனப் பத்து வகைத்து. இது பொருந்ாதவையும், அளவுக்கு விஞ்சினவையுமாகிய உணவின் வகைகளாலாவது, ‘மிக்க சுமையைச் சுமத்தல், கடத்தற்கரியதைக் கடத்தல் என்னுமிவற்றாலாவது, உள்ளிருக்கும் வாயு, கெடுதல் பற்றி உளதாவது, (கூடம்-விரைவிற் கொல்லுதல்) இந்நோய், தொடக்கத்திலேயே யானையைக் கொல்லுதலால், கூடபாகல மெனப்படும். இதற்குப் பலபடியாகப் பொருள் கூறலும் உண்டு. அவை வருமாறு.

(கூடம்—கபடம்;) அதனால் (வெளித் தெரியாமலே) கொல்லும் பாகலம் கூடபாகலம் எனப்படும்

(கூடம்—வலை;) அது மிருகங்களைப் பிடித்துக் கொல்லுதல்போல, யானையைப் பிடித்துக் கொல்லுவதால் கூடபாகல மெனப்பட்டது.

(கூடம்—கூட்டம்) வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் மூன்றின் தோஷங்களும் சேர்ந்துண்டாக்கின பாகலம், கூடபாகலம் என்றாயிற்று என்பனவே.

இந்நோய் வந்த மாத்திரத்தில் கை, கால், கண், காது, வாய் என்னும் உறுப்புக்கள் தம்பித்து இடிவிழுந்தாற்போல யானை கீழ் விழுந்து இறந்துவிடுகிறது. மிக விரைவில் இறந்து விழுந்துவிடுவதனால், இதன் குறிகளை யறிதலரிது; கட்டுத் தறியிற் கட்டியிருக்கையிலும், நீர் பருகுகையிலும், நதி பயிலுகையிலும், நீராடுகையிலும், மற்றும் சில சமயங்களிலும் இந்நோய் யானைக்குத் திடுக்கென நேரிடும். இந்நோயால் இறந்துபட்ட யானையைச் சிற்றறிவினர் இலக்கணமின்மையால் விஷந் தீண்டியதென்பர். மற்றுஞ் சில பேதையர் பொய்யறிவால் பேய்பிடித்ததென்பர். அவற்றிற்கு அறிகுறியும் சிகிச்சையுமுண்டு; இதற்கோ அவையில்லை. (இது, வடமொழி யானை வைத்திய நூலிற் கண்டது. இன்னும் இதைப் பற்றி யெழுதத்தக்கவற்றை விரிவஞ்சி விடுத்தாம். அந்நூலில் ‘பாம்பும், நெருப்பும், இடியும்போலக் கொடிய இந்நோய்க்கு எப்பொழுதும் அஞ்சவேண்டும்’ என்று கூறியுள்ளதற் கேற்ப, இங்கே, ‘பயந்தரு’ என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது.

இது ஆச்சரியமான நோய் என்றற்கு, ‘கோடி’ என்ற அடை கொடுத்தார். கோடி யென்பது, புதுமையாதலை, ‘கோடி, எண், புதுமை, நுசாம்’



என்ற நிகண்டினாலும் அறிக. இதுவரையிற் கூறியதனால், ‘கூடபாகலந் தணிந்து மெல்லக் கயம் தெளிவுற்றது’ என்றது, ‘இப்பொருளுவமை’ யென்றே அறிக. ‘கோடி கூடப்பாகலம்’ என்றும் பாடமுண்டு. இதனால், அர்ச்சுனனது மூர்ச்சை மரணத்தோடு ஒத்திருந்ததென்பது புலப்படும். கயம்—கஜமென்ற வட சொல்லின் திரிபு. பயந்து அருகு ஓடி என்றல் சாலாது.

மாற்றி—மாற்ற, தணிந்து—தணிய; இரண்டும் செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்தன; (நன்-வினை 27.) பரிவோடு ஏந்தியதற்கு ஏற்ப, சரணம் அடைந்தவர்களைக் கைவிடாமற் காப்பவன் என்னும் பொருளமைந்த அச்சுதன்’ என்ற சொல்லைக் குறித்தார்.

## உணவைப்பற்றிய பிரச்சினை

எங்கும், புருஷர்களும் ஸ்திரீகளும், எந்த வஸ்துவினால் தங்கள் தேகம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறதென்று மும்முரமாய் விசாரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். “இன்றைக்கு நாம் உண்ணும் ஆகாரத்தினால் நாளைக்கு நமது க்ஷேமலாபம் தெரியவரும்” என்று அவர்கள் இப்போது அறிந்திருக்கிறார்கள்.

ஜலதோஷம், இன்புளுயன்ஸா முதலிய தொத்து வியாதிகள் எங்கும் பரவியிருக்க, விஷக்கிருமிகளை ஏமாற்றி வாழ முயல்வது கடினம். கூட்டத்தாரின் தேகங்களைப் பரிசோதித்துப் பார்த்ததில் ஆரோக்கியமுள்ள ஜனங்களில் 100-ல் 80 முதல் 90 நபர்கள் நிமோனியாக் கிருமிகளைத் தங்கள் வாயிலும் தொண்டையிலும் கொண்டு திரிகின்றனர் என்றும், அக்கிருமிகள் எப்போதும் நம்முடனே இருந்து வருகின்றன வென்றும் தெரியவருகிறது. அதே மாதிரி பரீக்ஷையினால், நமது குழந்தைகளுக்குள், 100-ல் 90 பேர்கள் 12-வது வயது வருவதற்கு முன்னமே காச நோய்க் கிருமிகளால் பீடிக்கப்பட்டிருக்கின்றன வென்றும், ஏதோ கொஞ்சம் பேர்களுக்குத்தான் அந்த வியாதி முற்றுகிறதென்றும் ஏற்படுகிறது.

ஏன் சில பேர்களுக்குமாத்திரம் தொத்து வியாதி பீடிக்கிறது? மற்ற பேர்களுக்கு ஏன் இல்லை? என்பது இப்போது ஒரு கேள்வி. பூலோகத்தில் மனிதன் வசிக்கக்கூடிய எல்லா விடங்களிலும் இந்த வியாதிகள் பரவக்கூடியன. வெகு உயரத்தில் மலைகளில் குடிசைகள் கட்டி வசித்தாலும், ஜனங்கள் நடவாத இடங்களில் கட்டப்பட்டுள்ள இடைகவர்களுடைய குடிசைகளாயிருந்தாலும் அவை நுழையாமல் விடுகிறதில்லை. ஆனால் இந்த வியாதிகள் நம்மை பீடிக்காமல் இருப்பதற்குக் காரணம் நாம் உண்ணும் ஆகாரத்தை வெகுவாய்ப் பொருந்தி நிற்கும். நமது தேகத்தை வலுவாய் வைத்துக்கொண்டு, வியாதியுடன் போராடினால், நமக்குத் தெரியாமலே நமக்கும் நமது சைன்னியத்திற்கும் மும்முரமான சண்டை நடந்து நமக்கு ஜெயம் உண்டாக்கலாம். இதற்குத்தான் ‘நோயை வரவொட்டாமல் எதிர்த்துத் தடுக்கும் சக்தி’ என்று சொல்வது. —(ஆ. நீ.)

# மரபுக் கொடுமை

(தென்னாப்பிரிகா-டர்பன், சால்வதி சபைத் தலைவர்
திரு. ச. முனிசாமி பிள்ளை)

மெல்லிய இலைகளை அசைத்து தென்றலை எங்கும் பரவச் செய்யும் தருக்களின் குளிர்ந்த நிழலின் கீழ் ஒரு மெல்லியள் அமர்ந்திருந்தாள். வாள் வாய்ப்பட்டு சாய்ந்த தருவினது அடிக்கட்டையில் ஆசனமிட்டு அருகே ஓங்கிநின்ற மரத்தின்மேல் தங்கி, அன்று மலர்ந்த மலர்களது இனிப்பை நுகர்ந்து இயற்கைக் காட்சியில் அவள் மயங்கி யிருந்தாள்.

அப்போது கொடியவரது உள்ளத்தைப் போன்று நெருங்கியவுடனே தீங்கைக் கொணரக் கூடிய நாகமொன்று தூர ஓசையிட்டு அம்மதன சுந்தரியை நோக்கி வந்துகொண்டிருந்தது. பாம்பினது நிலையையும், அப்பெண்மணி இயற்கை இனிப்பில் அழுந்தி யிருத்தலையும், வெகு தூரத்தேயே கண்ட ஒரு யுவன் தன் கைக்கெடியாரத்தை கண்ணுற்று ஓசை வந்த இடம் நோக்கி மெதுவாய் நடந்து சென்று சிறிது நேரத்தில் நாகத்தின் நாட்டம் ஓய்ந்துபோக விழச் செய்தான். அப்போதுதான் அந்நங்கையும் திடுக்கிட்டுத் திரும்பினாள். கண்கள் சந்தித்தன. கண்ணிரண்டும் நோக்கியதால் வாய்ச்சொற்கள் பயனற்றதுபோலும்! இளைஞன் சிந்தனையில் ஆழ்ந்து, தன் வழி நோக்கி மறைந்தான். இனிமை மலிந்து, பல நெடுங்காலம் பாதித்து வரும் எண்ணம் இருவர் உள்ளங்களிலும் ஊடுருவி ஊன்றி விதை விதைத்திட்டது இவ்வெண்ணத்தின் பலன் எவ்விதமாமோ? காலம் குறிப்பிடும்.

* * *

இச் சார்பில் எத்தனை நாள் சார்ந்திருக்கிறேன், ஆயினும், அச்சுந்தரனைக் கண்டேனில்லை. அவர் யார்? ஒரு நொடியில் என் உள்ளத்தைக் கவர்ந்து சென்றார். அவரது அமைதியான நோக்கமும்; வசீகரிக்கும் அழகு பொங்கிய பொலிவும், நடுத்தர உயரமும், சிறந்த அறிவாளிகளது சுருக்கம் நிறைந்த பரந்த நெற்றியும், கொஞ்சுகின்ற வாயும் என்னுள்ளத்தே அகலாது பதிந்தது. எனது மரபினராய் இருப்பின் நலம். தோற்றமும் அப்படியே, என்னுமோ? நமக்கு வந்துற்ற இடரை அகற்றி அதனைக் குறித்துச் சிறிதேனும் சிந்தியாது தன் வழி நோக்கினர். என்ன உதாரம்! தனிமையில் என்னைக் கண்டும் அலைபடாது அகன்றனர். இருப்பினும் இருவரது கண்கள் சந்தித்தபொழுது சற்று இவரது உள்ளம் உவந்ததின் அறிகுறி வதனத்தே வந்தது. இறைவா! காத்தருள்! எனத் தன்னுள் எண்ணி அச்சுந்தரி தன் மனை நோக்கிச் சென்றனள்.

* * *

என்னென்று சொல்வது இயற்கையின் இனிப்பை! அன்று ஹா! இவ்விடமே எனக்குப் புதிய உயிரைத் தந்தது. புதிய உணர்ச்சியை எழுப்



பியது; அந்தப் பாம்பை நினைக்கும்போதே மயிர்க்கூச் செரிகிறதே! அரை நொடியில் கொன்ற வீரன், என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட தீரன். ஐயோ! என் மரபினரல்லவாமே! மரபு! மரபு! மரபு!! என் செய்யும். அர்த்தமற்ற பொருள்! மனிதனுக்கு வேண்டுவது மரபா? அல்லது பெருந்தன்மையா? பெருந்தன்மையும், அறிவும், பொலிவும், பொறுமையும், ஆண் சிங்கம் போன்ற அஞ்சா நெஞ்சமும், அனைத்தையும் பெற்ற அவரை அடையவொட்டாமல் மரபு தடுக்கிறதே. மேலும் அவர் என் தந்தையின் விரோதிக்குத் தம்பி மகனும். அதனால் கூடாதாம். என்ன மூடத்தனம். என் தந்தைக்கு ஒருவர் விரோதியானால் அவரது தம்பியும் விரோதியா? தம்பிக்குப் பிறந்த தனயனும் விரோதியா? அவர்கள்தான் விரோதிகளென்றால் பின் சந்ததியார்களும் விரோதிகளாகவே யிருக்கவேண்டுமா? ஐயோ! என்ன வேற்றுமை! என்ன அறியாமை! இவ்வளவு வேற்றுமையுணர்ச்சியை, ஹே பாரத தேவி! உன்மக்கள் கொண்டுள்ளவரை உன் நிலைமை மாறுவதேது! எது எப்படியானால் என்ன? ஸ்திரீகளுக்குக் கற்பே தனம். கற்புள்ள மங்கையருக்குக் காதல் தோன்றுவது ஒருவரிடத்திலேயே. அவரிடத்துச் சென்ற உள்ளம் இனிப் பிரிந்து வேறிடம் பாயுமோ? என்ன மடமை நிறைந்தவர்களா யிருக்கின்றனர் என் பெற்றோர்கள். கொடுமை! கொடுமை!!

மதிவதனா, என் காதல்! என் அருகே வா. ஏன் அஞ்சுகிறாய். நம்மிடையே உள்ள பிரிவினைக் கடலை கடத்தற்கு அன்பென்னும் தோணி போதாவோ? மதிவதனா! மதிவதனா!! எனப் பலவாறு கூறி பெருமூச்சுடன் சுகுணவதி என்னும் நாமம் படைத்த அச்சுந்தரி மயக்குற்று சாய்ந்தாள்.

அப்போதுதான் தன்னை மறந்து அவ்வழி சென்ற மதிவதனன் யாரோ தன்னை அழைப்பதைக் கேட்க ஓசை வந்தவழி ஓடோடியும் வந்தான். அவனது உள்ளத்தைக் கவர்ந்த சுகுணவதி மயக்குற்றுக் கிடத்தலைக் கண்டு அருகே சென்று எடுத்துக் களையாற்றினான். அவள் விழித்தாள். தான் கோரியவர் தன்னருகே அமர்ந்திருத்தலைக் கண்டாள். அவர் பால் சாய்ந்து அணைந்து மறுபடியும் மயக்குற்றாள்.

என் செய்வான் மதிவதனன். அவன் மனம் துடித்தது. மார்பு படபடத்தது. அந்நிலையில் மங்கையை விடவும் மனமொப்பவில்லை. பிறர் நோக்கில் வரும் இடைஞ்சலையும் ஊகித்தான். அவளும் விழித்தாள். காதல! இப்பேதையினது உள்ளத்தைக் கவர்ந்த அன்ப! அஞ்சற்க! கடவுள்—பொய்மைப் பிரிவுகளால் நெருங்கப்படாத கடவுள்—காதலென்னும் பெருஞ் செல்வத்தை நமக்கு ஈந்த இறைவன்—அநாதரவு அடைந்தார்க்கு ஆதரவு கொடுக்கும் ஆண்டவன் நமக்குறும் இடையூறுகளை அகற்றுவன். உமது உளம் என்பால் உண்மையில் அடைந்ததா? இன்றேல் கூறுக. நெருப்பும் நெருப்பும் இணையும். நெருப்பும் நீரும் இணையுமா? பொய்மைப் பிரிவினைகளை நம்பற்க. உமது உள்ளத்தை எனக்கு விள்ளாக விளம்புக. எனது புண்ணை ஆற்றுக என வாய்விட்டு புலம்பினாள் சுகுணவதி.

செவி மடுத்த மதிவதனன் என்னென்பான். அவனது உள்ளக் கிடக்கை யார் அறிவார். தேன்பொழியும் அவளது இனிமையான சொற்களைக் கேட்டான். அவள் இந்நிலைக்கு வந்ததற்காய காரணத்தைத் தேர்ந்தான்.

அம்ம! மரபுக்கொடுமையால்—வேற்றுமைத் தீயால் தீண்டப்பட்ட யாம் என் செய்வோம். அஞ்சாது நின்று போராட ஆற்றல் உண்டெனின் இருவரது காதலும் பயன்தர பின்வாங்காது. பல நெடுங்காலம் சிறிய இன்பங்களை சற்று வெறுத்துத் துன்பத்திலேனும் நாம் நமது காதற் தீயை வளர்த்துவரின் யானும் சித்தமே. என் உள்ளத்தே எரியும் காதற் தீயை என்னென்று விளம்புவது. எனது காதலின் அறிகுறி இதுவே, என்று மதிவதனன் விளம்பி முகமெங்கும் முத்தமிட்டான். அதில் மயங்கி அவளும் கிடந்தாள். திடீரென யாரோ இரு பெண்மணிகள் அங்கு தோன்றி சுகுணவதியை எடுத்தேகினர். சுகுணவதியின் தந்தை அங்கு வந்த மதிவதனனை அவனது செய்கைக்குக் கடிந்து தூஷித்தனர். மண்ணோக்கி நின்றான் மதிவதனன்.

மறுபடியும் இருவருக்கும் கடிதப் போக்கு வரத்து ஏற்பட்டது. ஒருநாள் இருவரும் தங்கள் நகரினின்றும்—அவர்களை உலகத்தார் எவ்விடத்தும் இனி பார்க்கமுடியாதவிதமாய் அடியோடு மறைந்தனர். மதிவதனனும் சுகுணவதியும் வேறுலகில் மணாளனும மனைவியுமாக இருக்கச் சென்றுவிட்டனர் போலும்!

இருவரது பெற்றோர்களும் மக்களை இழந்தனர். தமிழுலகம் வீரப் புதல்வரையும் கற்புக்கரசியையும் இழந்தது. அந்தோ! கொடுமையின் முடிவு இதுவே. வேற்றுமை உணர்ச்சியின் இறுதி இதுவே.

## ஆரோக்கிய உயிரெழுத்துக்கள்

'அ' என்பது அறியாமை—அதை அறவொழிப்பதே சரியாமே.
'ஆ' என்பது ஆரோக்கியம்—அதை அடைவதே பெரும் பாக்கியம்.
'இ' என்பது இல்லறமாம்—இதுவே நமக்கேற்ற நல்லறமாம்.
'ஈ' என்பதோர் கொடும் பூச்சி—அதன் பேச்செடாதே சீச்சி! சீச்சி!!
'உ' என்பது உண்டி—அதை அதிகமா யுண்போன் ஓர் சண்டி.
'ஊ' என்பது ஊக்கம்—அஃதின்றேல் வரும் வீக்கம்.
'எ' என்பது நாம் துப்பும் எச்சில்—அதனால் தொத்தும் காசநோய்க் காய்ச்சல்.
'ஏ' என்பது ஏக்கம்—அது பிடித்தோர்க்கு வராது தூக்கம்.
'ஐ' என்பது ஐயம்—ஆரோக்கியத்திற்கு அது அழிவு செய்யும்.
'ஒ' என்பது ஒதுங்கு—தொத்துநோய் கண்டால் நீ பதுங்கு.
'ஓ' என்பது ஆரோக்கிய நூல் அதை நீ என்றும் ஓது.
'ஔ' என்பது நாம் நோய்க்கருந்தும் இயற்கை ஔடதங்கள்—வாயு, ஊண், வியாயாமம், நீர், ஒளி, நித்திரை இவ்வாறும், அவ்வரும் ஔடதங்களே.

# சீதையும், மாயத் தாதையும்

(தமிழ்ப்பண்டிதர். இ. சிவப்பிரகாசர்.)

இலங்கைமா நகர்க்குத் தலைவனாகிய இராவணன், தன் றம்பியாகிய கும்பகருணனைப் போர்க்கு அனுப்பி விட்டு, மந்திரவிருக்கையில் இனி தமர்ந்திருந்தான். அவ்வமயம் மோதரன் என்னும் பெயரிய ஓர் அரக்கன் அங்கு வந்தான். இராவணன், அவனைப் பார்த்து மோதர! சீதையை அடையும் ஓர் உபாயம் எனக்குக் கூறுதி என்றான். அதற்கு அவன், ஐயனே! மருத்தன் என்னும் அரக்கனை ஜனகன்போல் உருக்கொள்ளும்படி செய்து, அவனைக் கட்டிக்கொண்டுபோய் அச்சீதை முன்னர்த் துன்புறுத்தினால் அவள் பயந்து மணத்தொழில் புரிய இசைவள் என்று கூறினான். இராவணன் மிக்க களிப்புற்று, மோதரனைத் தழுவி, நீ அவ்வாறு இயற்றுதியென்று கூறி அனுப்பிவிட்டுச், சீதைபால் நண்ணித் தன் வேட்கையனைத்தையும் பலபடப் புகன்று அவள் கால்களில் வீழ்ந்து வணங்கினன்.

அப்பொழுது சீதை, தீக்கட் புலியைக்கண்ட மான்பிணைபோல் அஞ்சி, ஆக்கை நடுங்கி, உணர்வழிந்து, மாபாதக! பழி மிகு பாவம் இது என்று ஒன்றும் பார்க்கிலை. பகரத்தக்க மொழியிவை யல்ல என்பதும் உணர்கிலை. முறைமையும் நோக்காய். நின் வஞ்ச நெஞ்சமும் திறிகிலை. நீ மிகக் கொடிய பாதகனாக இருந்தும் நின் வஞ்சகச் சுற்றத்தாரோடு ஒருநாளும் அழிகிலை என்னால் என் கற்பும் அழகும் என்ன பயனுடைத்தாம் என்று, இன்னன துயர் மொழிகள் பல புகன்றாள்.

இம்மொழிகளைச் செவியேற்ற இராவணன் மிகுந்த கோபமுற்று, ஜானகி! யான் அயோத்தியர் குலத்தினர் அனைவரையும் பற்றிக் கொணர்திர் என்று அரக்கர்களை ஏவி யுள்ளேன். மேலும், நின் அருமைத் தந்தை ஜனகனையும் பிடித்துக்கொண்டு வரும்படி கட்டளை யிட்டுள்ளேன் என்று மிடுக்காகக் கூறினான். உடனே சீதை, மிகுந்த நடுக்கமுற்று நெஞ்சம் வெதும்பி, நெருப்பைத் தின்று தின்று உமிழ்கின்றவரைப்போல் துன்பக்கடலில் வீழ்ந்தனள். அக்காலை மோதரன் மருத்தன் என்பவனை ஜனகன்போல் உருக்கொள்ளும்படி செய்து, அவ்வரக்கனாகிய ஜனகன் வாய்திறந்து அரற்றக் கட்டி யிழுத்துக்கொண்டு வந்தான். சீதை, அவ்வரக்கனைத் தந்தையென்றே நினைத்துத், தாய்ப்பறவை நெருப்பில் வீழக்கண்ட குஞ்சுபோல் நினைத்துத், தாய்ப்பறவை நெருப்பில் வீழக்கண்ட குஞ்சுபோல் தரிக்காமல் கைகளை நெரித்தாள், கண்

னில் மோதினன், கால்கள் பதைத்தான், நெஞ்சம் துடித்தான், ஏங்கி, விம்மி னன், நிலத்தில் வீழ்ந்தான், அந்தோ அவன் அன்று பட்ட பாட்டினை யாரே யெடுத்துப் புகல வல்லார் ?

இவ்வாறு துன்பக்கடலில் வீழ்ந்து துறைகாணாது கலங்கும் சீதை, அம் மாயத்தந்தையைப் பார்த்து, எந்தையே ! இன்று என் பொருட்டாக இவ் விடர் நினக்கும் வந்ததே. என்னைப் பெற்று வளர்த்த தன்மை இஃதேயோ, இவ்வாறு நினக்கும் ஓர் இடர் வரும் என்று யான் கனவிலும் நினைத்திலேனே. வறியவர்க்கு இல்லை யென்னாது இட்டுண்டு பல வறங்கள் செய்த பெருந்தகை யாகிய நினக்கும், இவ்விடர் வந்ததென் கொல் ! முன்னை யூழின்வலியோ படைக்கலம் தாங்கிய காத்திரனாகிய வீரரோடு பொருது அவர் பகழி நின் மார்பிற்பாய அதனால் உயிர் துறந்தா யெனினும் பழியன்றே. அவ்வாறின்றி, வஞ்ச நெஞ்ச அரக்கர்களால் கட்டுண்டு பழி பெற்றாயே, இப்பழி யெய்துதற் குக் காரணம் பாவியாகிய என்னைப் பெற்றமை யன்றோ என்று பலவாறு புலம்பி யழுதாள்.

சீதை புலம்புவதைக்கண்ட இராவணன், ஜானகி ! அஞ்சற்க, நின்னைப் பெற வேண்டும் என்ற விருப்பானே இத்தீத் தொழில் புரிந்தேன், ஆயினும், மிதிலையில் வாழ்கின்ற நினது சுற்றத்தார் அனைவரையும் கொன்றிட நினை யேன்; அவர்களைக் கொன்றேனாயினும் நினது அருமைத் தந்தையாம் இவன் றன் ஆருயிரை உண்டிட எண்ணுவனோ, நீ மனமிசைந்து என் காதல் நோயைத் தணிப்பின், நின் தந்தைக்கு என் ஆட்சிக்குட்பட்ட உலக மனைத் தையும் ஒருங்கே வழங்கிப், பல்வளம் படைத்த இவ்விலங்கை நகரையும் கொடுத்து, வேறோரிடத்திலிருந்து வாழ்வேன். என்குல முதல்வன் எனக் குக் கொடுத்த பல வரங்களையும் இவனுக்கே கொடுப்பேன். தேவர் முதலிய யாவர்களும் இவன் ஏவல் வழி நிற்கும்படி செய்வேன் என்று பலவாறு மொழிந்தான்.

இவ்வாறு கூறுவதைக் கேட்ட சீதை, உள மிக வருந்திப் பற்பல மாற் றுரை புகன்றாள். இவ்விடத்தில் நமது கவியரசர் கம்பர், சீதை கூற்றாகக் கூறிய

"புன்மகன் கேட்டி கேட்டற்குரியது புகுந்த போரில்
உன் மகன் உயிரை யெம்மோய் சுமித்திரை யுய்யவீன்ற
நன்மகன் வாளிநக்க நாயவன் உடலை நக்க
என்மகன் இறந்தானென்ன நீ யெடுத்து ஏற்றல் என்றாள்."

என்னும் செய்யுள்கண்டு மகிழ்தற் குரியது. அடுகளத்தில் நின் மகனாகிய மேகநாதன், இலக்குவன் கணையால் உயிர் துறப்பன், அதனால் நீ என்மகன் இறந்தான் என்று அவனை யெடுத்து ஆற்றுவாய் என்பது இப்பாட்டின் கருத் தாகும். அக்கருத்தை நமது கவிவேந்தர் கம்பர், நின்மகன் உயிரை இலக்கு



வன் வாளி நக்க, நாய் அவன் உடலை நக்க, நீ என்மகன் இறந்தானென்று அவனை எடுத்து ஆற்றுவாய் என்று இகழ்ச்சிக் குறிப்போடு இணைத்துக் விக யியற்றிய திறம் மிகுந்த அழகுடைத்தாம்.

இராவணன் அவ்வுரைகளைக் கேட்டபொழுதே கடுங் கோபங்கொண்டு, கனலெழ விழித்துக், கைபல பிசைந்து, அக்கற்பின் கொழுந்தைக் கொல் வான் ஓடினன். அருகு நின்ற மகோதரன் தடுத்து, ஐய ! இவளைக் கொன்று என்பயன் ? இவள், தன் தந்தை வேண்டுதலால் இசைவள் என்று கூறித் தடுத்தான்.

அப்பொழுது தரைமிசை வீழ்ந்து கிடந்த அக்கொடியோன் எழுந்து, எனது அரிய புதல்வி ! நீ மனமிசைந்து என் சொற்படி கேட்டல் வேண்டும். யான் நின் பொருட்டாக இக்கொடிய துன்பத்திற் சிக்கலானேன். இராவணன் உன் மீது மிகுந்த மையல்கொண்டு வருந்துகின்றனன். அவனது வருத்தம் துடைப்பது நினது கடமை யாகும். இச் செயல் கற்புநெறி திறம்பியதாகும் என்று எண்ணற்க. பூவின் மீதிருந்த தெய்வத்தையனும் பொதுப் பெண்டிர் தன்மை யடைந்தனள் என்றால், வேறு எம்மகளிர்தான் கற்பு நெறி வழுவா தார் ? நீ என்னுரை கோடாது புறக்கணிப்பின் என்னையும் என் குலத்தோரை யும் கொன்றவள் நீயே யாவாய்; மிகுந்த துயர் விளைக்கும் இச் சிறை யிடைத் தேம்பி உயிர் விடுதல் நன்றோ; அன்றி அமரர்க்கும் அரசனாகிய இராவணன் றேவியாய் அமர்ந்திருத்தல் நன்றோ என்பதை, நீ நின் உணர்வால் ஆராய்ந்து அறிவாய் என்று கூறி அவன் மருங்கு வீழ்ந்தான்.

மாயத்தந்தை கூறிய இத்தீய மொழியைக் கேட்டபொழுதே பொற் புடைச் சீதை, உளம்பதைத்தாள். தன் கைகளால் செவிகளை அடைத்தாள். மிகுந்த கோபமுற்றாள். கூறத் தகாத இக்கொடிய புன்மாற்றத்தை இன் னுயிர் வாழ்க்கை பேணி எனது அருமைத் தந்தை கூறுவனோ! என்று எண்ணி னள். பின்னர் அவனைப் பார்த்து ஐய ! அறம், வழக்கு, ஒழுக்கம், வீரம், மெய்ம்மை முதலியவை அழியும்படி இப்புன்மாற்றம் கூறினாய், ஆராயுமிடத்து நீ எனது அருமைத் தந்தையாகிய ஜனகன்றானோ ? என்று வினவினள். கம் பர் இவ்விடத்தில் கூறிய சில செய்யுட்களில் நலங் கனிந்தொழுகும் இரண்டு செய்யுட்களைக் கீழே தருகிறேன்.

"நீயுநின் கிளையு மற்றிந் நெடுநில வரைப்பு நேரே
மாயினும் முறைமை குன்ற வாழ்வனோ வயிரத் திண்டோள்
ஆயிர நாமத் தாழி யரியினுக் கடிமை செய்வேன்
நாயினை நோக்கு வேனோ நாண் துறந்து ஆவி நச்சி."

"வரிசிலை ஒருவன் அல்லால் மைந்தர் என்மருங்கு வந்தார்
எரியிடை வீழ்ந்த விட்டில் அல்லரோ அரசுக் கேற்ற
அரியொடும் வாழ்ந்த பேடை அங்கணத் தழுக்குத் தின்னும்
நரியொடும் வாழ்வ துண்டோ நாயினுங் கடைப்பட் டோனே."

நாயினுங் கடையோய் ! நீயும் நினது சுற்றத்தாரும் இவ்வுலகும் அழிந்தாலும், முறைமை குன்ற யான் உயிர் வாழ்வனோ, புயவலி படைத்த அவ்விராமபிரா னுக்கு அடிமை செய்கின்ற யான், நாணம் விட்டு எனது உயிரை விரும்பி ஓர் நாயை நோக்குவேனோ, வரிசிலை யேந்திய அவ்வேத மூர்த்தியே யன்றி, ஏனைய

ஆடவர் யாவரேனும் என்மருங்கு வந்தால் எரியிடை வீழ்ந்த விட்டில் அல்லரோ, அரசக்கேற்ற ஓர் சிங்கத்தோடு வாழ்ந்த பேடை, அங்கணத்தின்கட் கிடக்கும் அழுக்கினைத் தின்னும் நரிபொடும் வாழ்வதுண்டோ என்று சீதை கூற்றாகப் பொருளமைத்துக் கவி யியற்றி, நமது கவியரசர் கம்பர் பெருமான்,

> "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
> உயிர் நீப்பர் மானம் வரின்."

என்பதை யுட்கொண்டு, வேறோர் துணையின்றி யிருந்தும் அஞ்சாது, மாற்றாரை புகன்ற சீதையின் கற்பொடு கலந்த அவ்வீர வுள்ளத்தை விளக்கிச் செல்லும் திறம் வியந்து பாராட்டற் பாலது.

சீதையின் வீரவுரை கேட்ட இராவணன், தன் சுரிகை வாளை உருவி இச்சனகனைக் கொல்கின்றேன் பார் என்று கூறினான். உடனே அருகிருந்த மகோதரன், தடுத்தான். அவ்வமயம், நின் தம்பி போர்க்களத்தில் இறந்து பட்டான் என்று தூதர்கள் ஓடிவந்து கூறினர். அப்பொழுது இராவணன், உயிரற்ற உடல் வீழ்வதேபோல் வீழ்ந்து மதிமயங்கி வாய்விட்டுக் கதறினன். பின்னர் அங்குள்ளோர் தேற்றத் தெளிந்து தேறித் தன் அரண்மனை அடைந்தான். மகோதரனும் சென்றான். அதன் பின்னர்ச் சீதை அங்கிருந்த திரிசடை என்னும் உத்தமியால் எல்லா விஷயமும் அறிந்து, ஐயமும் துன்பமும் அகற்றினள்.


## ஒரு சிறந்த நாவல் சஞ்சிகை

'மனமோகினி' என்னும் நமது இனிய நாவல் சஞ்சிகைக்கு இப்போது பிப்ரவரி முதல் பதின்மூன்றாவது ஆண்டு நடந்து வருகிறது. இதில் 'நாகபுரியின் நாகரிகம்' என்னும் புதிய நாவல் ஆரம்பிக்கப்பட்டு வெளியாகிவருகிறது. இந்நவீனகம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதமாகும். இதுவே ஆங்கில நாவலாசிரியாகிய ரெயினால்ட்ஸின் கடைசி கதையாகையால் மிக்க ருசிகரமாக இருக்கும். சுமார் நான்கு ரூபாய் விலையுள்ள நாவல் ஒரு வருஷத்தில் கிடைக்கும். பிரதி மாதமும் கிரௌன் 1-க்கு 16 சைசில் 80 பக்கங்கள் வெளியாகின்றன. இதன்,

வருஷ சந்தா ரூபா 2—8—0 தான்.
அன்னிய நாடுகளுக்கு ரூபா 3—0—0.
உடனே முன்பணம் அனுப்புங்கள்.

மானேஜர் :—'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.





# பிரம சூத்திரம்

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

இனி போதாயன விருத்திகாரரது இரண்டாவது ஆக்ஷேபம் மறுக்கப்படுகிறது. (இப்போதாயன முனிவர் பிரம சூத்திரத்திற்கு ஓர் விருத்தியுரை செய்திருக்கின்றார். அதனால் இவர் போதாயன விருத்திகாரர் என்று அழைக்கப்படுகின்றார்.)

(2) "வேதாந்த வாக்கியங்கள் உபாசனா விதிகளுக்கோ ஞானகிரியைகளுக்கோ விஷயமாக உள்ள வாக்கியங்களே யன்றி, கேவல வஸ்துவின் சொரூபத்தைக் கூறவந்தவைகளன்று; ஆதலின் உபாசனா விதி வாக்கியங்களே வேதத்தில் முக்கியமானவை; வேதாந்த வாக்கியம் முதலிய மற்ற வாக்கியங்கள் எல்லாம் அந்த உபாசனாவிதி வாக்கியங்களைச் சிறப்பிக்கும் வாக்கியங்களேயாகும்" என்னும் இரண்டாவது ஆக்ஷேபமும் சரியன்று. ஏனெனில், சுருதிகள், "பிரஹ்மம் காரிய காரணங்களுக்கு அன்னியமாயுள்ளது" "எந்த ஆத்மாவால் சர்வமும் அறியப்படுகின்றதோ, அந்த ஆத்மாவை எதனால் அறிந்து கொள்வது?" "எந்த ஆத்மாவை மனத்தால் அறிய முடியாதோ, எந்த ஆத்மாவால் மனம் அறியப்படுகின்றதோ, அந்த ஆத்மாவை பிரஹ்மமாக அறி"; 'எதனை உபாசிக்கின்றார்களோ அது ஆத்மாவன்று; அது சகுணப் பிரம்மம். இதுவோ நிர்க்குணம்". "பிரம்மம் மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதது என்று ஞானிகள் அறிந்திருக்கின்றார்கள்; ஆனால் அஞ்ஞானிகளோ மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டுவது என்று எண்ணுகின்றார்கள்" என்று இவ்வாறு சொல்லுகின்றன. ஆதலால், பிரஹ்மம் உபாசனைக்கோ ஞானகிரியைக்கோ விஷயமாக இருப்பதன்று என்பது நன்கு அறியப்படுகின்றது.

"பிரம்மம் மனோவாக்குகளுக்கு எட்டாதது" என்பதனால் "சாஸ்திரயோநித்வாத்" என்று முன்னே சொல்லப்பட்டுள்ள சூத்திரத்திற்கு விரோதமுண்டாகாதோ?" எனின், உண்டாகாது. எப்படியெனில், சாஸ்திரமானது அஞ்ஞானத்தால் உண்டான (அவித்யாகற்பிதமான) பேதபுத்தியை நீக்குவதற்காக உண்டானதே தவிர, "பிரம்மம் இது" என்று காட்டுவதற்காக வரவில்லை. அன்றியும் அந்த சாஸ்திரம் "பிரம்மமே ஜீவாத்மாவின் சொரூபமாகி மனோவாக்குகளுக்கு எட்டாததா யிருக்கின்றது" என்று போதிக்கின்றது. "அஞ்ஞான கற்பித பேதத்தை நிவர்த்திப்பதற்காக சாஸ்திரம் தோன்றினும், நிவர்த்தியானது மனம் வாக்கு காயம் என்பவற்றுள் ஏதேனும் ஒன்றினின்றே உண்டாவதா யிருத்தலால் அதனால் உண்டாகும் மோக்ஷத்திற்கும்

அநித்தியத்வ தோஷம் உண்டாகாதோ?" எனின்: உண்டாகாது. ஏனெனில் அந்த நிவர்த்தியானது, நித்திய முக்தமாகவுள்ள ஆன்ம சொரூபத்தை காட்டுகிறதே யன்றி மோக்ஷத்தைப் புதிதாக உண்டாக்கவில்லை; ஆகலின், நிவர்த்தி மனம் முதலியவற்றுள் ஒன்றின் காரியமா யிருப்பினும் அதன் வாயிலாக உண்டாகும் மோக்ஷத்திற்கு அநித்தியத்வ தோஷம் உண்டாகாது என்று அறிக.

அழுக்குப்படிந்துள்ள ஒரு கண்ணாடியைத் துடைத்தால் அது அழுக்கு நீங்கி பரிசுத்தமானதாகின்றது. இதில், துடைத்தல் கிரியை. அந்த கிரியையால் கண்ணாடியில் படிந்துள்ள அழுக்கு நீங்குகின்றது. அழுக்கு நீங்கவே கண்ணாடி பரிசுத்தமடைகின்றது. அதுபோல அனாதியாகிய அவித்தையால் ஆன்மா மறைபட்டுள்ளது. அந்த அவித்தையாகிய மலம் உபாசனையால் நீங்குகின்றது. இதில் உபாசனை கிரியை. ஆகவே, இந்த உபாசனையாகிய கிரியையா(கர்மத்தா)ல் ஆன்மாவை மறைத்துள்ள அவித்தை நீங்குகின்றது. அது நீங்கவே ஆத்ம பிரகாசம் விளங்குகின்றது என்று சொல்லலாகாதோ? எனின்; இதுவும் யுக்தமல்ல. ஏனெனில்,

உபாசனையாகிற கிரியையால் நாசமாவதாகச் சொல்லும் ஆத்ம மலமாகிய அவித்தை கற்பிதமா? சத்தியமா? கற்பிதம் என்றால், கற்பிதம் கிரியையால் கெடாது. ஞானத்தால் மாத்திரமே கெடும். (கயிற்றினிடத்து கற்பிதமாயுள்ள பாம்பு தடியாலடித்தலாகிய கிரியையால் மாயாது; விளக்கொளியால் பார்த்தபோது 'இது பழுதை' என்று உண்டாகும் ஞானத்தால் மாத்திரமே கெடும்.) அவித்தை கற்பிதமல்ல; சத்தியமே எனின்; அதுவும் சரியன்று. ஏனெனில், ஆத்மாவிடத்து அவித்தையாகிய மலம் சத்தியமானால், அந்த மலத்தைப்போக்கும் கிரியை ஆத்மாவினிடத்துள்ளதா? வேறொன்றினிடத்துள்ளதா? என்னும் கேள்வி யுண்டாகின்றது. ஆத்மாவினிடத்துள்ளது என்றால், அப்போது ஆத்மாவிற்கு விகாரத்தன்மை யடைதலாகிய தோஷம் உண்டாகும். எப்படியெனில், கிரியை ஆத்மாவினிடத்துள்ளது என்னும் பொழுது, ஆத்மா கிரியையை ஆசிரயித்திருக்கிறது என்று சொல்லவேண்டும். ஏனெனில், கிரியையானது தன்னையுடைய கர்த்தாவை வேறு தர்மத்தை ஆசிரயிப்பவனாகச் செய்யாவிடில் அது கிரியையாகாது. (பாலினிடத்து நிகழும் கிரியையானது அப்பாலை வேறு பொருளாகிய தயிரின் தர்மத்தை (தன்மையை) அடையும்படி செய்தே தீருமல்லவா? அப்படிச் செய்யாவிடில் கிரியை யிருப்பதாகச் சொல்லமுடியாது.) அப்படியே ஆத்மாவினிடத்து கிரியை இருந்தால் அந்த கிரியையானது ஆத்மாவை வேறொன்றின் தருமத்தை அடையும்படி செய்யும். அப்படி வேறு தர்மத்தையடைவதே விகாரமெனப்படும். ஆகவே, ஆத்மாவிற்கு விகாரத்துவ தோஷம் உண்டாகும். இது "அந்த ஆத்மா விகாரமில்லாதது, களங்கமில்லாதது, கிரியை இல்லாதது, சாந்தமாயிருப்பது" என்ற சுருதி வாக்கியத்திற்கு விரோதமல்லவா?

மேலே கூறிய கண்ணாடி திருஷ்டாந்தம் சரியல்ல. ஏனெனில், கண்ணாடியானது நீளம் அகலம் கனம் முதலிய அவயவங்களை யுடையது; திருசியமானது (பார்க்கத்தகுந்தது.) ஆதலால், அது துடைத்தல் முதலிய கிரியைகளால் பரிசுத்தமாகும் என்பது சரி. ஆனால் ஆத்மாவோ அப்படியல்ல. ஆகவே, அது கிரியையால் பரிசுத்தமாகும் என்பது சரியல்ல. பிரம்மபாவமே மோக்ஷம். ஆதலின் அது ஞானத்தால்மாத்திரம் அடையப்படுவதாகும்.



"மோக்ஷத்திற்குச் சாதனம் ஞானமே என்பது சரியே. ஆயினும் அந்த ஞானம் மனத்தின் கிரியையேயல்லவா? அவ்வாறிருக்க மோக்ஷம் கிரியையால் அடையப்படுவதல்ல என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?" என்று ஓர் ஆக்ஷேபம் உண்டாகலாம். ஆனால், இந்த ஆக்ஷேபம் சரியாகாது. ஏனெனில், தியானத்திற்கும ஞானத்திற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. எவ்வாறெனில், தியானம்:—ஒரு வஸ்துவின் சொரூபத்தை அபேக்ஷிக்காமல் மனிதருடைய சித்தத்தின் காரியமாயிருப்பது தியானம். அன்றியும், நூல்களால் கேட்கப்படும் தேவர்கள் தியானம் செய்வோர்களின் பிரியப்படி பாவிக்கப்படுவார்கள். (உதாரணமாக முருகனைப்பற்றிக் கூறும் நூல்களை வாசிக்கும் பலர் முருகனைத் தியானிக்க விரும்புகின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். நூல்களோ முருகன் உருவத்தைப் பற்றிப் பலவாறு கூறுகின்றன. தற்காலத்தில் முருகன் படங்கள் எல்லாம் ஒரே வடிவமாக இருக்கின்றதில்லையே. கோவில்களிலும் அப்படியே ஓரிடத்தில் வெறும் கோவணம் மாத்திரம் கட்டிகொண்டு கையில் தடிபிடித்த விதமாக ஒரு உருவம் இருக்கும். ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் தோளும் அழகான ஆபரணம் அணிந்த மார்புமாக ஒருருவம், மற்றொருருவம் ஒரு முகத்துடன் இருக்கும். இவ்வுருவங்களில் ஒருவனுக்கு ஆண்டி உருவத்தின் மேல் பிரியமாயிருக்கும். மற்றொருவனுக்கு ஆறுமுக வடிவம் பிரியமுள்ளதாக இருக்கும். இவ்வாறே மற்றத் தேவர்களும் பல்வேறு வடிவமுள்ளவர்களாகப் பாவிக்கப்படுவர்.)

ஞானம்:—ஞானம் அப்படிப் பல வேறு வடிவங்களாகத் தியானிக்கப் படத் தக்கதல்ல. அது பிரமாணஜன்யம், அதாவது பிரமாணத்தால் பெறப்படுவது. 'வெவ்வேறு வகைப்பட்ட பின்னம் பின்னமான அபிப்பிராயங்களுக்கு இடமில்லாததும் சித்தவஸ்து (முன்னமே இருப்பது) வை விஷயமாக உடையதும் எதுவோ, அது பிரமாண' மெனப்படுகின்றது. (திருஷ்டாந்தமாக ஓர் மரத்தை எடுத்துக்கொள்வோம். அந்த மரத்தின் விஷயமாக யாவர்க்கும் ஒரேவித அபிப்பிராயம் "இது மரம்" என்று உண்டாகுமே தவிர 'இது மரமல்ல; மாடு' என்று ஒருவரும் சொல்லார். ஆகவே, பின்ன அபிப்பிராயமில்லை. தவிர, அது முன்னாடியே அமைந்துள்ள வஸ்து. ஆகவே, அந்த மரம் சித்த வஸ்து; அதன் சம்பந்தமான ஞானம் பின்ன அபிப்பிராயத்திற்கு இடமில்லாத ஞானம்.)

அதுபோலவே, பிரம்மம் சித்தவஸ்து. (அதன் சம்பந்தமான ஞானம் பின்ன அபிப்பிராயத்திற்கு இட மில்லாத ஞானம்.) ஆதலால், ஞானமானது மானஸமா யிருந்தாலும், அதற்கும் மானத கிரியைக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. எனவே, கிரியையானது புருஷனுடைய சித்தவிருத்தியைச் சேர்ந்தது; ஞானமானது வஸ்துவின் அதீனமாகவுள்ளது என்று அறிக. தவிர,

சுருதி வாக்கியங்கள் விதிவாக்கியங்களல்ல. இயல்பாக விஷயங்களினிடத் துண்டாகும் பிரவிருத்தியிலிருந்து புருஷர்களுக்கு வேறுபடும் நிலையை யுண்டாக்குவதே அந்த வாக்கியங்களின் பயனாக இருக்கின்றது. அதாவது விஷய இச்சைகளில் பிரவிர்த்திக்காமல் தடுக்கின்றன. அவ்வாறு பிரவிர்த்தியினின்றும் தடுக்கப்பட்டு ஆத்மாவை அறிய விரும்புகிறவனுக்கு,

"இதம் ஸர்வம் யதய மாத்மா."

"அய மாத்மா பிரஹ்மம்."

"இந்த எல்லாம் ஆத்மசொருபமே, என்னுடைய ஆத்மா பிரம்ம சொருபமாயுள்ளது" என்னும் வேதவாக்கியங்கள் ஆத்ம தத்துவத்தைப் போதிக்கின்றன. அந்த ஆத்மஞானத்தைப் பெற்றவனுக்கு, அது வரையில் தான் கொண்டிருந்த "நானே எல்லாவற்றிற்கும் கர்த்தா, நானே எல்லாவற்றையும் அனுபவிப்பவன்" என்னும் எண்ணம் ஒழிகின்றது. அவன் கிருதார்த்தனாகின்றான்.

"விஜாதா ரமரே கேன விஜாநீயாத்."

(இ-ள்.) "அறிபவனை எதனால் அறியலாம்."

"யத்ரத்வஸ்ய ஸர்வம் ஆத்மைவாபூத் தத்கேநகம் பஸ்யேத்."

(இ-ள்.) எதனால், அறிபவனுக்கு எல்லாம் ஆத்மா என்னும் எண்ணம் உண்டாகின்றதோ, அப்பொழுது எவனால் யாரை அறிய முடியும்?

என்று சுருதிகள் சொல்லுவதால், வேதாந்தமானது உபாசனா விதிவாக்கியங்களைச் சிறப்பிக்க வந்ததென்று கூறும் பூர்வ பக்ஷியின் வாதம் சரியன்று. ஞானத்திற்குப் பின்பு செய்யவேண்டிய கர்மம் ஒன்றுமில்லை என்பது மேற்கூறிய விஷயத்தில் விளங்குகின்றதல்லவா?

(3) "கயிற்றைக்கண்டு இது பாம்பு என மருண்ட ஒருவனுக்கு "அது கயிறு; பாம்பல்ல" என்று மற்றொருவன் சொன்னவுடன், அந்த (கயிற்றின்) வஸ்துவின் பெயரைக் கேட்டமாத்திரத்தில் அவனுடைய மருட்சி (பிராந்தி) நீங்கி விடுகிறது. அதுபோல, "தத்வமசி" (நீ அது (பிரம்மம்) ஆகிறாய்) என்று உபதேசித்த மாத்திரத்திலேயே ஒருவனுடைய ஜீவத்தன்மையாகிற பிராந்தி போவதில்லை. ஆதலால், பிரம்மோபதேசத்தினால் ஒரு பயனும் உண்டாகிறதில்லை" என்னும் மூன்றாவது ஆக்ஷேபமும் சரியன்று. ஏனெனில், பிரம்ம ஆத்மபாப உபதேச மாத்திரத்தால் ஒருவனுக்கு சம்சார நிவர்த்தி உண்டாகாவிட்டாலும் பிரஹ்ம ஆத்ம சாக்ஷாத்காரத்தால் சம்சார நிவர்த்தி உண்டாகாமற் போதலில்லை. அந்த சாக்ஷாத்காரம் உண்டானவுடனே அவனிடம் அது வரையிலிருந்த தேகாபிமானம் நீங்குகிறது, அவன் ஜீவன் முக்தனுமாகிறான்; சுகதுக்கங்களுக்குத் தேகாபிமானமே காரணமா யிருந்ததால், ஆத்மசாக்ஷாத்காரத்தினால் தேகாபிமானம் நீங்கினவுடன் தேகியை சுகதுக்கங்கள் சேர்வதில்லை. தனத்தினிடத்தில் அபிமானமுள்ள ஒருவன் அந்த தனம் நசித்தால் துக்கமும் லாபமானால் சந்தோஷமும் அடைவானே யன்றி, தனாபிமான மில்லாத ஒருவன் அவ்வாறு தனநாசத்தால் துக்கமும் தனலாபத்தால் சந்தோஷமும் அடையமாட்டான். ஜீவன் முக்தனது நிலையைச் சுருதியானது,

"பாம்பானது தனது உடல் போர்வையாக விருந்த தோல் உரிக்கப்பட்டுப் போனபிறகு அதனிடத்து அபேக்ஷை கொள்ளாதிருத்தல்போல், ஜீவன் முக்தனும் சரீரத்தினிடத்து அபிமான மற்றவனா யிருக்கிறான்" (பிருகதாரணிய கோபநிஷத்து)

"கண்களிருந்தும் இல்லாதவன் போலவும், காதிருந்தும் இல்லாதவன் போலவும், வாக்கு இருந்தும் இல்லாதவன் போலவும், மனம் இருந்தும் இல்லாதவன் போலவும், பிராணன் இருந்தும் இல்லாதவன் போலவும் இருக்கிறான்."

"அவன் பிராண னுள்ளவனா யிருந்தாலும் சரீரத்தி னிடத்தில் அபிமான



மற்றவனும் அமிர்தனும் இருக்கிறான். ஆதலால் பிரஹ்மமா யிருக்கிறான்." என்று கூறுகின்றது; சரீரத்தி னிடத்து அபிமான மில்லாதிருக்கும் நிலையே சரீரமற்ற நிலையாகும். சிலர், சரீரம் விழுந்து போதலே சரீரமற்ற நிலை' என்பார்கள். அது சரியன்று. ஆகவே, பிரம்ம சாக்ஷாத்காரத்தைத் திடமா யடைந்த பிறகும், ஒருவனுக்கு முன்போலவே சம்சாரித் தன்மை இருக்குமென்பது சரியன்று.

மேலும், "சிரவணத்திற்குப் பிறகு மனனமும் நிதித்தியாசனமும் வேண்டும் என்று கூறப்பட்டிருத்தலால், சிரவணத்தால் மாத்திரம் சம்சார பிராந்தி நிவாரணமாகாது என்பது விளங்குதலால் பிரம்மோபதேசத்தால் (சிரவணத்தால்) பிரயோஜனமில்லை" என்று பூர்வபக்ஷி கூறுவதும் பொருந்தாது. ஏனெனில்,

சிரவணத்திற்குப் பின் மனன நிதித்யாசனங்கள் சொல்லப்பட்டிருந்தாலும், பிரம்மத்தை அறிவதற்கு அவைகளும் அவசியமானவை என்பது கருத்தல்ல. சிரவணம் (கேட்டல்), மனனம் (சிந்தித்தல்), நிதித்யாசனம் (தெளிதல்) என்னும் இம்மூன்றில் தனித்தனி ஒவ்வொன்றே பிரம்மத்தை அறிவிக்கும். சிரவணத்தைப் போலவே மனன நிதித்தியாசனங்களும் கூட பிரம்மத்தை அறிவதற்குச் சாதனமாகலாம். ஆகவே சரீராபிமானத்தை விடுவதே அசரீரத்தன்மை எனவும் சரீராபிமானங்கொண்டிருத்தலே சரீரத்தன்மை எனவும் ஏற்படுகின்றது.

"ஆத்மாவாகிய நான் சரீரமுடையவனா யிருக்கிறேன்; எனக்குச் சரீரம் உண்டு; இது என்னுடைய சரீரம்" என்று பாவித்து அபிமானங்கொண்டிருத்தலே சரீராபிமானம் என்றும், சரீரத்தன்மை என்றும் சொல்லப்படும். "நான் சரீரமுடையவனல்ல. எனக்குச் சரீரமில்லை. இது என்னுடையதல்ல" என்று பாவித்து அபிமானமற்றிருத்தலே சரீராபிமானராசித்யம் என்றும் அசரீரத்துவம் என்றும் சொல்லப்படும். இவ்விரண்டில் சரீரத்துவம் அசத்தியம்(பொய்). அசரீரத்துவம் சத்தியம். ஏனெனில் ஆத்மா அசரீரி யாதலின்.) அசரீரத்துவம் நித்தியமாதலின் அது கர்மத்தின் காரியமாக உண்டானது. (கர்மஜந்யம்) என்று சொல்ல முடியாது. ஆனால் சரீரத் தன்மை கர்மத்தால் உண்டானதன்றோ? என்றால் சரீரத்தன்மையும் கர்மத்தால் உண்டானதல்ல. ஏனெனில் மித்தியா ஞானத்தால் ஆத்மாவிற்கு சரீரத்தன்மை உண்டானதே யன்றி அது வாஸ்தவமல்ல; ஆகலின் அது கர்மஜந்யமல்ல என்பது நிச்சயமாம்.

ஒருவேளை புண்ணிய பாவ கர்மங்களாகிய இரு வினைகளால் சரீரம் உண்டாயிற்றல்லவா? என்றால்; அதுவும் சரியன்று. ஏன் எனில் இதற்கு சரீரம் தோன்றின பிறகே அல்லவா புண்ணிய பாவங்கள் செய்யப்படும்? சரீரமே இல்லாதபோது புண்ணிய பாவங்கள் எப்படிச் செய்வது? என்னும் கேள்வி பிறக்கும் இதனைக் குறித்து யோசிக்கும்போது, கர்ம மில்லாவிட்டால் சரீரம் ஏன் உண்டாகவேண்டும்? என்று கேள்வியும் உடனே பிறக்கிறது. இக் கேள்விகளுக்கு விடை கூறுவது துர்லபம். அப்படிக் கூறினால் அன்னியோன்னிய ஆசிரயதோஷம் சம்பவிக்கும்.

(அன்னியோன்னிய ஆசிரய தோஷம்—இரண்டு பொருள்கள் ஒன்றற்கொன்று ஆதாரமா யிருக்கும் என்னும் தோஷம். உதாரணமாக ஒரு பிரயாணி வழியில் தான் உட்கார்ந்த ஓரிடத்தில் ஒரு பொருளை வைத்துச் சென்

ருன். "அப் பொருளை எங்கே வைத்தாய்" என்று வேறொருவன் கேட்டால் "உட்கார்ந்த இடத்தில் வைத்தேன்" என்றும், "எங்கே உட்கார்ந்தாய்?" என்றால் "பொருளை வைத்த இடத்தில் உட்கார்ந்தேன்" என்றும் விடை கூறுவது போன்றது இந்த அன்னியோன்னிய ஆசிரய தோஷம் "உடல் எதனால் உண்டாயிற்று?" என்றால், "மனம் வாக்கு காயங்களால் உண்டாயிற்று" என்போம். ஆகவே, வினையால் உடல் வந்தது; உடலால் வினை வந்தது என்று திருப்பித் திருப்பி அவற்றையே சொல்லவேண்டுமே தவிர, ஏதேனும் ஒன்றையொன்று பற்றி நிற்பதாகக் கூறுவது ஒரு வகைத் தோஷம். அதைத் தான் அன்னியோன்னியாசிரய தோஷம் என்று கூறுவர் பெரியார்.)

ஆதலால், இந்த தோஷம் உண்டாகாமலிருப்பதற்காக புண்ணிய பாவங்கள் ஆத்மாவின் காரியமென்றும், அந்த காரியத்தால் சரீரம் உண்டாயிற்று என்றும் கூறினால் சரியாய்ப் போய்விடுமே; அன்னியோன்னியாசிரய தோஷமும் சம்பவிக்காதே என்றால், அப்போது ஆத்மாவிற்குக் கிரியாசிரயத்துவ தோஷம் (ஆத்மா கிரியை யுடையது என்னும் குற்றம்) உண்டாகும். உண்டாகட்டுமே என்றால் ஆத்மா "நிஷ்களம் நிஷ்கிரியம் சாந்தம்" என்று கூறும் சுருதிக்கு விரோதமாகின்றது. ஆகலின், அவ்வாறு கூறுதல் கூடாது. ஆதலால் ஆத்மாவிற்கு சரீரத் தன்மை மித்தியா ஞானத்தால் உண்டாயிற்றே யன்றி, உண்மையில் இல்லை. ஜீவனுக்கு உலகத்தில் காணப்படும் கர்த்திருத்துவ போக்திருத்துவத் தன்மைகள் (நான் கர்த்தா=நான் செய்கிறவன், நான் போக்தா=நான் போகத்தை அனுபவிக்கிறவன் என்னும் தன்மைகள்) அத்தியாச (கற்பித)மே யன்றி பாரமார்த்திகம் (உண்மை) அல்ல. அது பிரம்ம சாக்ஷாத்காரமானவுடனே இல்லாமல் போய்விடும்.

ஆதலால், வேதாந்த சாஸ்திரமானது உபாசனா விதிகளைச் சிறப்பிக்க வந்ததல்ல வென்பதும், பிரம்மம் சாஸ்திர பிரமாண முடையதென்பதும் பெறப்படுகின்றது. ஆகவே, பூர்வபக்ஷியின் ஆக்ஷேபங்கள் சரியன்று.

எழுத்தாளர்கள் தேவை.

[illegible] 'ஆனந்தபோதினி' [illegible] தேவை. [illegible] விரும்புவோர் [illegible] தெரிந்து [illegible]. நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் [illegible] கிடைக்கும்.

மானேஜர்.

# தமிழோம்பல்.

(கோட்டாறு. K. C. தாணு.)

யாங்கண்ட மொழிகளிலே தமிழ்மொழிபோ
 லிழுவுறுநல் மொழியே தில்லை;
பாமரரும் மேல்நாட்டிற் பணிவோடு
 தாய்மொழிக்கே பணிசெய் கின்றார்.
நாமமது தமிழரெனத் தான்கொண்டும்
 நாம்வாளா வாழா நின்றோம்;
தேமதுரத் தமிழன்றித் தெவிட்டாத
 கருவூலம் தெரியிற் கூறீர்?

கம்பரொடு வள்ளுவனா திபல
 கலையறிஞர் களித்து போற்றி
இம்பரிடை யெழிலளித்த எழில்தாய்நம்
 மாவின்று இளைத்தல் நன்றோ?
அம்புவியி னோடெழுந்து அனைத்துலகம்
 பார்த்தொளிர்ந்த அன்னையன் றோ?
*உம்பர்மொழி யொழிந்ததுபோ லிஃதொழியக்
 கண்டுறங்க லுயர்மை யேயோ?

தாயினும் பசிக்கொடுமை தாங்கண்டுந்
 தானமதே பெரிதென் றெண்ணி
காய்கனியா முணவெல்லாங் கண்டவர்க்கே
 கனிந்தளித்தல் கருணை யேயோ!
தாய்மொழிநற் றமிழன்றோ தனிப்பெருமை
 யினதன்றோ தமிழ்நாட் டுள்ளீர்!
வாய்மையுற நந்தமிழை வளம்பெறவே
 ஓம்புதல்நல் வாழ்வு தானே.

*உம்பர் மொழி—வடமொழி.

தமிழன்பர் மாநாடு கூட்டுவித்தோம்
தாளில்பல வரைத லுற்றோம்;
அமிழ்தத்து மினியதருந் தமிழென்றே
அனைவர்முனு மறைத லுற்றோம்;
குமிழ்நீர்போற் கூறியவை கூறியவக்
கணத்தனிலே குறைந்திற் றன்றில்
தமிழ்வளர்ச்சித் தீர்மானந் தானவே
யாவதன்றி தருவ தென்னே!

பிறநாட்டில் நல்லறிஞர் சாத்திரங்கள்
பெருமைமிகு நன்னூ லெல்லாம்
குறைவிலைக்குக் கொடுப்பதினாற் குறைவின்றி
யம்மொழிகள் கோலம் பெற்ற
திறஞ்சான்ற நீத்தமிழ்நூல் நிராத
பெருவிலைக்குத் தெரிந்தும் விற்றே
யறவோரும் வாழ்வுனுற்றின் அவைகற்கு
மான்குறைத லறிந்த ஒன்றே.

எம்மொழியு மிக்காளில் எழிலுற்றே
யிலக்குறக்கண் கண்ட பின்னும்
நம்மொழிக்கும் நல்லணிகள் நனிபுனைந்து
நலங்காணா திருத்தல் நன்றோ?
செம்மையுற மேனாட்டோர் சீர்மைமிகு
நூல்களிதில் அமைக்கப் பெற்றால்
நன்மையதே யெய்திதமிழ் நாளுக்கு
நாண்மேன்மை யெய்து மன்றே.

வீதிதொறுஞ் செந்தமிழ்நூல் நிலையங்கள்
வீதிமுறையே யமைத்தல் வேண்டும்;
ஆதிநாட் போந்தாற்போ லாரம்ப
பள்ளிபல வாக்கல் வேண்டும்;
கோதில்லா அறிவெய்தி கோதையருங்
கொழுநரொடு கொழித்து வாழ
ஆதியிலே யிவையனைத்து மமைப்புறுத
லவசியமே யாகு மன்றே.

(தொடரும்)

# இலக்கிய இலக்கணம்

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.

புலவன் ஓர் உலக அறிஞன்; தனது காட்சிக்கெட்டும் பொருள்களினுணுகி யொழுகும் அழகையும் இன்பத்தையும் அவற்றோடு உள்ளம் சார்த்தி நன்கு ஆராய்ந்துணரும் பெற்றியன்; எப்பொருளைக் காணினும் அதனைத்தான் அதற்குத் தக்க பொறியுணர்ச்சியொடு நுகரும் இயல்பினன்; தான் பெற்றதோ ரின்பத்தைப் பிறர்க்குப் புகுத்தும் விருப்பினன்; இன்பப்பயிர் வளரும் கவினிய உள்ளக் கழனியன்; அறிவான் வாழுநன்; அறிவினை வழங்குநன்; தெளிந்த தூய உள்ளத்தன்; இன்ப வாழ்வினன்.

புலனுடைய கண்ணும் மனமும் எப்போழ்தும் ஆராயும் இயல்புடையன. ஏனைமக்கள் பொருள்களைக் காண்பதுபோலப் புலவன் காண்பதின்று. அதனினும் சிறப்ப உண்மை முற்றும் விளங்கும்படி காண்கின்றனன் புலவன். அவனது ஆராய்ச்சியும் அத்தகைத்து. புல்லிது எனப் பிறர் கருதும் பொருளும் புலவனுக்கு நல்லதாம். அப்பொருளை இயற்கையின்பத்தையும் சிறந்த நீதியையும் புகட்டுதற்குப் பயன்படும், புலவற்கு. 'கண்டது கற்கப் பண்டிதனாவன்' என்னும் பழமொழி புலவனுக் கேற்கும். பிறர் கருத்திற்கு உவமைப்பயன்படவாராத குன்றிமணியும்.

'குன்றியேய்க்கு முடுக்கை'—குறுந்தொகை—என ஆடையின் நிறத்தையும்,

'புறங்குன்றி கண்டனையரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து'—திருக்குறள்.

எனச் சிலரது உள்ளப்பான்மையையும் இனிது காட்டுதற் பொருட்டுப் புலவர்க்குப் பயன்பட்டது. வைக்கோலும்,

'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'————திருக்குறள்.

எனச் சிறந்ததொரு உவமையின்முறை காட்டுதற்குப் பயனாயிற்று. கூழும், 'ஆழுமனையிற் சிறு கூழென விப்பொழு தாகாதோ'—நம்பி என மாற்றார் படையழிவை உவமை முகத்தான் தெளித்தற்குப் பயனாயிற்று. புலவர்க்குப் பயனாகாத பொருள்தான் யாது? அவரது அறிவின் வன்மையால், எப்பொருளும் அவர் கருத்தைச் சுமந்தேற்றுப் புலனுறுத்தற்கு ஏற்புடையதாகின்றது.

'தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்தம்
நிலையி னிழிந்தக் கடை.'—திருக்குறள்.

என்னும் நீதி நிறுவற்குப் பயன்பட்டதும் பிறர் யார் வேண்டும் பொருள்?

புலவன்தான் குறித்த பொருளை நிலைநாட்டுதற்கு அதற்கு உரிய சொற்

களும் நடையும் ஒழுக்கும் இன்றியமையாதன. இயற்கைப் புலவர்க்குச் சொற்கள் கற்கவேண்டா; தாமே வருமென்று கூறுவாருமுளர். அவர் நன்கு ஆய்ந்திலர் போலும்! பொருட்பேறும் வேறு; சொற்பேறும் வேறு. ஒரு பொருளின் உண்மையை நன்குணர்ந்து அதனொடு உள்ளஞ் சார்ந்து இத் தெள்ளிதின் ஆராய்ந்து உள்ளவாறு உணர்ந்து அமைக்குந் தன்மையெனப் படுமாகலான், அதனையுடையர் புலவர் எனப்படுவரேனும், அவர் தாம் அதனைப் பொருந்துக்காட்டும் சிறிய சொற்களையுடைய ரல்லராயின், பிறர்க்கு எங்ஙனம் புலப்படுத்த லாற்றுவர்? பொருளுணர்ச்சி மாத்திரையிற் சொல்லுணர்ச்சி எய்துவதன்று. தம் கருத்தை நன்கனம் கிளத்தற்குரிய சொல் தெரியப் பெறாதார் ஊமர் புலவரெனவே படுவர். அவர் தம் காப்பியமெல்லாம் அவருடைய உள்ளத்து மட்டுமே அடங்கிக்கிடக்கு மென்க. காப்பியப் புலவோர்க்குத் தம் கருத்தை உணர்த்துதற்குரிய சிறந்த சொற்கள் கைவரல் எத்துணையும் இன்றியமையாதது. சிறிய புலவன் சொற்களை உள்ளுறுத்தி உணர்வன், பின்னர் வேண்டுமிடத்து அவற்றை எளிதினும் இனிதினும் பயன்படுத்தும் நோக்கினனாகலின். எனவே, பல்காற் பயின்ற செறிந்த சொற்கள் தன் கருத்தைப் புலனுக்குதற்கண், புலவனுக்கு அங்கையங்கனியென உதவி யாற்றுகின்றன. புலவன் பொருளை உணர்ந்து பின்னர்ச் சொற்றேடுகின்றான்; அறிந்த சொற்களை மட்டும் வைத்துக்கொண்டு அவற்றிற்கேற்ற பொருளை அமைப்பதூஉ மின்று. பொருளும் சொல்லும் முறையே புலவனது நெஞ்சத்துச் சீர்பெற ஒழுகுகின்றன.

இக்காலத்துப், 'புலவர்' சிலர் ஓரடியில் ஏதேனும் பொருளை அமைத்துக் கொண்டு பின்னர் முடிக்கப்படுமடி தோன்றுவிடத்து, எதுகை மோனை முதலிய அமைதற்குரிய சொற்களைத் தேடி யெடுத்துப் புகுத்தி, அச் சொற்களுக்கு ஏற்பத் தம் கருத்தை மாற்றி அமைத்துக் கொள்கின்றனர். இது புலமை கொல்? புலைமை கொல்?

எடுத்துக் காட்டாக 'இலக்குமி என விளங்கிய சீதையின் தவவடிவை மாருதி கண்டான்' என்னும் பொருளை அமைக்கக் கருதி,

'ஏகமா மகளென விளங்கு சீதைதன்.'

எனத் தொடங்கி 'ஏ' காரத்துக்கும் வகர விகரத்துக்கும் மோனையின்றென்று, ஏகம் என்பதை 'மேகம்' என்றேனும் வேகம் என்றேனும் திரிக்க முனைகின்றனர். 'ஏ' என்பதற் கேற்றதொரு மோனைசான்ற சொல் அவர்க்கு எய்தாமையான் வரும் இழுக்கன்றோ இது? இங்ஙனம் பொருளைத் திரிக்குமிடத்து மேன்மேலும் சால்புடைய சொல் கிடைக்கப் பெறாது அலமரலாகின்றனர், அவர். செறிந்த சொற்கள் கைவரின், செய்யுள் ஒழுக்கமும் விழுப்பமும் பெற்றுப் பொருள் விளங்கநிற்கும்.

'ஏகமா மகளென விளங்கு சீதைதன்.'

எனின், செவ்வி யுறும். இனித் 'தேசமே கண்டவன் சிந்தை கூர்ந்தனன்' என்பதை நோக்க, 'ஆகமாருதிகண் டகங் களித்தனன்' என்பது சாலச் செவ்வி தரும்.

புலவன் தேடியமைக்கும் பொருட்குவைக்கு அலகில்லை யாதலின், அப் பொருட் கூட்டத்திற்கெல்லாம் தகுதியுடைய சொற்களைப் புலவன் இயன்ற



விடத்தெல்லாம் இனிது தருவிப் பெறுகின்றனன். உலகியற் பொருட்டொகுதிகளுக்கெல்லாம் ஏற்ற சொல் ஒரு மொழியின் அமைதல் இயலாதன்றோ? ஆகலான், தன் பொருட்குரிய சொற்களைத் தக்குழி அமைக்கலாகா விடத்துப், புலவன், பெற்ற சொற்களைச் சிறிது திரித்தும், தன்பொருளாற்றல்பெற்ற சொற்கள், கிடையாவழி ஒரு பொருள்படும் சில பல சொற்களைக் கோத்தும் கருத்தைப் புலப்படுப்பன். புலவன் கருத்துப் பொருளைப் புலனுறுத்தலே யாதலின், சொற்சிதைவுதிரிபுகள் அவனுக்கு விலக்கல்ல. எவ்வாற்றாலேனும் தான் கருதிய பொருண்மையை மெய்ப்பட உணர்த்துதற்கே புலவன் முயல்வன் என்க.

'செல்வந்தான் பெற்றத்தாற் பெற்றபயன்,'—திருக்குறள்

என்பதினும், 'என்பதைக் கேட்ட மைந்தன்' 'அன்பந்துக் கெல்லையுண்டே'—கம்பர்—என்பவற்றினும், முறையே, பெற்றது என்பது அன்பது என்பன இடை விரிக்கப்பட்டன. அதனுள் செய்யுள் எதுகை நயம்பெற்றது. 'அதுவல்ல தில்லை இலக்குப் பொறை'—திருக்குறள், என்பதில், 'இலத்துக்கு' என்பது 'இலக்கு' எனக் குறைக்கப்பட்டது. 'மனக்கினிய துணைவன்'—கம்பர் என்பதினுமது. 'சிலம்பு புலம்புவ' என்பது 'சிலம்புலம்புவ' எனவும் 'தழங்கு குரல்' என்பது 'தழங்குரல்' எனவும் குறைந்து வருதல் காண்க. எனவே, "வலித்தல் மெலித்தல் நீட்டல் குறைத்தல் விரித்தல் தொகுத்தலும் வருஞ் செய்யுள் வேண்டுழி"—நன்னூல். என்றது புலவனது பொருணயம், பெறுதற் பொருட்டேயாமென்க. கருதுதலை 'உளங்கோடல்' எனக் கம்பரும், அங்ஙனே அப்பொருள்பட 'உருவிலாளன்' எனவும் விழுவினை 'நல்வினை' எனவும் இளங்கோவடிகளும் உரைத்த நயமும் தம் கருத்தைச் செய்யுட்குத் தக அமைத்தற்கேயாம். 'தென்னவன் குலமுதற் செல் செல்வன்' வென்வேற் கொற்றம்' கூடலாளன் கூடாயினன்'—சிலப். என்பன பொருணயம் சிறப்பவந்தன.

புலவனது உள்ளத்து நிலைபெறுவ பொருளும் சொல்லும் என்னும், பொருள் வடிவம் சொல்வடிவம் ஆகிய இரண்டும் புலவன் தன் உள்ளத்தே பேணும் இனிய உருவுகளாம். இவற்றைப் பாடல் பற்றி ஆய்மிடத்து அறிவாம். தான் கருதிய பொருளுக்கேற்ற சொல்லைப் புலவன் அமைத்தல் வேண்டும் என்பது ஈண்டைக்கு வேண்டற்பாற்று. மொழி எவ்வகையினெல்லாம் தனக்குப் பயன் செய்யுமோ அவ்வகையினெல்லாம் முயன்று புலவன் தன் கருத்தைப் பாடலில் வடிக்க வேண்டும்.

ஏனைய மக்களொடு புலவன் ஒப்புரைக்கப் படுவானல்லன். அவரினு மிறந்த நினைவாற்றலும் தன் காட்சிக்கு எய்திய பொருளினீடுபாடு முடையன் புலவன். நினைவாற்றல் எத்துணைக்கு அகலுமோ அத்துணைக்குப் புலமை ஒளிரும். மொழிக் கல்வி மட்டும் ஒருவற்குப் புலமை கொடாது. கற்ற கல்வியை மேன்மேலும் பல்விழிக்காடு பயிலுதலும் பயின்ற பொருளில் உள்ள முறுதலும், எப்பொருளையும் தேர்ந்து கண்டு உளத்தாற்றோய்தலும், தோய்ந்தவாறு தான் நுகர்தலும் நுகர்ந்தவாறு கவினுறப் பிறர்க்குச் செய்யுளிற் காட்டுதலு மென்னும் இவை புலவற்கு ஒருதலையாக வேண்டற்பாலன. நினைவாற்றல் எவர்க்கும் இன்பத்தை யளிக்கும் இயல்பை உடையது. பல்வேறு வகையிற் றிரிந்து வருந்தும் உள்ளம் சிறிது இன்பங்

துய்ப்பது அறிவுற ஒன்றை நினைத்தற் கண்ணேயாம். எனவே, எப்பொருளை யும் கண்டு நுகரும் முதற் கண்ணதாகிய இன்பம் புலவர்க்கே உரித்து. அவ னுகர்ந்த பின்றையே அவனது பாடல் வாயிலாகப் பிறர் கோடலுறுகின்றனர்.

புலவரது உள்ளம் எப்போழ்தும் வளம் பயின்று விளங்குவது. வறிய வர் புலவர் என்பாரேனும், அவரது உள்ளம்போலும் அறிவின்றிரு மலிந்து கிடப்பது பிறிது யாதென்பது? இவரது உள்ளம் சிறிதும் பொருட்செல்வமில் லாமலேயும் ஒன்பான் சுவையையும் அமைதிபெறத் துய்த்து இன்புறும். ஐம் பொறி இன்பங்களையும் புலவர் உளத்தானே அழகிதாகத் துய்ப்பர். என்னை? ஐம்புலங்களைத் துய்க்கு மிடத்தும் உள்ளமே துய்ப்பதாதலாலும் ஈண்டும் உள்ளமே ஐம்புல நுகர்ச்சி ஆய்ந்து நுகர்ச்சிக்கண்ணே படுதலாலு மென்க. புலவரது உள்ளம் பொருளின்பந் துய்க்குமிடத் தெல்லாம், பிறநெறியிற் செல்லாது ஒருக்கம் உற்று ஒளிரும்.

குறித்த பொருள் வெளிப்படாவிடத்துப் புலமை என்னாகும்? பெண் ணொருத்தியின் செறிந்த அழகைக் கண்ணுற்ற ஒருவன் 'அழகுடையவள்' என்கின்றான். அதனான் அழகின் மாட்சி புலப்பட்டவா றின்று. எத்தகைய அழகுடையவள் எனப் பின்னும் வினவ நிற்குமன்றே? அவளை ஒரு புலவன் நோக்கி 'எழிலுடையவள்' 'கவினுடையள்' எனின் அழகின் மாட்சி விளங்க நிற்கும். கைகடந்த கவினுடையளாயின் அக்கவினை நன்கனம் புலனுறுத்தற் பொருட்டு உவமைகள் முதலியன வேண்டப்படும். 'குறித்தோன் கூற்றம் தெரித்து மொழிகிளவி'—தொல்காப்பியம். என்றது புலவன்மாட்டு இன்றி யமையாததா மென்க,

புலவன் தன்னுடைய உள்ளத்தோடு பயின்றாற் போலப் பிறருடைய உள்ளத்தொடும் நன்கு பயிறல் வேண்டும். இன்றேல் அவர் தம் கருத்தைத் தான் கொண்டு கூற முயற்சி வெற்றியிற் கடைக்கூடாதாம். பிரிந்து கடி தின் வருவல் என்று கூறிப் பிரிய முயலும் தலைவனது செலவு எவ்வாறு கூறின் தகைபடும் என ஆய்ந்த தோழி, இறுதியில் தலைவன் பிரிவது தனக்கு விருப்பமன்று என்னும் கருத்தை மிகக் கவினுற,

'செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை'—திருக்குறள்.

எனக் கூறினள். 'நீ பிரியாமை என்பதுண்டேல், அப்பொருண்மையை என்னிடத்துக் கூறு; 'பிரிந்து கடிதின் வருவன்' என்று நீ கூறுவதனை நீ பிரிந்து வருமிடத்து யார் உயிர் வாழ்ந்திருப்பரோ அவர்க்குச் சென்று உரை' எனக் கூறித் தலைவன் பிரியான் இறைவி நோவதைச் சுருக்க விளக்கமுறக் கூறினள் தோழி. அதுகேட்ட இறைவன் பிரியா னன்றே தான் செல் வின் இறந்துபாடு பயனாமெனக் கருதி, பிரிந்தானேல் அன்பிலனா மென்பது.

தலைவனைப் பிரிந்து வருந்துறுந் தலைவி தன் மேனிப் பசப்பு நோக்கி அயலார் அலர்தூற்ற முற்பட்டுழி, என் நினைப்பள்? அவளது நினைவின் வடிவை அவ்விடன் காதலொடு பற்றும் வருத்தத்தொடு பற்றும் செவ்வ னம் புலவன் உணர்ந்தாலன்றே, அவளது கருத்தைச் செய்யுளிற் புலப்படுத்த இயலும்? திருவள்ளுவர், தன்மை நயம் விளங்கப்,



'பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்'

என்றார். 'இவள் மேனி பசந்தாள் என என்னைப் பழிப்பதன்றி 'இவளை விட்டு ஒருவினர் தலைவர்' என்பா ரிலரே' என்ற தலைவியின் கூற்றால், அவ ளது ஆற்றாமையும் பசலைக்குப் பிரிவு காரணமாதலால் காரியத்தா னொருவ ரைப் பழித்தல் அறனன்று என்பது நன்கு விளங்கிக் கிடந்தன.

கழிபெருங் காதல் கொண்ட தலைவியின் காதல் நிலையைக் கட்டுரைக் கும் வகைதாம் பலவேனும், காதலின் பெருக்க வரம்பு புலனுறுமாறு கூறு தலே யமைவுடைத்து. நல்லிசைப் புலவர் தாம் எதை விதந்து கூறக் கருதி னும் அதன் பெருக்க வரம்பை நன்கு புலப்படுத்துவர். நுணுகக் கூறுமிடத் துச் சுருக்க வரம்பையும் புலப்படுப்பர். அவருடைய பாடல்கள் சுருக்கப் பெருக்கங்கட்கு எல்லை கண்டு நிற்பனவாம். 'திருவள்ளுவர்,' காதற் செறி வைக் கூறுமிடத்து,

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து."—திருக்குறள்.

என்றனர். 'எம் கண்ணகத்துள்ளார் காதலராதலின், கண்ணுக்கு மையு மெழுதேம், எழுதும் போழ்து அவர் அக்கண்ணினின்றும் மறைவராதலான், அதனை அறிந்து' என்னும் தலைவி கூற்று அவளது காதலை எத்துணைக்குப் புலனாக்குகின்றது? செறிந்த காதல் இன்னணம் ஒருத்தி நினையவுந் தூண்டு மன்றோ?

"கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணிய ரெங்கா தலவர்."

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து."—திருக்குறள்.

என்பன எத்துணை நயம் பயந்து நிற்கின்றன? சிறிய புலவன் பிறர் கருத்தை அள்ளியெடுத்துத் தன்னுள்ளத்துச் செறித்துச் செய்யுளிற் றெள்ளென அமைத்து ஏனையோர்க்குப் புலப்படக் காட்டுகின்றனன், கண்ணாடிக் கண் ஒளியை வாங்கி, வேண்டுமிடத்து உய்ப்பதுபோல. பிறர் கருத்து ஒளியும் புலவனது உள்ளம் கண்ணாடியும் செய்யுள் ஆடிக்கட் போதரு மொளியுமா மெனப்படும். புலவனது உள்ளக் கண்ணாடி சிறிது மிகுதி உடைத்து. என்னை? மிகுதியெனின், கண்ணாடி தன்கட் செறியு மொளியை மட்டுமே பெறுதலுடைத்து. புலவனது உள்ளக் கண்ணாடி பிறருடைய கருத்தை முற்றும் ஒருங்கு பெற்று அதைக் கவினுறுத்துக் காட்டுகின்றது. அஃதன்றி யும், பிறர் கருத்துத்தான் பொருட் சிறப்பிற் குறைபட்டுழி அப்பொருண்மைப் பெருக்க வரம்பை நுனித்து உணர்ந்து செவ்வனம் அமைத்து வெளிப்படுக் கின்றது.

இராகவனுக்கு நாடு கொடுக்கிலர் என அறிந்த இளையோன் பெரிது சினந்திலன் என வரினும், புலவனமைக்கு மிடத்துச் சினத்தின் பெருக்க வெல்லைப்படவே அமைப்பன், அது சினக் குறிப்பு நன்கு வெளிப்படுத்தப் படவேண்டு மிடமாகலின் இன்றேல் மெய்ப்பாடு ஒல்குமென்க. கம்பர் அவ்

விடத்து, 'கடைத்தீயென மூண்டெழுந்தான்' 'அண்ணற் பெரியோன்றன நாதியின் மூர்த்தியொத்தான்' 'கைபுடைத்து நக்கான்' என்பன முதலாக மிகக் கவின்படக் கட்டுரைத்தனர். சுவை அரும்புதல் மலர்தல்களைக் கண்டு அமைப்பன் புலவன் என்க.

எடுத்துக்கொண்ட பொருண்மையை இனிது முடித்து இலங்கச் செய்தல் புலவனது குறிக்கோளாமன்றே? எனவே, அப்பொருண்மை தெள்ளிதிற் புலப்படத்தக்க முறை புலவனுற் கடைப்பிடிக்கற் பாற்று.

"கண்ணுடைய ரென்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

"கல்லா தவரு நனிநல்லர் கற்றோர்முற்
சொல்லா திருக்கப் பெறின்"

"கேட்டபினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி."

என்பன கல்வி கேள்விகளின் சிறப்பைக் கழிகவினுற வற்புறுத்தற்கு, பொருணடையே காரணமாய் நிற்கின்றது.

"கானவர் போன தோரார்."—பெரிய புராணம்.

என்னும் பொருள் வைப்புக் கண்ணப்பரது, பிறிது எதினும் பற்றில்லாது இறைவனிடத்து ஒருக்கு செலுத்திய உள்ளத்தையுடையராய் மெய்ம்மறந்து நின்ற பெற்றிமையைத் தெற்றென முற்றப் புலனுறுத்துகின்றது காண்க. 'கானவர் போன பின்னை' என்றிருப்பின், என்னை நயம்பெறப்படுவது? கண்ணப்பரது உட்பான்மை யொத்த பொருணடையன்றோ, ஈண்டுச் சிறப்புக்குக் காரணமாயிருக்கது?

"புனிதமெல்விறைச்சி நல்லபோனகம்.'—பெரியபுராணம்.

என்னும் தொடரிற் 'நல்ல போனகம்' என்ற நயம் கண்ணப்பரது, இறைவற்கு இறைச்சியானு நல்லுண வென்னும் நினைவினை, நன்கு வெளிப்படுக்கின்றது.

"ஆர்தமாராக நீரிலிருப்பது?"—பெரியபுராணம்.

என்னும் பொருணடை நயம் கண்ணப்பர்க்கு இறைவன் மருங்கு இருந்த கழிபேரன்பினையும் அவனது தனித்துறைவுக்குத் தாமாற்றாதலையும் செவ்வனம் தெளிக்கின்றதன்றோ?

"தாவர சங்கமமென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினன்."

"கற்கனியக் கனிகின்ற துயரான்."—கம்பராமாயணம்;

என்பன பரதனது கழிபேரவலக் கவலையைக் கவினுறக் காட்டுகின்றன காண்மின். இன்னும் இவைபோல்வன பலப்பல, நல்லிசைப் புலவர் காப்பியத்துப் போதருவன, பிற.

(தொடரும்.)

# ஒரு அன்பனின் முறையீடு

———:(o):———

(ஆரியூர்-வா. பதுமநாப பிள்ளை.)

அருட்பெருஞ்சோதித் தனிப்பெருங் கருணைக்கடலே! கைம்மாறு கருதாக் கருணை வள்ளலே! மெய்யன்பர்களது துன்பங்களை நீக்கி, என்றுங் குன்றாத உண்மைப் பேரின்பத்தை உவந்தருளும் உயர் பரம்பொருளே! அறம் நலிந்து மறம் மலியுங் காலத்தில் அவனியில் தோன்றி அறத்தை நிலைநிறுத்தும் அண்ணலே! அபயமடைந்தவர்களைக் கைவிட்டு விடாமல் காத்தருளும் இயல்பால் 'அச்சுதன்'-எனும் திருநாமத்தைப் பெற்ற அத்தனே! ஒப்புயர்வற்ற கருணை வள்ளலாகிய தனிப்பெருந் தலைவனே! அள்ளி அள்ளிப் பருகினும் சிறிதும் தெவிட்டாத தெள்ளமுதே! உடலையும் உள்ளத்தையும் உயிரையும் ஒருங்கே குளிர்விக்கும் இணையற்ற இன்னமுதே! 'விண்ணவர் அமுது உண்ண, அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானே!' திருக்கண்கள் திருக் கைகள் திருவடிகள் திருவுந்தி முதலியன கண்ணுக்கினிய செந்தாமரை மலர்களாக விளங்க, திருச்செவிகளில் விளங்கும் மணிமகர குண்டலங்கள் அழகிய கயல்களாக துலங்க, பச்சைமாமலைபோன்ற மரகதத் திருமேனி பச்சிலைச் செறிவாக இலங்க கண்டார் நெஞ்சைக் குளிர்விக்கும் தண்டாமரைக் குளம்போல் வருவோனே! பலவகைப்பட்ட கொடிய துன்பங்களால், உடல் மடடுமன்றி உள்ளமும் பெரிதும் வாடி வருந்தி சோர்ந்து தவித்து நிற்கும் அடியேனது பெருவேட்கை என்று தீரும்? அடிமை வாழ்வாகிய கொடிய வெயிலில் அலைந்து திரிந்து, உயிர்க்கு இன்பமூட்டும் உரிமை யின்பமாகிய தண்ணீரைக் காணாமல், காவலர்ந்து உடல் தளர்ந்து தரையில் விழுந்து தவிக்கும் சிறியேனது சுதந்திர தாகம் என்று தணியும்? நீர்வேட்கை மிகுந்தவன் தாகம் தணியுமளவும் 'தண்ணீர்' 'தண்ணீர்' என்று பன்முறை கதறுவதுபோல், உரிமை யின்பத்தில் ஆர்வம் மிகுந்து நிற்கும் அடியேனும் 'விடுதலை' 'விடுதலை'



என்று இடைபறுமல் கதறிக்கொண்டிருக்கிறேன். கருணைப் பெருங்கடலே! அடியேனது விடுதலை வேட்கையைத் தணித்தருள உனது திருவுள்ளம் இரங்கும் நாள் எந்நாளோ? உனது திருவருட் பெருஞ்சீராகிய செந்தாமரைக் குளத்திலே, எனது உடலையும் உள்ளத்தையும் உயிரையும் வருத்தும் எரிச்சல் முழுவதும் ஆறுமாறு படிந்து குடைந்தாடி அள்ளி அள்ளிப் பருகி உள்ளம் குதுகலிக்கக் கூடிய காலம் வாய்ப்பது எப்பொழுதோ?

அனைத்துயிரையும் அடிமை கொண்டருளிய அண்ணலே! எவ்வுயிர்க்கும் தலைமை பூண்டருளிய இறைவனே! எவ்வுலகுக்கும் நாயகனாகிய தெய்வ நாயகனே! பல சமயத்தினரும் பல பெயர் கொண்டு பணியும் தனிப்பெருஞ் சுடர்ப் பரம்பொருளே! உன் ஒருவனுக்கே அடிமைப்பட வேண்டிய—உனது திருவருளுக்கு உரியவராம் தங்களைப் பண்படுத்திக்கொள்ளவே இவ்வுலகிற் பிறந்த—உனது திருவிளையாடல்களுக்குத் தகுந்த நிலமாக அமைந்த புண்ணிய பூமியாகிய இப்பாரத பூமியில் பிறக்கும் பாக்கியம் பெற்றவர்கள், இக்காலத்திலே கேவலம் பொருளுக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு அடிமை வாழ்வில் மோகம் கொண்டு அலைகிறார்கள்! உன்னையும் உனது திருவுள்ளத்திற்கினிய தேசப் பணியையும் மறந்து, உரிமை யின்ப வேட்கையைத் துறந்து அறிவை மயக்கும் மாயப் பதவிகளிலும் அற்பப் புகழிலும் மையல் மிகுந்து அலைகிறார்களே! அடிமை வாழ்வில் அப்பேதைகள் கொண்டுள்ள மோகம் என்று மடியும்? அவர்களது அறிவை மறைத்து நிற்கும் மாயமோகமாகிய பாழும் படலத் திரை என்று விலகும்?

நல்லோரை அல்லற்படுத்திய வல்லரக்கரை வதைத்த அறவீரனைப்பெற்ற அன்னை—சின்னஞ்சிறு பருவத்திலேயே சிங்கத்தின் முதுகைத் தட்டி விளையாடக்கூடிய சிறிய வீரச் செல்வனைப் பெற்ற தாய்—தந்தையை மகிழ்வூட்ட இளமை யின்பத்தை ஹிருதய பூர்வமாக தியாகம் செய்த வீரப் புதல்வனை ஈன்ற அன்னை, இன்று முப்பத்தைந்து கோடி மக்களைப் பெற்றிருந்து கலங்கிய கண்களுடனும் விலங்கிடப்பெற்ற கைகளுடனும் விரிந்த குழலுடனும் நெஞ்சு பெரிதும் குமுறி நிற்கிறாள். சிங்காசனத்தில் வீற்றிருந்து செங்கோலை ஏந்தி சிறப்புறத் தக்க பாரதத் தாயின் மணிக்கைகள் இன்று இரும்பு விலங்குகளால் இறுகப் பிணிக்கப்பட்டிருக்கின்றன. அன்னையின் கைவிலங்குகளை உடைத் தெறியத்தக்க வழி அறியாத நாங்கள், சாரமற்ற—வீரமில்லாத—மானங்கெட்ட உடலிலே உயிரை வைத்துக்கொண்டு உண்கிறோம்; உலவுகிறோம்; உரையாடுகிறோம்! அந்தோ! நாங்கள் முப்பத்தைந்துகோடி மக்கள் இருந்தும் ஈன்றெடுத்த அன்னையின் விழிகளிலிருந்து வழியும் கண்ணீரை நிறுத்தும் வழி யறியாமல் விழிக்கிறோம்! இன்னருட்கடலாகிய இறைவனே! எமது அன்னையின் மணிக்கரங்களைப் பிணித்துள்ள கொடிய தளைகள் 'படீர்' 'படீர்' என்று வெடித்துச் சிதறி, அவளது முககமலம் அழகுபெற மலரும் நாள் எந்நாள்?

மெய்யன்பர் துயர்களைக் களையும் ஐயனே! உயிர்கள் மேல் கொண்ட கருணைப் பெருக்கினால், நாட்டிற் பிறந்து படாதன பட்டு கொடியோரை வாட்டி அறத்தை நிலை நாட்டி நன்னெறி காட்டிய அண்ணலே! எத்தனை எத்தனை துயர்கள் எங்களைச் சூழ்ந்து வருத்துகின்றன! எத்தனை எத்தனை கொடுமைகள் எங்களது நெஞ்சைப் புண்படுத்துகின்றன! புலையும் கொலையும் பொய்யும் வஞ்சமும் செருக்கும் அளவிறந்து பெருகியிருக்கின்றனவே! உள்ள



வற்றில் திருப்திகொள்ளும் கள்ளமற்ற தூய உள்ளமுடையோரைக் காண்பது அரிதினும் அரிதாகிவிட்டதே! அண்டினோரை அடிமைப்படுத்திக் கொண்டு திண்டாடித் தெரு சிரிக்க வைக்கும் ஆசைப்பேய் தலைவிரித்தாடுகிறதே! தன்னலந் துறந்து பரோபகாரப் பணியில் ஈடுபடும் சாத்துவிக அன்பர்களை, பலவகைப்பட்ட சோதனைகள் சூழ்ந்துகொண்டு பெரிதும் கலங்கவைக்கின்றனவே! உன்னைக் கனவிலும் கருதாதவர்கள் பலரும் செருக்கிக் களித்து தலைநிமிர்ந்து நிற்க, இரவும் பகலும் உன்னைப்பற்றிய சிந்தனையிலேயே பொழுது போக்கும் உண்மை யன்பர்கள் பலரும் கொடுந் துன்பங்களுக்குள்ளாகி நெஞ்சு குமுறி நிற்கின்றனரே! உனது திருவருளைப் பெறுவதிலேயே ஆர்வம் மிகுந்து நிற்கும் எங்களைக் கலங்க வைக்கும் இன்னல்கள் எல்லாவற்றையும் களைந்து—எங்களது கண்ணீரைத் துடைத்து—எங்களது மனப் புண்ணை ஆற்றக்கூடிய மருத்துவன், மணிவண்ணனாகிய நீ ஒருவனே யன்றோ? எங்களது நன்முயற்சிகளுக்கும் பக்திக்கும் உத்தமப் பணிகளுக்கும் இடையூறுகளாக எய்தும் இன்னல்க ளெல்லாம், பொய்யாய்ப் பழங்கதையாய் கனவாய் மறைந்தொழியும் காலம் வாய்ப்பது எப்பொழுதோ?

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்"—எனும் இயற்கை மருமத்தை உலகுக்கு உணர்த்தியருள கோபாலனாகத் தோன்றிப் பூபாரந் தீர்த்த புயல்வண்ணா! சக்கரவர்த்தியின் மைந்தனாகப் பிறந்திருந்த காலத்தில் தன்னை நோக்கி 'தூது போ' என்று ஏவத் துணிவார் எவரும் ஏற்படா தொழிந்ததால், சிறையிற் பிறந்து இடையர் சேரியில் வளர்ந்து பாண்டவர் வேண்ட பகைவனிடம் தூது சென்று, உண்மை யன்பர்களுக்கு நீ எவ்வளவு தூரம் கட்டுப்பட்டவன் என்பதை உலகுக்கு உணர்த்தியருளிய அருட்பெருங்கடலே! நரனாகிய ஒரு பார்த்தன் தேரில் வீரச் செருக்குடன்



வீற்றிருந்து, 'சேனைகளிடையில் தேரைச் செலுத்தி நிறுத்து' என்று கட்டளையிட அவ்வண்ணமே அவனுக்குக் கீழ் தேர்த்தட்டில் அமர்ந்து, ஒப்புயர்வற்ற தனிப் பெருஞ் சக்கரப் படையைப் பற்றும் திருக்கையில் சாட்டையைப் பற்றி குதிரைகளை யோட்டும் சாரதியாக நடித்த பெருமானே! பக்தன் பொருட்டு பகைவர் சொரிந்த கணைகளையும் வீரலக்ஷ்மி விளங்கும் மார்பில் ஏற்று, அழகிய திருமேனியில் அம்புப்புண்களைப் பெற்று அகங்களித்து நின்ற அருட்பெருவள்ளலே! புகழ்ச்சியைத் துறந்து சுயநலத்தையும் மறந்து, 'பரோபகாரப் பணியில் ஈடுபடவே பரமனால் படைக்கப்பட்டோம்' எனும் உணர்ச்சியுடன் பயன் கருதாப் பணியில் உற்சாகத்துடன் ஈடுபடும் உண்மையன்பர்களுக்கு உவந்தருள்புரியும் கருணை வள்ளலே! ஆரியர்களின் சீரிய தியாக—வாழ்வை அகம் மகிழ்ந்து ஆதரித்தருளும் அன்பர் நாயகனே! ஒப்புயர்வற்ற தனிப்பெருஞ் சிறப்பினவாகிய உனது திருஅருளும் கருணையும் இன்று எங்கு ஒளிந்திருக்கின்றனவோ?

பாரதப் போர்முனையில் கோரயுத்தம் செய்து பாண்டவர்களை கலங்கச் செய்த பீஷ்மரைக் கொல்லக்கருதி தான் செய்திருந்த ப்ரதிக்ஞையையும் மறந்து சக்கரப்படையை எடுத்த அண்ணலே! தான் செய்த சபதத்திற்கிணங்க பார்த்தன் தீயைச் சுற்றிவந்து அதில் மூழ்கச் சித்தமாய் நின்ற கணத்திலே கதிரவனை மறைத்திருந்த சக்கரத்தை மீட்டு மீண்டும் கதிரவனொளியைக் காட்டியிராவிடில், பாண்டவர் கதி என்னவாயிருக்கும்? கர்ணன் விடுத்த கொடிய அரவக்கணை பார்த்தன் தலையைப் பார்த்துப் பாய்ந்து வந்தபோது சடக்கெனத் தேரை நிலத்தில் சிறிது அழுத்தியிராவிடில், அவனது தலை என்னவாயிருக்கும்? 'நெஞ்சம் ஈனக் கவலைகள் எய்தியபோதில் இதம் சொல்லி மாற்றி'யிராவிடில், காண்டீவன் வீரம் என்னவாயிருக்கும்? உனது உதவியை அவ்வப்போது பெற்றிராவிடில், பாண்டவர்கள் தமது வீரத்தினால் மட்டும் வெற்றி பெற்றிருப்பரோ? 'எவ்விடத்தில் 'பம்' 'பம்' 'பம்' என்று முழங்கும் வெற்றிச் சங்கத்தைப் பற்றிய கையினனாகிய கண்ணபிரானும் 'கணீல்' 'கணீல்' என்று ஒலிக்கும் வீர காண்டீவத்தை ஏந்திய கையினனாகிய பார்த்தனும் விளங்குவரோ, அவ்விடத்தில் வீரலக்ஷ்மியும் விஜயலக்ஷ்மியும் ஆனந்தத் தாண்டவம் செய்வர்'—என்ற சஞ்சயன் வாக்கு சத்தியவாக்கன்றோ! எதிர்ப்படும் இடையூறுகள் எல்லாவற்றையும் நீக்கி முடிவில் முழு வெற்றியை விளைக்கத்தக்க இணையற்ற துணையாக இருந்து உதவுவது உனது திருவருள் ஒன்றேயன்றோ! "புனத்துழாய் முடிமாலை மார்பன் என்னப்பன் தன் மாயங்களே நினைக்கும் நெஞ்சுடையேன்; எனக்கு இனி யார் நிகர் நீணிலத்தே?"— என்றும்; "வலக்கை ஆழி இடக்கைச் சங்கம் இவையுடை மால்வண்ணனை—மலக்கு நாவுடையேற்கு மாறுளதோ இம் மண்ணின் மிசையே?"—என்று குதூகலத்தோடு கூறக்கூடிய வீரத்துணிவை அளிக்கக்கூடியது, ஒப்பற்ற உனது திருவருள் ஒன்றேயன்றோ!

அறிவை மயக்கும் மாயையால் அகம் கலங்கி நிற்கும்போது, உண்மையை உணர்த்தி உத்தமக் கடமையில் உற்சாகத்துடன் ஈடுபடச் செய்விக்கக்கூடிய உயரிய துணை எது? மிகமிக அன்புடையவர்களைப் போல் நடித்த உறவினரும் தோழர்களும் கொடிய சோதனைக் காலத்தில் எட்டியும் பாராமல் விலகிச் சென்று வேற்றாராகிவிடும்போது, அன்பர்களது அகத்தில் தோன்றி ஆற்றொணாத் துயரை மாற்றக்கூடியதாக விளங்கும் அருட் துணை எது? பொறாமையும் வஞ்சமும் பேராசையும் கோபமும் நிரம்பிய வெளிப் பகைவர்களோடும் அறிவை மயக்கி அடிமைப்படுத்தும் மாயையில் பிறந்த காமம் கோபம் அகங்காரம் முதலிய உட்பகைவர்களோடும் எதிர்த்து நிற்க நேரும்போது அவ்விருவகைப் பகைவர்களையும் வெற்றிகொள்ளக்கூடிய வீரத் துணிவையும் மன உறுதியையும் அளித்து அன்பர்களைக் காக்கக்கூடிய பெருந்துணை எது? கடத்தற்கரிய தேவ மாயையைக் கடக்கச் செய்து என்றும் குன்றாத உண்மைப் பேரின்பத்தை ஊட்டக்கூடிய ஒப்புயர்வற்ற தனிப்பெருந் துணை எது? எத்தகைய கொடிய சோதனையிலும் வெற்றி பெறக்கூடிய மனோசாந்தியை—மன உறுதியை—மன மகிழ்வை அளிக்கக்கூடிய சீரிய துணை எது? உனது திருவருள் ஒன்றேயன்றோ?



பழங்களும் தேங்காயும் படைத்தும் அர்ச்சனை செய்வித்தும் அபிஷேகம் நடத்தியும் தளிகைகள் செய்வித்தும் உற்சவம் நடத்தியும் தாம் தாம் வேண்டி நிற்கும் மனோபீஷ்டங்களை நிறைவேற்றி வைக்குமாறு, உன்னை வியாபாரியாக நினைத்து உன்னிடம் 'பேரம்' செய்யும் பேதைகளோ நாங்கள்? "வேண்டத்தக்கது அறிவோய் நீ; வேண்ட முழுதும் தருவோய் நீ;—வேண்டும் பரிசு ஒன்று உண்டாயின் அதுவும் உன்றன் விருப்பன்றே"—என்றவாறு, எது உனது திருவுள்ளத்திற்கு இனியதோ, அதையே யன்றோ நாங்கள் வேண்டி நிற்கிறோம்! 'இருளினும் ஒளியினும் மருளினும் தெருளினும் இன்பமே அடையினும் துன்பமே மிடையினும்—ஒருவர் முன் புகழினும் இருவர் பின்பு இகழினும் ஊன் இறந்து ஒழியினும்' உனது திருவடிகளை மறவாது போற்றி நிற்கும் மன உறுதி ஒன்றையே யன்றோ, நாங்கள் என்றும்—எந்நிலையிலும் உன்னை வேண்டி நிற்கிறோம்! பொருளுக்கும் புகழுக்கும் இச்சைகொண்டோ நாங்கள் உன்னை வழிபடுகிறோம்? 'ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செயல் வேண்டும்' என்பதே யன்றோ எங்களது பிரார்த்தனை! இத்தகைய மெய்யடிமை பூண்டொழுகும் இயல்புடைய எங்களை இதுவரையிலும் சோதித்தது போதாதோ? இனியும் எங்களை சகித்தற்கரிய கொடிய முறையில் சோதிக்கத் திருவுள்ளம் கொண்டு விடுவது முறைதானோ?

இரவும் பகலும் உனது திருவருள் ஒன்றைப் பெறுவதிலேயே நெஞ்சைச் செலுத்தி நிற்கும் உனது மெய்யடியார்களை பஞ்சத்தாலும் நோய்களாலும் பெரிதும் குமுறச் செய்து அவர்களது மன உறுதியைச் சோதிக்கும் நீ உன்னை ஒரு நாளும் பணியாதவர்களும் தினமும் பழிப்பவர்களுமாகிய அன்பின் பசையுமில்லாத கன்னெஞ்சர்களுக்குப் பலவகைப்பட்ட மேன்மைகளையும் தோற்றுவித்து அவர்களது ஆணவத்தை மேன்மேலும் வளர்த்து வருவது எவ்வளவு விந்தை! 'நண்ணாதார் முறுவலிப்ப, நல்லுற்றார் கரைந்து ஏங்க—எண்ணாரத்துயர் விளைக்கும் இவை என்ன மாயங்கள்! பிணிப்பேயும் வறுமைப் பூதமும் கூடிக்கொண்டு உனது மெய்யடியார்களது ஊன உடம்பை தங்களால் கூடியவரையில் வாட்டி வருத்தினும், அவ்வன்பர்களது ஹிருதயத்தில் ஊறிக் கிடக்கும்—அவர்களது ஆத்மாவோடு இரண்டறக் கலந்துகிடக்கும் பகவத்-பக்தியைச் சிறிதேனும் அசைக்கக்கூடுமோ?

அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடாமல் காத்தருளும் கருணைப் பெருக்கினால், 'அச்சுதன்' என்னும் திருநாமத்தைப் பெற்ற அண்ணலே! ஐம்புல வேடர்களின் கொடுமைக்கு அஞ்சி, உன் ஒருவனையே அன்புத் தந்தையாகவும் அருள் அன்னையாகவும் காதல் தலைவனாகவும் உயிர்த் தோழனாகவும் ஞான குருவாகவும் வீர வேந்தனாகவும் கருத்துட்கொண்டு என்று உனது

திருவடிகளில் அடைக்கலம் புகுந்தேனே, அன்றே என்றன் உயிரும் உள்ளமும் உடலும் உடைமைகளும் உன் ஒருவனுக்கே உரிமைப்பட்டுவிட்டனவன்றே? உனக்கு உரிமைப்பட்டுவிட்டவைகளைக் கவனியாமல் கைவிட்டுவிட்டால், அதனால் விளையக்கூடிய பழியும் அவமானமும் உன்னையே சாருமன்றே! அஞ்ஞான மிகுதியினாலோ ஆராய்ச்சியின்மையாலோ வெவ்விய விதியின் கொடுமையாலோ மெய்யன்பர் கூட்டுறவு வாய்க்காமையாலோ சிறியேனிடம் பலவகைப்பட்ட பிழைகள் மலிந்திருக்கக்கூடும்; எனினும், உனது திருவடிகளில் மனமார்ந்த தூய உண்மைப் பேரன்புடன் தஞ்சம் புகுந்துவிட்ட பின்பு, அப்பிழைகளைக் காரணமாகக் காட்டி அடியேனைக் கைவிட்டுவிடுவது அடுத்தோரைக் கைநழுவவிடாத அச்சுதனாகிய உனக்கு அழகாகுமோ?

"ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ!

அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:!!"—

"மற்றெல்லா மார்க்கங்களையும் விட்டுவிட்டு, என் ஒருவனையே சரணமாக அடையக் கடவாயாகுக: அவ்வாறு சரணாகதி அடைவாயானால், உனது




பாவங்கள் எவ்வளவு கொடியனவாக இருப்பினும் அவை எல்லாவற்றினின்றும் உன்னை நான் விடுவிக்கிறேன். உன்னைப் பற்றிய கவலையை என்னிடம் ஒப்புவித்துவிட்டு என் ஒருவனையே சரணமடைந்துவிட்ட பின்னர், நீ எதற்காக வருந்தவேண்டும்?"—) என்று கீதையின் முடிவில் நீ அறிவுறுத்திய அருள் மொழியை இன்று சிறிது சிந்தித்துப் பார்த்தருளத் திருவுள்ளம் இரங்காயோ?

"த்யௌ: பதேத் ப்ருதிவீ சீர்யேத் ஹிமவான் சகலீபவேத்!

சுஷ்யேத் தோயநிதி: க்ருஷ்ணே! நமே மோகம் வசோ பவேத்!"—

("விண்ணுலகு கீழே விழுந்தாலும் விழும்; மண்ணுலகு சிதறிப் போனாலும் போகும்; இமயமலை பொடி பொடியாய்ப் போனாலும் போகும்; கருங்கடல் வற்றிப்போனாலும் போகும்; என்னுடைய வார்த்தைமட்டும் என்றும் வீணாகமாட்டாது—") என்று பாஞ்சாலியை நோக்கி நீ அருளிச் செய்த வாக்குறுதி, இக் கலியுகத்திற் பலியாதோ? இராமவதார காலத்திலே,



"ஆர்த்தோ வா யதிவா த்ருப்த: பரேஷாம் சரணம் கத:!

அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா!!"—

("மிகுந்த எளிய நிலையில் இருப்பவனாக இருந்தாலும், சிறந்த முறையில் பேசக்கூடிய சக்தியற்றவனாக இருந்தாலும், பகைவர்கள் நடுவில் அடைக்கலம் புகுந்துவிட்ட பகைவனானவன், அறநெறி தவறாத உண்மையன்பனால் தன் உயிரைக் கொடுத்தாவது பாதுகாக்கத்தக்கவனாவான்")—என்று நீ அருளிச்செய்த அருள்மொழி வீணாகும்படி விட்டுவிடலாமா? அடிகளில் அடைக்கலம் புகுந்துவிட்டவர்கள் கொடிய பகைவர்களாக இருந்தாலும், அவர்களை மன்னித்து ஆதரித்தருளக்கூடிய கருணை வள்ளலாகிய நீ, இரவும் பகலும் உன் ஒருவனையே தனிப்பெருந் துணைவனாக முற்றும் நம்பி நிற்கும் அடியேனைக் கைவிட்டு விடலாமோ?

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய பரமனே! பசியின் கொடுமையைத் தாங்கமுடியாமல் வீறிட்டழுகின்ற இளங் குழந்தையை, அன்போடு வாரி எடுத்து அணைத்து முத்தமிட்டுக் கொஞ்சிக் குலவி ஆசையோடு அமுதூட்டி அதன் மலர்ந்த முகத்தைக் கண்டு ஆனந்திக்க மனங்கொள்ளாமல், தாயானவள் கோபமிகுதியினால் தள்ளிவிட்டுப் போய்விடலாமோ? அவ்வாறு அன்னையே அதைச சினந்து தள்ளிவிட்டாலும், அவ்விளங் குழந்தை அவளது ஆதரவையே விரும்பி அழுதுகொண்டிருக்குமன்றோ! கண்ணுக்கினிய பலவகைப்பட்ட அழகிய பொம்மைகளைக் கொடுத்து குழந்தையை விளையாட விட்டுவிட்டாலும், அதற்குப் பசி தோன்றிவிட்டால் அவையனைத்தையும் எறிந்துவிட்டு அன்னையிடம் ஓடிவந்து அவளது கால்களைக் கட்டிக்கொண்டு அழுது நிற்குமன்றோ! அவ்வாறே மெய்யன்பர்களுக்கு திருவருட்பசி தோன்றிவிட்டால், தம்மைச் சூழ்ந்து தமது அறிவை மயக்கிக் கொண்டிருந்த அனைத்தையும் துறந்துவிட்டு, ஆண்டவனது திருவருளைப் பெறவேண்டி அழுது தொழுது நிற்பது இயல்பேயன்றோ!

"தாயே! நானல்ல; நானல்ல; யாவும் நீயே! என்னிடமுள்ள யாவற்றையும் எடுத்துக்கொண்டு, உன் பாதங்களில் பக்தியை மட்டும் தருவாயாக. தாயே! உனது நாமம் அதி மதுரமாக இருக்கிறது; உனது நாமத்தில் நம்பிக்கையும் உறுதியான அன்பும் எனக்கு அருள்வாயாக. தாயே! அம்மா!! உனது கரங்களில் என்னை எடுத்துக்கொள். இங்கிருக்க நான் விரும்பவில்லை; இது வல்ல என்னுடைய இருப்பிடம்; நீயே எனது இருப்பிடம்; எனது புகலிடம். உன்னிடம் என்னை அழைத்துக்கொள். எங்களுக்குப் பலத்தை அளி; ஒளியை அளி; ஹிருதய பூர்வமாக உனது திருவுள்ளத்தின்படியே யாவும் நடக்கட்டும்."

எவ்வுயிர்க்கும் தனிப்பெருந் தாயாக விளங்கும் கருணாநிதியே! இவ்வாறு அன்னையாகிய உன்னை நினைந்து அடிக்கடி அடியேன் கதறி அழுவது, இன்னும் உன் திருச் செவிகளில் சேரவில்லையோ?

"அநந்யாச் சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே!

தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்!!—"

("வேறு பிரதிபலனைக் கருதாமல் எவர்கள் இரவும் பகலும் என்னையே சிந்திப்பவர்களாக வழிபட்டு வருகிறார்களோ, ஒவ்வொருநாளும் என்னை மறவாமல் போற்றிவரும் அவர்களுடைய யோகக்ஷேமங்களை நான் கவனித்துக்

சொல்கிறேன்")—என்று கீதையில் தேவரீர் திருவாய்மலர்ந்தருளியிருப்பது, ஒருகாலேனும்—ஒருவேளையேனும் உன்னை மறந்தறியாத அடியேன் விஷயத்தில்மட்டும் பொய்ப்படலாமோ? கண்ணா! மணிவண்ணா! என் மனச்சுடரே! என் சிந்தைக்கினிய செல்வரே! எனது ஆருயிர்த் தலைவரே! 'பிராட்டியும் பெருமாளும் அன்பர்களைக் கைவிட்டுவிட்டாலும், அடைக்கலம் புகுந்தவர்களுக்கு ஆறுதலளிக்கும் பெருமானது செங்கமலவண்ண மென் மலர்த்திருவடிகள் அவ்வன்பர்களைக் கைவிட்டுவிடா'—என்று முன்னோர் கூறிய அருள்மொழியும் பொய்ப்படலாமோ? தஞ்சமடைந்த அடியேன் சஞ்சலம் மிகுந்து தவிக்கும்போது, 'அஞ்சல்' 'அஞ்சல்' என்றருள்செய்து நெஞ்சத் தவிப்பை நீக்கியருளத் திருவுள்ளம் இரங்கவேண்டியது உனது தனிப்பெருங் கடமையன்றோ? தஞ்சமடைந்தோர்க்கு 'அஞ்சல்' என்றருள் செய்து அவர்களது சஞ்சலத்தை அகற்றவேண்டியது, 'வீரர்' எனும் பெயர் தாங்கிய ஒவ்வொருவருக்கும் உரிய சீரிய கடமையன்றோ! அருள் நிரம்பிய அகத்தினராகிய வீரர்களுக்கெல்லாம் சிகாமணியாகிய நீயே அக் கடமையை மறந்துவிடுவாயானால், அருளோடு கூடிய சீரிய வீரம் பூவுலகில் எவ்வாறு வளரக்கூடும்?

"ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே!
அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம் யேதத் மம வ்ரதம்"—

('உனக்கே அடிமைப்பட்டேன்'—என்று ஒருமுறை கூறி இரந்து நிற்பவன் எவனாயினும், அவனுக்கு 'அஞ்சேல்!' என்று அருள் செய்வது, நான் என்றும் மேற்கொண்டுள்ள விரதம்"—) என்று ஸ்ரீராமாவதாரகாலத்தில் நீ அருளிய அறமொழியை இன்று மறந்துவிட்டாயோ? அறத்திற்குக் கேடு சூழ்ந்த இரக்கமற்ற அரக்கர்களை வதைத்தருளிய வீரசிகாமணியே! அறநெறி தவறாத நன்னெறி பின்பற்றி நடக்க ஆர்வம் மிகுந்து நிற்கும் மெய்யன்பர்களிடம் திருவுளம் இரங்கித் திருவருள்புரியும் ஆரியர்கோனே! 'எந்த நாள் கருணைக்கு உரித்தாகும் நாள் என்று என் இதயம் ஏங்கி வாட்ட', 'என்னுடைய எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம்' புண்பட்டுக்கொண்டிருப்பது, எனது ஹிருதய கமலத்தில் கோயில்கொண்டுள்ள நீ அறியாததோ?

"சங்க சக்ர கதாபாணே! த்வாரகா நிலய! அச்யுத!
கோவிந்த! புண்டரீகாக்ஷ! ரக்ஷமாம் சரணாகதம்!!"—

என்று உட்சோதியிற் கலந்து உலகத்தை மறந்து ஒருமையுற்று, 'ஹரி! ஹரி!! ஹரி!!! கண்ணா அபயம்! அபயம்!! உனக்கு அபயம்!!!'—என்று கொடியோன் கொடுமை சகிக்க இயலாமல் பாஞ்சாலி பதறிக் கதறி முறையிட்டு நின்றபோது, விரைந்து வந்து அருள் செய்த உனது தனிப்பெருங் கருணையை என்றேனும் எனது ஹிருதயம் மறந்துவிடுமோ? அடியேன் எனக்காக—எனது நலத்திற்காக—எனது சுகத்திற்காக இவ்வுலகில் வாழ்ந்திருக்க விரும்பவில்லை என்பதையும்; உன்பொருட்டே—உனது திருவருட் பெருமையை உணர்ந்தும் மெய்யடியார்களின் அன்பு கனிந்தொழுகும் அருட்பாக்களின் சுவையை அனுபவிப்பதற்காகவும், ஆன்ம உருக்கத்திற்கேற்ற அன்பு நிலையங்களாகிய ஆலயங்களில் கோயில் கொண்டுள்ள உனது அருள் திருவுருவைக் கண்ணாரக் காணவும் உனது திருவருட் சிறப்பை வாயார வாழ்த்தவும் உனது அருள் வடிவைக் கையாரத் தொழவும் அன்பர் பணி செய்து ஆனந்திக்கவுமே உனது லீலாவிபூதியாகிய இப்பூவுலகில் தங்கியிருக்க விரும்பி



நிற்கின்றேன் என்பதையும் உனது திருவுள்ளம் நன்கு உணருமன்றோ! 'என் நீர்மை கண்டு இரங்கி,' 'இது தகாது' என்று எளியேற்கு இன்னருள் செய்வது, அடியேனது ஹிருதயமாகிய சிங்காசனத்தில் வீற்றிருந்தருளும் உனது முதற்பெருங் கடமையன்றோ! தவறினும் சினவாத அன்னையாகவும் என்னை அன்பொடு காத்தருளும் இன்பத் தந்தையாகவும், உண்மை உணர்த்தி சமரச சன்மார்க்கத்திற் புகுத்தும் தவப்பயனாக அமைந்த சற்குருவாகவும், நினைப்பினும் அடியேனது நெஞ்சை ஆனந்தக்கடலாடச்செய்வித்தருளும் ஆருயிர்த் தலைவராகவும் விளங்கும் கருணாநிதியாகிய கண்ணபிரானே! அடியேனது முறையீட்டைத் திருச்செவிகளில் ஏற்றுத் திருவருள்புரிய உனது திருவுள்ளம் இரங்கும் நாள் எந்நாளோ?



குறிப்பு:—இம்முறையீடு, நீழ்கண்ட தேசிய கவிச்சிரேஷ்டராகிய திரு—சுப்பிரமணிய பாரதியாரின் இருபாக்களில் பொதிந்து கிடக்கும் அரும்பெரும் பொருள்களை இயன்ற வகையில் எடுத்துக்காட்ட முயன்றதன் பயனாக அமைந்த சிற்றுரையாகும்:—

என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்று எமது அன்னை கைவிலங்குகள் போகும்?
என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?
அன்று ஒரு பாரதம் ஆக்க வந்தோனே!
ஆரியர் வாழ்வினை ஆதரிப்போனே!
வென்றி தரும் துணை நின் அருள் அன்றோ!
மெய்யடி யோம் இனி வாடுதல் நன்றோ?
பஞ்சமும் நோயும் நின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறு இனி யார்க்கோ?
தஞ்சம் அடைந்த பின் கைவிடலாமோ!
தாயுந் தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
'அஞ்சல்' என்று அருள் செய்யும் கடமை இலாயோ?
ஆரிய! நீயும் நின் அறம் மறந்தாயோ?
வெஞ்செயல் அரக்கரை வீட்டிடுவோனே!
வீர சிகாமணி! ஆரியர் கோனே!




# பிராட்டியார்

(ஸ்ரீமதி. பண்டித-அகிலாம்பிகை அம்மையார்.)

சென்ற சஞ்சிகையில் தசரதர் பிராட்டியார் மனதில் வீறிட்டெழுச்சி பெற்றிருக்கக்கூடிய கோபத்தையும் கொதிப்பையும் தணிக்கவேண்டி,

"கங்கை மற்றுநின் கற்பினை யுலகுக்கு காட்ட
அங்கி புக்கிடென் றுணர்த்திய தருமனத் தடையேல்
சங்கை யுற்றவர் பெறுவது முண்டது சரதம்
கங்கை நாடுடைக் கணவனை முனிவுறக் கருதேல்"

என்று கூறிய செய்யுளின் கருத்து ஒருவாறு விளக்கப்பட்டது. அதன் ஈற்றடியாகிய "கங்கை நாடுடைக் கணவனை" என்ற விசேடணத்திற்கு மட்டில் தொடர்ந்து பொருள் காண்பது நலம். உண்மையில் நீ எத்துணைப் பரிசுத்தையோ அத்துணை பரிசுத்தன் உனது கணவனும், மக்கள் செய்த பஞ்ச மகா பாதகங்களையும் போக்குவது கங்கை; அக்கங்கை நீரினாற்சூழ்ந்து வளங்கொழிக்கும் நாடு கோசலம்; அக்கோசல நாட்டுக்கு உரிய அரசன் இராமன். அவனால் ஆளப்படக்கூடியதும் அவனைத் தோற்றுவித்ததுமான புண்ணியம் பூத்த அக்கோசல நாட்டில் வாழும் குடிமக்களும் ஒழுக்கந் தவறார். இதற்கு,

"ஆசலம்புரி யைம் பொறி வாளியும்
காசலம்பு முலையவர் கண் ணெனும்
பூசல் அம்பும் நெறியின் புறம் செலாக்
கோசலம்"

என்று நாட்டுப் படலத்தில் தொடங்கிய செய்யுளே பெருஞ் சான்றாகும்.

மாபெருந் தவத்தினரையும் மூவரையும் தனது வில்லாற்றலுக்கு அடி வணங்கச் செய்யும் காம வேந்தனும் கோசல நாட்டில் நுழையின் குறும்பு செய்ய அஞ்சுவான் என்றால் அத்தகைய சிறப்புடைய நாட்டை ஆளும் அரசவன்னல் எத்தகைய மேலோனாதல் வேண்டும். ஆதலின் அத்தகைய கணவனை முனிவுறக் கருதேல் என்றும் அத் தொடரில் மிளிர்கின்றது. தவிரத் தான் பரதாரங்களையோ, பொது மகளிரையோ, விரும்பும் ஆண் மகனும் தனது



மனையாள் பிறனை நாடுவதைச் சகித்தல் உலகில் இல்லை. அவ்வாறு அத்தகைய ஒழுக்கங் குன்றிய கணவனுக்கு மாலையிட்ட பெண் கற்புடையவளாயின் அக்கணவன் தவறுவதால் தானும் தவறலாமென எண்ணுவதுமில்லை. தன்பாற் றவறு நேரின் கண்டிக்கவோ, கைவிடவோ தனது (அத்தவறிய நடையுள்ள) கணவனுக்கு உரிமை யில்லையென்று கருதுவதுமில்லை. அங்ஙனமிருக்க நடைகோணாத குடிமக்களைக் கொண்ட கங்கை நாடுடைய ஏகபத்தினி விரதனாகிய கணவனை உலகாசாரம்பற்றி நோக்கினும் நீ கோபித்தல் அழகன்று; பொறுக்க வேண்டியதே என்னும் பொருளும் அதில் அமைந்து கிடக்கின்றது.

இவ்வாறு நீதி புகலத் தொடங்கிய அரசர்க்கரசன் என் மைந்தன் என்று கூறாமல் நின் கணவன் என்றே குறித்ததும் ஈண்டு தனது நடுநிலை யுணர்ச்சியை வெளியிடுவதாகின்றது. ஆதலின் இது மைந்தன் என்னும் அன்பினால் உரைப்பதன்று. முதியோன் முறைமைப்படி நீதியை விளக்கியதாகும் என்பது உய்த்துணரக் கிடக்கின்றது. இத்துணை விரிவாகக் கூறிய மன்னர் மன்னன் பின்னும் அமைதியுறாமல் மேலும் தக்கதாகிய சான்றும் பகர்கின்றார். அதாவது,

"பொன்னைத் தீயிடைப் பெய்தல் அப்பொன்னுடைத் தூய்மை
தன்னைக் காட்டுதற் கென்பது மணக்கோளல் தகுதி
உன்னைக் காட்டினன் கற்பினுக் காசியென் றுலகில்
பின்னைக் காட்டுதற் கரியதென் றெண்ணியப் பெரியோன்"

பொன்னைப் புடத்தி விடுவோர் எவரும் அப்பொன்னின் மாற்றின் உயர்வினைக் காண்பதற்கே யென்னும் உதாரணத்தை நீ மனதில் ஏற்றுக்கொள்ளுவது பெருமை தருவதாகும். அவ்வாறே உலகத்திலேயே ஒப்பற்ற கற்பினுக்கு நீயே அரசியென்பதை இவ்வுலகோர் கண்டு துதிக்கும் பொருட்டு இவ்வினையாற்றச் செய்தனன். இத்தருணம் சென்றால் இனி இதற்கிணையாகிய சமயம் வாய்த்திடாதென்பதே கருத்தாகும். இந்த சந்தர்ப்பத்திலும் நான் கூறும் உதாரணத்தை நீ ஒப்புக்கொள்ளுதல் வேண்டும் என்று ஆணையிடத் துணியாது தயங்கி, "நீ மனக்கோளல் (உனது பெருமைக்குத்) தகுதி எனவேசக்கிரவர்த்தி நயம்படக் கூறியிருக்கின்றார். அறுபதினாயிரம் ஆண்டுகள் உறுபகையின்றி நீதி பரிபாலனம் புரிந்த பேரரசன் இவ்விடயம் உலக நடைக்கு மன்னிக்கவும் மறக்கவும் தக்கதல்லவென்பதை நன்கு உணர்ந்திருக்கிறார். குற்றம் புரிந்தோர் எக்காரணம் பற்றியோ தண்டிக்கப்படாமல் மன்னிப்புப் பெறுவது இழுக்கன்று. ஆனால் குற்றமற்றவர்கள் குற்றம் புரிந்தவர்போற் கொடிய தண்டனைக்குள்ளாக்கப்படுவது நீதி பரிபாலன முறையில் பெருங் குற்றமாகும். இத்தகைய நிலையில் தண்டனைக் குள்ளாக்கப்பட்ட மைதிலியால் நயந்து குறையிரந்து வேண்டுவதைத் தவிரத் தான் சக்கிரவர்த்தியாக விருந்த காலத்தில் இராமன் திருமால் என்றும், சீதை திருமகள் என்றும் பல சான்றுகளால் அறுமானித்திருக்கலாமாயினும், பூதவுடல் நீத்து விண்ணுலகடைந்து பிதா மகனுடன் சமமான ஆதனத்தில் வீற்றிருக்கும் இஞ்ஞான்று இவ்விருவர்களும் இன்னார் இன்னார் என நன்கு உணர்ந்திருக்கின்றார். எனவே காத்தற் கடவுளாகிய நெடுமாலின் செய்கை குற்றமுடையதென எங்ஙனம் துணியக்கூடும். இங்ஙனமாக இவ்விருவகை யுணர்ச்சிகளுக்கிடையில் தசரதர் பேசவேண்டியவரானார். இச்செய்யுளிலும் இராமன் என்றுரையாமல் இப்பெரியோன் என்று குறிப்பால் சுட்டுகின்றார்

இக்கவியில் பொன் என்ற தனி மொழிக்கு இலக்குமி என்று பொருள் உண்டாதலின் நீ இலக்குமியே எனவும் திருமாலே நெடியோன், பெருமாள் என்று வழக்காற்றிற் குறிப்பதுண்டாதலால், பெரியோன் என்ற சொல் இலக்குமியாகிய உன்னைத் திருமார்பில் தரித்த பெரியோனே இவன் என்றும் குறிப்பால் உணர்த்தியதாகும். தவிரப் பிற உலோகங்களாயின் நெருப்பில் இட்டாற் கருகிப் பொலிவிழக்கும். பொன்னோ நெருப்பில் இட இடப் பொலிவு அதிகரிக்கும். ஆதலின் மாதர்கள் வரிசையில் நீ மாற்றுயர்ந்த தங்கமென்பதை உன்னை யுடையவன் உணர்ந்திருந்தமையால் இத்தகைய சோதனைக் குள்ளாக்கத் தயங்கவில்லை. தன்பால் உள்ளது. வேறு உலோகங்களி லொன்றாகிய போலிப் பொன் என்னும் ஐயம் இருக்குமாகில் இதனைச் செய்ய அஞ்சியிருத்தல்கூடும். அவ்வாறின்றி யுன் அறிவரிய அருமையை மூவரிலொருவனாகிய இவன் உணர்ந்தவனாதலின் உன் கற்பின் பிரகாசம் எல்லா உலகங்களிலும் ஒளி வீசும்படி செய்யத் துணிந்தான். இவ்வாறு மனதிற்கொண்டு பொறை கூர்வது உனது பெருமைக்குப் பின்னும் சிறப்பாகும் என்பதே இக் கவியின் உள்ளுறை என்பது மிகையாகாது. இத்துணை விரிவாகக் கூறிய பின்னும் தொடர்ந்து மேலும்,

"பெண் பிறந்தவர் அருந்ததியே முதற் பெருமைப்
பண் பிறந்தவர்க் கருங்கல மாகிய பாவாய்
மண் பிறந்தகம் உனக்குநீ வானின்றும் வந்தாய்
எண் பிறந்த நின்குணங் களுக்கினி யிழுக்கிலையால்"

என்று சிறப்பிக்கின்றார். முதலில் அநுமான் கூற்றாகக் "கற்பினுக்கணி" என்று வருணித்தார். இங்கு தசரதர் வாயிலாக "பண் பிறந்தவர்க் கருங்கல மாகிய பாவாய்" எனத் துதிக்கின்றார். பின்னர் மண்டோதரி மொழியாக "காந்தையருக் கணியனைய ஜானகியார்" என்று செப்புகின்றார் நமது கவியரசர். இந் நுட்பம் பெரிதும் சிந்திக்கற்பாலது.

"மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத் தோள் நல்லார்க் கணியும்போல்"

எனவால் மங்கல மடந்தையருக் அணிகலன் இன்றி யமையாததாகும். அத்தகைய அணி அருந்ததியாதிய ஒப்பில்லாக் கற்புக் கடவுளர்கட்கும் பிராட்டியாரே யென்பது நன்கு வலியுறுத்தப் படுகிறது. அதிலும் தசரதர் அருங்கலம் என்று மொழிந்தது பின்னும் சிறப்பாயிற்று. அருமையாகிய கலன் மாதர்களுக்கு மாங்கல்யமே யாகும். மற்றைய அணிகலன்களைக் காப்பது அம்மாங்கல்யமாதலின் அரியதாயிற்று. நீ கற்பரசிகளுக்கு மங்கல அணிபோல் பொலிவதால் அன்னோர் கற்புடையவர்களாக மற்றை யணிகள் போலப் பொலிகின்றனர். அம்மடவார் உள்ளத்தின் ஊடே புகுந்து உரம் பெற்று நிலவுவதும் உனது தெய்வக் கற்பின் பகுதியே யாதும் என்பது குறிப்பு.

அன்றியும் சூரியன் உதியாமற் போகுமாறும் மூவரும் தொட்டிற் குழவிகளாகவும் சபித்தவர்களும் கைப்பிடித்த கணவர்கள் முன் தனது மானங் குலைய அரசவையில் செயலாற்றிய கொடியனுடைய பிரேத சரீரத்தின் மீதிருந்தே விரித்த குழல் முடிப்பேனென்ற பாஞ்சாலியும் நீதிகோணிய மன்னன் நாடு மண்மாரி பெய்து மறைய கடுஞ் சாப மளித்த கண்ணகியும் இன்னோரன்ன



பிறரும் கற்பரசிகளே. ஆனால் அன்னோர் கோபத்திற் காளானவர்கள் குற்றம் புரிந்தவர்கள் மட்டிலல்ல. அவர்களைச் சார்ந்திருந்த குற்றமற்ற பிறருமாவர். கற்பைக் காத்துக்கொள்வதற்குக் கோபம் தீவிரமான ஆயுதமே யாகும். ஆயினும் பிராட்டியார் கையாண்ட ஆயுதம் முனை மழுங்காத கூரிய பொறுமை என்னும் சீரிய ஆயுதமாகும். துன்பம் தாங்க முடியாதபோது தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முடிவு செய்தாரே யன்றித் தன்னை நலி செய்த அரக்கனாதியரை "எல்லை நீத்த உலகங்கள் யாவுமென் சொல்லினாற் சுடுவேன்" என்னும் நம்பிக்கை யிருந்தும், அவ்வாறு சபித்தழிக்க எண்ணவில்லை. இதுவே பிராட்டியாருக்கும் மற்ற அருந்ததியாதிய கற்புடை மடவார்களுக்கும் உள்ள பேதமாகும். பின்னரும் கணவனால் இழித்துரையாடி அனற்புகப் பணித்த போதும் தனது பெரிய பொறைக்குணம் குன்றாது வனத்துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கினார்; காயத்தால் என்பதின்றி மனத்தினால் வாக்கினால் மறுவுற்றேனெனில் சினத்தினாற் சுடுதி யென்று அருளினார். இத்தகைய பொறுமைக் குணம் உன்பால் உருக்கொண்டு திகழ்ந்த காரணம்—நினக்கு மண் பிறந்தகம். அகழ்வாரைத் தாங்குவதன்றோ நிலத்தியல்பு. அந் நிலத்தினைத் தாயகமாகக் கொண்ட நீ எவ்வகை குற்றம் புரிந்தவர்களையும் பொறுப்பது இயற்கை. இக் குறிப்பு நின் கணவன் செய்த குற்றத்தையும் உனது பெருந் தகுதி நோக்கிப் பொறுத்தல் நலம் என்று மறை முகமாக உணர்த்தியதாகும். தவிர நீ வானின்றும் வந்தாய் என்பதால் பிருதிவி சம்பந்தம் ஒன்று மட்டில் உனக்குரியதல்ல. ஐம்பெரும் பூதங்களுக்கும் தலையாகிய ஆகாயத்திலிருந்தும் உலகுய்ய மண்ணிடை மலர்ந்தாய்; ஆகவே சாதாரண மக்களுக்குரிய குற்றம் பாராட்டும் குணம் உன்பால் எழுதலரிது "வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும் ஊனு முயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும் ஊடுருவிக் கலந்து நீக்கமறத் தேங்கி நிற்கும் உலக முதற்காரண சக்தி நீயாகின்றாய். இதை நினைவு கூர்ந்து இந்த நிகழ்ச்சியைப் பொறுப்பாயேல் "என் பிறந்த நின் குணங்களுக்கினி இழுக்கிலையால்" உனது தெய்வத் தன்மைக்கு இனிக் குறைபா டென்பதில்லையாகும் என்றும் அறியக் கூறினார். தனது வாதத்தைப் பிராட்டியார் திருவுளத்தில் ஏற்றதாகிய குறி இதுகாறும் முக கமலத்தில் காணப்படாமையினாலேயே நெடுநேரம் பல வகையாலும் இதம்பட மொழிந்தனர். இவ்வளவும் சொல்லிய பின்னர் பிராட்டியாரின் திருமனத்து "யாதும் உன்னச் செய்யலோர் முனிவின்மை மனக்கொளா வுவந்தான் என்றருளினர் கவி. பிராட்டியார் திருவுளத்தில் சிறிதும் கோப உணர்ச்சியின்றி ஆறிய தண்ணீர்போல் சாந்தம் உற்றதை அவரது மலர்ந்த முகக்குறிப்பால் உணர்ந்து தசரதர் மிகமிக மகிழ்ந்தார்; உயர்குல மாதர்கள் எப்போதும் கணவனை யீன்ற பிதாவிடமும் கணவனுடன் பிறந்த வயது முதிர்ந்த சகோதரர்களிடமும் உரையாடுதல் என்பது வழக்கா றன்று. இவ்வுலக வழக்கினையும் கம்ப நாடர் இடம் கண்டு அமைக்கத் தவறவில்லை. முதியோர் மருகியர் பால் தம் கருத்தை வெளியிடுதல் மரபு; அம்மருகியர் விடை பகர்தல் முறைமை யன்று. அதிக கஷ்டமான விஷயத்தில் தலையிட்டு வெற்றி பெற்ற தசரதர் பிறகு இலக்குவனைத் தழுவி ஆனந்தக்கண்ணீர் சொரிந்து

"மைந்த, எண்ணி னீக்கரும் பிறவியும் என்னெஞ்சி னிறந்த
புண்ணு நீக்கினை உமையனைத் தொடர்ந்துடன் போந்தாய்."

எனவும்.

"புரந்தரன் பெரும் பகைஞனைப் பொரவென்ற வன்றன்
பரம்புயர்ந்த தோளாற்றலே தேவரும் பலரும்
நிரந்தரம் புகல்கின்றது நீயிந்த வுலகின்
அரந்தை யாம்பகை துடைத்தற நிறுத்தினை யையா."

என்று இந்திரஜித்தை வென்ற வெற்றியைப்பற்றி அமரர் நாட்டில் புகழப்படும் சிறப்பையும், தமையனைத் தொடர்ந்து வனவாசத்திலும் அரக்கர் வதத்திலும் விளைந்த துன்பங்களில் பெரும் பாகத்தைத் தனதாக்கிய வினைத்திட்பத்தையும் குறிப்பிட்டு மகிழ்ந்து ஆசி புகன்றார்.

மதி நுட்பத்திற் சிறந்த இலக்குவன் இராகவன் குறிப்பின்படி அனல் அமைக்க என் துணிந்தான் என ஓர் ஐயம் எழலாம். தான் இராகவனுக்குத் துணையாக வனம்புக விடை கோரியபோது தனது தாயாகிய சுமித்திரா தேவியார்,

"மகனே யிவன் பின்செல், தம்பி என்னும் படியன்று
அடியாரினில் ஏவல் செய்தி."

எனத் தாஸனாக இருந்து பணிசெய் எனக் கூறினாரே யன்றித் தம்பியாக விரு, மந்திரியாக இரு என்று பணித்தாரில்லை. அம்மாதாவின் கட்டளையைச் சிரத்தாலேற்று தாய் சொற்றுறவாது தொண்டாற்றினா ராதலின் இராமன் குறிப்பினை மறுக்க முடியாதவ ராயினார். ஆகவே இலக்குவன் எந்த சமயத்திலும் எக்காரணம் பற்றியும் குற்றம்பட நடந்தவனல்ல. அது அவர் அறிவுக்கடவுள் என்று புகலப்படும் ஆதிசேடனின் அம்சம் என்று போற்றுவதின் கருத்துமாகும். இவைகள் அனைத்தையும் உடனிருந்து கண்டும் கேட்டும் வந்த தாசரதி ஒரு சிறிதும் தந்தையர், வாதம், சோகம், தன் கருத்திலுக்கு ஒவ்வாததெனக் குறிப்பாலும் உணர்த்தினாரல்லர். இதனால் தேவியார் பால் ஐயம் கொண்டு அனல் குளிக்கப் பணித்தவர் அன்றென்பது தெளியப்பட்டது. பின்னர் தசரதர் தனது தவப்புதல்வனாகிய இராமனை நோக்கி உனக்கு வேண்டிய வரம் கேள் என உரைத்தார். மைந்தன், தந்தையே தம்மை இவ்வுலகை நீத்த பின் சுவர்க்கத்தில் கண்டு துன்பம் தீருவேன் என்று எண்ணியிருந்தேன். அவ்வாறின்றி இதே வுடலுடன் இன்றே காணும் பேறு பெற்றேன். இனியும் எனக்கு மகிழ்ச்சி தருவது யாது என விடை பகர்கின்றார். நாராயண மூர்த்தியே தன் மைந்தன் என்று நன்கு தெரிந்திருந்தாலும் மனித வடிவில் இருப்பதால் தான் வரம் அளிக்கும் உரிமைபெற்றவ ராயினார். பிருதிவி சம்பந்தம் ஏற்பட்ட பின் மைந்தனென்னும் வாஞ்சை தந்தையையும் தந்தை யென்னும் பந்தம் தனயனையும் விட்டகலுவ தென்பதில்லை. இதற்கிதுவே தக்க சான்றாகும். ஆயினும் ஏதாவதொன்று கேளென வற்புறுத்தக் கேட்ட இராமன்,

"தீயனென்று நீ துறந்தவென் தெய்வமு மகனும்
தாயும் தம்பியுமாம் வரம் தருகெனத் தாழ்ந்தான்."

என்று சிற்றன்னையாகிய கைகேயியை மன்னித்து பரதனை மைந்தனாகக் கொள்ளல் வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றார். தசரதர் தற்காலம் முற்றுமுணர்ந்தவரா யிருந்தும் பரதனை மன்னிக்க இசைந்தாரேயன்றி, சடை முடி தரித்து விரதவேடம் பூண்டு உன்னை வனம்புகச் செய்த அப்பாவியை மன்



னிக்க இசையேன் என்றுரைத்ததாகத் தெரிகிறது. இஃதொன்றே பூர்வ ஜென்ம வாசனையின் வல்லமைக்கு ஒப்பற்ற உதாரணமாகும். விண்ணவர் சூழ்ச்சியால் மனைவி மனம் திரிந்தாள் என்பதைக் கண்டுகொண்டபின்னரும்,

"விரத வேடமற்றுதவிய பாவிமேல் விளிவு
சாத நீங்கலதா மென்றான்."

என்று சத்தியமாக அவன்மேலுள்ள கோபம் நீங்கவில்லை யென்று மெய்யுரை பகர்ந்தார் தசரதர். இது மக்களுக்குரிய இயல்பே யாகும். இங்ஙனம் புகன்ற மன்னர் மன்னவர்தான் பிராட்டியை நோக்கி உனது திருமனத்தில் முனிவுறக் கருதேல் எனக் கோரினார். 'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம், சொல்லிய வண்ணம் செயல்' என்பதை அறியாமலா கூறினார் தெய்வப்புலவர். ஆனால் பிராட்டியார் தெய்வமாதர்க்கும் தெய்வம் ஆதலினால் அவரது ஒப்பற்ற பெருங்கருணைக் கேற்ப பொறை கூர்தல் வேண்டுமென்றே தசரதர் எதிர்பார்த்தாரேயன்றி வேறன்று; செயற்கரிய செய்தல் பெரியார்க்கே இயலுமன்றி ஏனையோர்கட்கு இயலுவ தன்று. பிராட்டியாரின் பெருமையைப் பின்னும் எடுத்துக்காட்டும் சான்றாகத் திகழ்வது குறித்தே இத்துணை விரிவாக இதனை ஆராய வேண்டியதாயிற்று.

"Funny" Magzin of India.

(Bi-monthly) Published on the 5th & 20th.

*GIVES THE BEST OF EVERYTHING*

**Jokes, Stories, Serials, Humorous articles, Cartoons of great events and Competitions.**

LUCKY NUMBER SCHEME & FREE PUZZLE PRIZE OUR ADDITIONAL FEATURES.

**Price As. 1-6.**

**AVAILABLE AT ALL STALLS & NEWS AGENCIES.**

or, *Apply to:—*

**The "Funny Magzin" Office,**
*No. 6, Lawyer Chinnathambi Mudali St.,*
**Sowcarpet, MADRAS.**

# சந்திரவதனு
## (ஓர் சரித்திரக் கதை.)

(வி. சங்கரய்யர்.)

(754-பக்கத் தொடர்ச்சி.)

உடனே குசையா சக்கரவர்த்தியை அண்டி அவர் காதில் ஏதோ சில வார்த்தைகள் ரஹஸ்யமாகச் சொல்லிவிட்டு அவ்வறையை விட்டு நீங்கினன். உடனே சக்கரவர்த்தியும் தான் அணிந்துகொண் டிருந்த நாற்பது முத்தடங்கிய ஒரு முத்து மாலையை அவன் கழுத்தில் போட்டார். அன்றிரவு அங்கேயே தங்கிவிட்டார். அதுமுதல் அவ்வரண்மனைக்குத் தினமும் வரவும் ஆரம்பித்துவிட்டார்.

1611வது வருஷ தினக் கொண்டாட்டத்தன்று நூர்மஹாலை சக்கரவர்த்தி 'ஜகஜ்ஜோதி' என்ற பொருளுள்ள 'நூர்ஜஹான்' என்ற பட்டப்பெயர் கொடுத்து தன் மனைவி யாக்கிக் கொண்டார். அன்று முதல் ஜகஜ் ஜோதியே ஆளும் அரசியானள். அவளிட்டதே சட்டமாயிற்று. ராஜ்யத்தின், சகல காரியங்களையும் அவளே மேல் பார்வை பார்த்து வந்தாள். ஒரு மிருகவேட்டையில் தன் முதல் புருஷனைப் போல் ஒரு பெரும் புலியைத் தானகவே ஆயுதமின்றிக் கொன்றிருக்கிறள்.

தன் பிதாவான கியாஸ் பிரதான மந்திரியாக்கப் பட்டார். தன் சகோதரனை அஸப்கான் ராஜ்ய நிர்வாக அதிகாரியானர். அரசருக்குப் பதிலாக நூர் ஜஹானே கையெழுத்தும் போட ஆரம்பித்துவிட்டாள். அரசனும் ஜகஜ் ஜோதி கைப் பாவையாகவே ஆடினர். கஷ்டப்படுகிறவர்களுக்கும் தன்னை நாடி விருப்பவர்களுக்கும் வேண்டிய பண வுதவி செய்துவந்தாள். சக்கரவர்த்தி பகிரங்கமாக மது சாப்பிட்டு வந்த வழக்கத்தை நிறுத்தி விட்டாள். ஆனல் 1612வது வருஷக் கொண்டாட்டம் நடப்பதற்குள் ஜிஹாங்கரின் பிரிய மனைவிகளில் ஆறுபேர்களை இறக்கும்படி நூர்ஜஹான் செய்து விட்டாள்.

கியாஸும் அவர் புதல்வர்களும் மிக நல்லவர்கள். இவர்கள் அடக்க ஒடுக்கங்களும் புத்திசாலித்தனமும் தைரியமும் மிகவும் மெச்சத்தக்கவைகளே. அப்படி யிருந்த காரணத்தாலேயே அவர்களிடம் மஹா அக்பருக்கு அதிக அன்பும் அபிமானமு மிருந்தது. கியாஸ் தாரான சிந்தை யுள்ளவராகவும் சட்ட முறைகளில் அதிக தேர்ச்சி யுள்ளவருமாகவே இருந்தார். கியாஸ் மந்திரியாக யிருந்த காலம் முழுவதும் நூர்ஜஹானின் அதிகாரம் சக்கரவர்த்தியோடு மாத்திரமே இருந்தது. கியாஸ் அவளைக் கெட்ட வழிக்குப் போக வொட்டாமல் கண்டித்துக்கொண்டே வந்தார்.



### அத்தியாயம் 7.

ஜிஹாங்கீருக்கு, குஸ்ரு, பார்விஸ், குர்ரம், ஷஹ்ரியார் என்று நான்கு புதல்வர்கள் இருந்தார்கள். குஸ்ரு ராஜாமான்சிங்கின் சகோதரியான அம்பர் தேசத்து இளவரசியின் குமாரன். ஜிஹாங்கிர் பட்டத்துக்கு வந்ததும் குஸ்ரு சிறையாக்கப்பட்ட விஷயம் முன்னமேயே சொல்லப்பட் டிருக்கிறது. பிகானீர் வம்சத்து ஜோதிபாயின் குமாரன் பார்விஸ். அம்பர் தேசத்து மற்றொரு இளவரசியின் மகன் குர்ரம்—ஷஹ்ரியாரும் ஒரு ராஜபுத்திர ராணியின் மகனே.

இவர்களில் குர்ரம் மட்டுமே தன்னுடைய சாமர்த்தியத்தாலும், யோக்யதையாலும் எல்லா சகோதரர்களையும் விட மேன்மையாகவும் தனது பிதாமஹரான அக்பரைப்போல நற்குண முடையவனுகவும் விளங்கினன். தன் தந்தையிட மிருந்த கெட்ட குணங்கள் இவனிடம் கிடையா.

இவன் 1612-ம் வருஷம் தனது 21-வது வயதில் பானுபேகம் என்பவளை விவாஹம் செய்து கொண்டான். அப்பொழுது அவளுக்கு வயது இருபது. இவள் கியாஸின் மகனும் நூர்ஜஹானின் சகோதரனுமான அஸப்ஜாவின் அருமைப் புதல்வி. இவள் தனது அதி நுட்பமான புத்தி சாமர்த்தியத்தையும், கைத்திறமையையும் நற்குணத்தையும் நன்கு பரீக்ஷித்து தெரிந்து அவளை குர்ரம் விவாகம் செய்துகொண்டான். பானுபேகம் என்ற மும்தாஜ் மஹாலும் தன் ஜீவித முறையில் தன் கடமைகளைச் சரிவர முடிப்பதாலும் தன் கணவன் மனத்தைத் தன் வசப்படுத்திக்கொண்டாளே தவிர தன் அத்தையான நூர்ஜஹானைப்போல் தன் புருஷனைக் கெட்டவழிகளால் வசப்படுத்திக் கொள்ளவில்லை.

எந்த அரசனுக்கும் இதுவரை கீழ்ப்படியாமலும், எவனுடைய கண்ணிலும் தென்படாமலும், மலைக்குகைகளில் மானத்துக் கஞ்சி ஒளிந்து வசித்து வந்தும் இருந்த ராணு உமாசிங்கை, குர்ரம் 1614-ல் தனக்கு முன் தலை வணங்கும்படி செய்துவிட்டான்.

இதை யறிந்த ஜிஹாங்கீர் அதிக சந்தோஷ மடைந்தார். குர்ரமும், தன் பாட்டனுரைப்போல் ராணுவுக்கு எல்லாவித மரியாதைகளும் செய்தான்.

1616-ல் குர்ரம் தக்ஷிணத்தில் ஏற்பட்ட சில கலகங்களை தலையெடுக்க வொட்டாமல் அடக்கிவிட்டான். இதையும் சக்கரவர்த்தி கேள்விப்பட்டதும் தன் புதல்வனுக்கு 'உலகத்தை வென்றவன்' என்ற பொருளுள்ள 'ஷாஜஹான்' என்ற பட்டப்பெயர் கொடுத்தார். அவரே இளவரசர் என்றும் பகிரங்கப்படுத்தினர். இது நூர்ஜஹானுக்கும் சம்மதமாகவே யிருந்தது.

### அத்தியாயம் 8.

இங்கிலாண்டு தேசத்தரசரான முதலாவது ஜேம்ஸ் அரசனிட மிருந்து ராஜ தூதராக வந்தவர் தாமஸ்ரோ அரச தர்பாருக்கு (1615-ம் வருஷம் டிசெம்பர் மாதம் 23 தேதி) வந்தார். இவர் கல்வியில் சிறந்தவர், அழகிய வடிவமும் பெருந் தன்மையு முடையவர். இவர் [illegible] ரத்தில் மாத்திரம் வியாபாரம் செய்ய உத்தர[illegible] முதல் ஆங்கிலேய வர்த்தகர்கள் யாதொரு [illegible] மின்றி வியாபாரம் செய்யத் தொடங்கினர்கள்.

187518

1621-ல் மறுபடியும் மாலிக் ஆம்பர் தக்ஷிணத்தில் கலகத்துக்கு ஆரம்பித்து விட்டான். இப்பொழுது ஷாஜஹான் கூர்ஜரத்தின் கவர்னராகவிருந்து வந்தான். அவனை டில்லிக்கு வரவழைத்து தக்ஷிணத்தில் ஏற்பட்ட கலகத்தை அடக்கும்பொருட்டு அங்கே செல்லக் கட்டளையிடப்பட்டது.

ஸர் தாமஸ்ரோ முதன் முதலில் அரசரைப் பார்க்க வந்தபொழுது சக்கரவர்த்திக்கு வைரங்களாலும், இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்ட கௌன் ஒன்று கொடுத்திருந்தார். இது இப்பொழுது நூர்ஜஹானிடமிருந்தது. ஷாஜஹான் தக்ஷிணத்துக்குப் புறப்படும் முன் நூர்ஜஹான் அவனைத் தன்னறைக்கு வரவழைத்து முன் கூறிய கவுனை அவனுக்குப் பரிசளித்தாள். பிறகு அவனுக்குத் தன் குமாரியை விவாஹம் செய்து கொடுப்பதாகக் கூறினாள். தவிர தன்னையும் காதலிக்கும்படி வேண்டினாள்.

முதலில் சிங்க சங்காரனையும், பிறகு தன் பிதாவையும் காதலித்தவள் இப்பொழுது தன்னையும் காதலிப்பதாகக் கூறிய அவள் மொழியை ஷாஜஹான் அங்கீகாரம் செய்யமுடியாது என்று கூறிவிட்டான். ஷாஜஹானின் மொழியானது நூர்ஜஹான் மனதை அதிகமாகப் புண்படுத்தியது. அது முதல் அவள் ஷாஜஹானின் முடிவு காண்பதற்குள்ள ஏற்பாடு செய்ய ஆரம்பித்தனள்.

தன் குமாரியை ஷஹ்ரியாருக்கு 1621-ல் விவாஹம் செய்து கொடுத்தாள். அவனையே இளவரசனாகவும் நிர்மானித்தாள். ஷாஜஹானும் தக்ஷிணத்தில் சென்று வெகு சீக்கிரத்தில் கலகத்தை அடக்கிவிட்டுத் திரும்பிவிட்டார்.

தகப்பனார், மகன், மகள் மூவரும் யோஜித்து குஸ்ருவைக் கொலையாளிகளை விட்டு ரஹஸ்யமாக கொலை செய்வித்து அக் குற்றத்தை ஷாஜஹான் மீது சுமத்தினார்கள். கியாஸும் 1622-ல் மரணமடைந்தார். இதுவரையிலும் தகப்பனருக்கு அடங்கியிருந்த நூர்ஜஹானுக்கு இப்பொழுது பூரண அதிகாரம் கிடைத்துவிட்டது. அஸப்கான் பிரதம மந்திரியாக்கப்பட்டான். அவனும் தன் தங்கை கைப்பதுமையாகவே யிருந்தான். இச் சமயத்தில் கந்தஹாரில் ஒரு கலஹம் ஏற்பட்டது. அதை அடக்க ஷாஜஹானை அனுப்பினாள். இச் சண்டையின் இறுதியில் ஷாஜஹான் முடிவுக்கும் வழி தயாரித்தாள்.

இதை யுக்தியால் ஊகித் தறிந்த ஷாஜஹான் தன் உத்தியோகத்தை தன் தம்பியான ஷஹ்ரியாரிடம் தந்திரமாக ஒப்பித்துவிட்டான். இதை யறிந்த நூர்ஜஹான் விசாரணை யன்னியிலே ஷாஜஹான் ஜாகீர்களையெல்லாம் கைவசப்படுத்திக் கொள்ளவும் அவனைக் கொல்லவும் வழி தேடினாள்.

## அத்தியாயம் 9.

இதை யறிந்த பிரதம மந்திரியான அஸப்கானும் தளகர்த்தரான அஸப்ஜாவும் அதிக வருத்தப்பட்டார்கள். இதை ஷாஜஹானும் கலஹம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிந்துகொண்டான். அனேக ராஜபுத்திரர்களும் அவனுக்கு உதவிபுரிய முன் வந்தார்கள்.

இச் சமயத்தில் காபூல் கவர்னர் மஹபத்கான் என்றொருவன். இவன் உதவியால் ஷாஜஹானை அடக்க நூர்ஜஹான் நிர்மானித்தாள். அவள் சக்கரவர்த்தியைப் பார்க்கவும் கூட ஷாஜஹானைச் சம்மதிக்கவில்லை. மஹபத்கானை



அரண்மனையின் தனியான இடத்துக்கு வரவழைத்து அவனிடம் தன் கருத்தை நூர்ஜஹான் தெரிவித்தாள்.

மஹபத்கான் ஷாஜஹானை பல இடங்களில் புறங்காட்டி ஓடும்படிச் செய்தான். ஷாஜஹான் தக்ஷிணத்துக்குச் சென்று மாலிக் ஆம்பரை அடைக்கலம் அடைந்தான். அங்கும் மஹபத்கான் சென்று அவர்களைத் தோற்கடித்தான்.

இனி வேறு வழியில்லையென்று தெரிந்து, தன் கஷ்ட நிலைமையை வர்ணித்து பிதாவுக்கு ஒரு கடிதம் ஷாஜஹான் எழுதினான். இந்தக் கடிதத்தைப் பார்த்த அரசன் மனம் தத்தளித்தது. என்ன செய்வார் பாவம். ஷாஜஹானுக்கு அவர் புதல்வர் மூவர்களையும் அரண்மனையில் தன்னிடம் விட்டுவிடும்படி நூர்ஜஹான் உத்தரவளித்தாள். அவ்வாறே ஷாஜஹானும் செய்தான். ஆனால் தான் மாத்திரம் அரண்மனைக்குச் செல்லவில்லை. பிதாவின் முகத்தில் விழிக்க வெட்கமாயிருக்கிறதாக ஒரு கடிதமும் எழுதிச் சக்கரவர்த்திக்கு அனுப்பிவிட்டான். ஏனென்றால் அரண்மனைக்குச் சென்றால் எவ்விதமாவது தன்னை நூர்ஜஹான் கொன்று விடுவாள் என்று அவனுக்குத் தெரியும்.

## அத்தியாயம் 10.

மஹபத்கானது வெற்றிகளைக் கண்டு சக்கரவர்த்தி அவனுக்குப் பல விதமான விருந்துகளும் விருதுகளும் அளித்தார். சக்கரவர்த்தியும் அதிக அபிமானமும் மதிப்பும் மஹபத்கானிடம் வைத்திருந்தார். அதைக் கண்டு நூர்ஜஹான் அசூயை கொண்டாள்—'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்றபடி சக்கரவர்த்தியின் அபிமானத்தையும் மதிப்பையும் அவர் மனதை விட்டு அகலும்படிச் செய்து விட்டாள் நமது நூர்ஜஹான்.

மஹபத்கானோ ஓர் ராஜபுத்திர வீரன். ராஜபுத்திர சைன்யத்துக்கு வெகு காலம் தளகர்த்தராக விருந்தவர். சித்தூர் மகாராணா பிரதாபஸிங்கின் சகோதரனை ஸாகர்ஜியின் குமாரன். ஸாகர்ஜி தன் சகோதரனை பிரதாபஸிங்குக்கு எதிரியான அக்பருடன் சேர்ந்து கொண்டார். இவர் சாமர்த்தியத்தை அம்மஹான் மெச்சி இவரைக் காபூலுக்கு ராஜப்பிரதிநிதியாக நியமித்தார். சித்தூரும் ஸாகர்ஜி வசம் ஒப்புவிக்கப்பட்டது. ஆனால் 1607-ல் ஸாகர்ஜி தன் சகோதரனுக்குச் செய்த தீங்கை நினைத்து மிகவும் வருத்தப்பட்டார். சித்தூரை தன் சகோதர புத்திரனை உம்ராவிடம் ஒப்பித்துவிட்டு தன்னுயிரை மாய்த்துக் கொண்டார். இவர் புத்திரனே நமது மஹபத்கான். இவன் மஹம்மத் மதத்தில் சேர்ந்துவிட்டான். தன் தகப்பனுக்குப் பின் இவனே காபூல் ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான்.

சக்கரவர்த்தி தன்னுடன் நடந்துகொள்ளும் விதத்தில் மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கக் காரணம் நூர்ஜஹானே என்று மஹபத்கான் தெரிந்துகொண்டான். காலக்கிரமத்தில் மஹபத்கானின் அதிகாரங்களும் குறைக்கப்பட்டன. அவர் மனதை புண் படுத்தக் கூடிய பல கடிதங்களும் அவருக்கு அனுப்பப்பட்டன.

## அத்தியாயம் 11.

1626-ம் வருஷம் மார்ச் மாதத்தில் ஜிஹாங்கிர் காபூலுக்கு போய்க்கொண்டிருந்தார். லாஹூருக்குச் சமீபத்தில் ஓரிடத்தில் ஒரு நாள் மாலைப்

பொழுதில் சக்கரவர்த்தியின் சேனை ஒரு ஆற்றைத் தாண்டி அக் கரைக்குப் போய்விட்டது. சக்கரவர்த்தி ஆற்றின் இக்கரையில் கூடாரத்தில் இரவு கழித்தார். ஆற்றின் குறுக்கே ஒரு மரப்பாலம் போடப்பட்டிருந்தது. ஆற்றில் பிரவாஹமோ அதிகம்.

மஹாபத்கானின் மருமகனை ஒருநாள் சக்கரவர்த்தி ராஜசபையில் செய்த அவமானத்தைக் கேட்ட மஹாபத்கான் பழிக்குப் பழி வாங்கத் தீர்மானித்துத் தன் 5000 ராஜபுத்திர சேனையுடன் சக்கரவர்த்தியிருக்கும் கூடாரத்துக்கு அன்றுமாலை வந்து சேர்ந்தான். அன்றிரவே யாருமறியாமல் மரப்பாலத்தை தீயிட்டு கொளுத்திவிட்டான். கூடாரத்திற்குள் நுழைந்து படுத்துறங்கும் சக்கரவர்த்தியை மஹாபத்கான் தன் படையுடன் சூழ்ந்துகொண்டான். நூர்ஜஹான் அச்சமயம் அக்கரையில் சேனைகளுடன் போயிருந்தாள்.

சக்கரவர்த்தியும் கண்விழித்துப் பார்த்து திடுக்கிட்டெழுந்து, 'என்ன முகம்மத்! இதென்ன விபரீதம்!" என்றார்.

'என் சத்துருவின் சதியோசனைக்கஞ்சி என் சக்கரவர்த்தியின் அபயத்தை நாடுகிறேன்' என்றான் மஹாபத்கான்.

'அபயம் அளித்தோம்' என்றார் சக்கரவர்த்தி.

உடனே மஹாபத்கான் சக்ரவர்த்தியைத் தன் கூடாரத்துக்கு யானைமீது ஏற்றி அழைத்துக்கொண்டு சென்றான். நூர்ஜஹானைத் தொலைக்க வழி யோசித்தான். சக்கரவர்த்தியிடமிருந்து நூர்ஜஹான் சிரத்தை ராஜதுரோக குற்றத்திற்காக வாங்கும்படி உத்தரவும் பெற்றான்.

எதிர்கரையிலிருந்த நூர்ஜஹான் சக்ரவர்த்தியை மஹாபத்கான் சிறை செய்திருக்கும் சங்கதியை அறிந்து தன் சேனையுடன் மரப்பாலமிருந்த இடம் வந்தாள். பாலம் சாம்பலாக இருப்பதைக் கண்டாள். ஆற்றிலிறங்கி அதை கடக்கத் தீர்மானித்தாள்.

தண்ணீர் மிக்க ஆழமாக இருந்ததால் பலர் காட்டாற்றில் அமுங்கி இறந்தார்கள். நீந்திச் சென்றவர்கள் கரைக்குச் சமீபத்தில மஹாபத்கானின் சேனைகளின் கத்திக்கிரையானார்கள். நூர்ஜஹான் தன் யானைமீதேறிக் கொண்டு காட்டாற்றிலிருந்து தன் பாணங்களால் பல ராஜ புத்திரர்களைக் கொன்று வீழ்த்தினாள். யுத்தம் அதிக மும்முரமாக நடந்தது. நூர்ஜஹானும் கைதியாக்கப்பட்டாள். சக்ரவர்த்தியின் உத்தரவும் அவளுக்குக் காண்பிக்கப் பட்டன.

உடனே அவள் சக்ரவர்த்தியின் உத்தரவுக்குக் கீழ்ப்படத் தயாராக இருப்பதாயும் ஆனால் தான் இறந்துவிடுவதற்கு முன் தன் கணவனை ஒரு தடவை தரிசிக்க அனுமதி தரவேண்டுமென்றும் மஹாபத்கானை கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அப்படியே உத்தரவும் அளிக்கப்பட்டன. உடனே அவளும் மன்மதனின் பத்னியாகிய ரதிதேவியும் தன்னைக் கண்டு அஞ்சும் படியான வேஷத்துடன் சக்கரவர்த்தி முன் சென்றாள். அவர் முன் பக்கத்தில் மண்டியிட்டு அவர் கையை எடுத்து தன் மார்போடு அணைத்தாள். வாய் மொழி ஒன்றுமே கூறாமல் சக்கரவர்த்தியைத் தன் கண் வலையால் வசீகரித்து விட்டாள். சக்கரவர்த்தியும் மஹாபத்கானை நோக்கி அந்த மாதை மன்னித்து



உயிர்ப்பிச்சை கொடுக்கும்படி வேண்டினார். மஹாபத் அவளுக்கு அபயம் கொடுத்தான். நூர்ஜஹானும் சுயாதீனம் பெற்றாள். மஹாபத்கானுக்கும் முன்னிருந்த பதவியும் அதிகாரங்களும் அளிக்கப்பட்டன. ஆனால் நூர்ஜஹான் அவன்மீது பழிவாங்கச் சூழ்ச்சி செய்வதிலேயே அன்றுமுதல் தன் காலத்தைச் செலவழிக்க ஆரம்பித்தனள்.

## அத்தியாயம் 12.

மஹாபத்கானால் தனக்கேற்பட்ட அவமானத்தை நினைத்து அந்தவீரனை சினேகித்துக் கெடுக்கவேண்டுமென்று தீர்மானித்தாள். மஹாபத்கானிடம் அவளும் தன் உயிர்த்தோழனைப்போல் வெளித் தோற்றத்தில் நடந்துவந்தாள். அவளுடைய கடல்போல ஆழமான மனத்தை யாரால் அறியக்கூடும்.

மஹாபத்கானைக் கொல்ல ரஹஸ்யமான ஆட்களையும் நியமித்துவிட்டாள். ஆனால் தெய்வ சங்கல்பம் வேறு விதமாக இருந்தபடியால் அவனிடம் அது பலிக்கவில்லை. இத் துணிகரமான செய்கைக்குக் காரணம் நூர்ஜஹானே என்று அவனுக்குத் தெரியவந்தது.

தன் ரஹஸ்யம் மஹாபத்கானுக்குத் தெரிந்ததையறிந்த நூர்ஜஹான் தனக்கு எவ்விதமான அபாயம் நேரிடுமோ என்று நடுங்கினாள்.

ஆனால், நமது மஹாபத்கான் சுத்த ராஜபுத்திர வீரன். அவனுக்கோ ராஜ்யத்தில் விருப்பமில்லை. சத்ருவையும் எத்தனையே தடவை சரியான விதம் தண்டித்தாய்விட்டது. ஆகையால் சகல பந்தங்களையும் ஒழித்துவிட்டு சாசுவதப்பொருளாகிய பகவானைத் தியானிப்பதே இப்பிறவியின் பயன் என்று நினைத்தான். தன் உத்தியோகத்தையும் ராஜினாமா கொடுத்துவிட்டான். சக்கரவர்த்திக்கும் பூரண சுவாதீனங் கொடுத்துவிட்டான். தன் அபிமானத்துக்குப் பாத்திரர்களான வீரர்கள் அடங்கிய ஒரு சிறு சேனையுடன் வனம் சென்றான்.

இதே சரியான சமயமென்றுணர்ந்து, சக்கரவர்த்திக்குத் தெரியாமல் மஹாபத்கான் தலையை வாங்கி வருபவருக்கு சரியான இனாம் அளிப்பதாக நூர்ஜஹான் விளம்பரப்படுத்தினாள். இது அஸப்கானுக்கு கொஞ்சமும் நீதியாகத் தோன்றவில்லை. மஹாபத்கானின் யோக்கியதையும் உத்தம குணங்களும் ஒரு நாளும் மறக்கத்தக்கவையல்ல என்றும் அவனைக் காப்பாற்றுவதே தன் பொறுப்பென்றும் உறுதி செய்துகொண்டான்.

ஆகையால் அவ்வமைச்சன் மஹாபத்கானுக்கு ஆளனுப்பி அவனைத் தன்னிடம் ரஹஸ்யமாக அழைத்து வரும்படிச் செய்தான். அவ்வீரனும் தன் நண்பன் மொழியை நம்பி 400 மைல் தூரம் குதிரைமேலேறி சவாரிசெய்து டில்லிக்கும் லாஹூருக்கும் மத்தியில் ஓரிடத்தில் பாளையமடித்திருக்கும் அஸப்கானிடம் வந்துசேர்ந்தான். இரண்டு நண்பர்களும் ஒரு ஏகாந்தமான இடத்துக்குச் சென்று வெகுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

முடிவில் ஷாஜஹானே பட்டத்திற்குரியவன் என்று இருவரும் கூடித் தீர்மானித்தார்கள். ஷாஜஹானின் புஜபல பராக்கிரமத்தையும் புத்திகூர்மையையும் அநேக யுத்தங்களில் தன்னுடன் எதிர்த்து சண்டை செய்த பொழுது மஹாபத்கான் கண்டறிந்தவன், அவனே அஸப்கானின் மருமகன்.

அலப்கானுக்கும் அத்யந்த நண்பன். சக்ரவர்த்திக்கோ 60 வயதாகிவிட்டது. நூர்ஜஹானே ராஜ்யம் ஆண்டு வருகிறாள். ஆகையால் ஷாஜஹானுக்கு ஆளனுப்பி வரச்செய்து அவனைச் சிம்மாசனத்துக்குரியவனாக்கவேண்டுமென்று தீர்மானித்து உடனே ஷாஜஹானுக்கு ஆளனுப்பினார்கள்.

இப்படியிருக்கையில் கி. பி. 1627-ம் வருஷம் அக்டோபர் மாதம் 28-ந் தேதி ஜிஹாங்கிர் தனது 60வது வயதில் திடீரென்று லாஹூரில் மரணமடைந்தார்.

சக்கரவர்த்தி இறப்பதற்கு முன் ஷஹ்ரியானே பட்டத்திற்குரியவன் என்று ஜிஹாங்கிர் கையொப்பமிட்ட ஒரு உயில் நூர்ஜஹானால் தயாரிக்கப் பட்டிருந்தது. இந்த உயில் தயாரிக்கப்பட்ட சில நாட்களுக்குள் சக்கரவர்த்தியும் மரணமடைந்தார். சக்கரவர்த்தி இறந்ததும் ஷஹ்ரியானே பட்டத்திற்குரியவன் என்று விளம்பரப்படுத்தினாள் நூர்ஜஹான்.

ஆனால் இவளுடைய நடத்தைகளில் ஒன்றாவது திருப்திகரமாக யில்லையென்று நன்றாகத் தெரிந்திருந்த அலப்கானும் மஹபத்கானும் நூர்ஜஹானின் அதிகாரத்தின் அழிவுக்கும், ராஜ்யத்தின் நன்மைக்கும் வேண்டி ஷாஜஹானை உடனே டில்லிக்கு வரவழைத்தார்கள். நூர்ஜஹானை அரண்மனையிலிருந்து வெளியில் அனுப்பிவிட்டு அவளிடமிருந்த ஷாஜஹான் புதல்வர்களான தாரா, ஷுஜா, ஔரங்கசேப் இவர்களை தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள். ஷஹ்ரியானும் சிறையிலடைக்கப்பட்டான்.

1628-வது வருஷம் ஜனவரி மாதம் 26-ந் தேதி ஆக்ராவில் ஷாஜஹான் இந்தியா சக்கரவர்த்தியாக்கப்பட்டான். அலப்கான் மந்திரியாகவும் மஹபத்கான் சேனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

## அத்தியாயம் 13.

ஷாஜஹானும் நூர்ஜஹானுக்குப் போதுமான உபகாரச் சம்பளம் ஏற்படுத்தினார். அவளை அதிக மரியாதையாகவும் நடத்திவந்தார். அவளுக்கென்றே ஆக்ராவில் ஓர் அழகிய அரண்மனை கொடுக்கப்பட்டது.

அங்கு அவளும் அனேகவிரதங்களையும் அனுஷ்டித்தாள். கையில் ஜபமாலை தரித்து எப்பொழுதும் ஜபம் செய்தபடியே யிருந்தாள். உலகப்பற்றைத் துறந்து தன் வாழ்க்கையை கல்விப் பயிற்சியிலும் ஈசுவரத்தியானத்திலும் கழித்துவந்தாள்.

இவ்விதம் எவரும் அதிசயிக்கும்படியாக வாழ்ந்துவந்து 1646-ல் ஸத்கதியடைந்தாள். அவள் ஜீவித்திருந்தபொழுதே அவளால் ராவி நதிக்கரையில் மூன்று லக்ஷம் ரூபாய் செலவு செய்து கட்டப்பட்ட ஒரு தனிமையான கோரியின் கீழ் அவள் பிரேதம் புதைக்கப்பட்டது.

சிம்மத்தை ஆயுதமின்றி எதிர்த்து ஜயிக்கும் சக்தியையுடைய தன் கணவனைக் கொலைசெய்தவனான ஒரு சக்கரவர்த்தியை வெட்கமின்றி புனர் விவாகம் செய்துகொண்ட இந்த நூர்ஜஹானை நினைப்பதே பாபமென்று நிபுணர்களும் மஹமதியர்களும் கூறுகிறார்கள்.

பாட்டனார் அக்பருடைய புத்தி விசாலமும் திறமையும் ஷாஜஹானிடம் குடிகொண்டிருந்தது. ஆகையால் அவர் காலத்தில் அரசாட்சி வெகு நன்றாய் நடந்து வந்தது. குடிகளும் இவரைத் தங்கள் பிதா என்றே மதித்தார்கள்.

# ‘மணிமேகலை’ நூலின் அமைப்பும் சரித்திரக் குறிப்பும்

(B. V. இராமஸ்வாமி B. A., B. L. வக்கீல், சேலம்.)

(Rights Reserved.)

“ஆடகஞ் சாகின்ற தையும் அன்னமே நின்னுடைய
பாடகமுஞ் சீறடியும் பற்றினேன்—தேடரிய
அற்புதமே அம்மே அணங்கே மணநாறும்
கற்பகமே நாயேனைக் கா” —(திருவிளையாடல் புராணம்).

## I

## ஆசிரியர் வரலாறும் காலமும்.

பண்டைக்காலந் தொட்டு இயல் இசை நாடகமென்னும் முப்பிரிவினைக் கொண்டு இனிமை வாய்ந்த தமிழ்மொழி, இலக்கண இலக்கிய வரம்புகளுடன் தமிழகத்தில் பரவிச் செழித்தோங்கி மிளிர்ந்துவந்ததென்பது பாவலரே யன்றிப் பிறிதுமுள்ள எனையவரும் நன்குணர்ந்தது. பரத கண்டத்தின் தென்பாகத்தைத் “தமிழகம்” என்பர். (பதிற்று 2-ம்பத்து; புறம் 168; சிலப், 3: 37.) தமிழகத்தை ஆண்டு, தென் மொழியை வளர்த்த மன்னர்கள் சேர சோழ பாண்டியரென்ற முடியுடை வேந்தர் மூவராவர். இவரது ஆட்சிக் குட்பட்ட நிலப் பரப்பு முழுவதும் “வடவேங்கடம் தென் குமரி”கட்கு இடைப்பட்டதாகும். பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தும், “வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்” என மூவேந்தரது செங்கோல் முறை கூறப் பட்டுள்ளது. இம் மன்னவர்களின் ஆதரவுக் குட்பட்டு முதலிடை கடையென்னும் முச்சங்கங்கள் அக்காலத்து விளங்கியிருந்தன வென்பது பிரசித்தம். இவ்வரசரின் தொன்மையும், உயர்வும் விரிவாகத் தமிழின் தொன்மை கீழே சரித்திரக் குறிப்பில் வரையப்பட்டுள்ளன. மூச்சங்கங்களி லமர்ந்திருந்த புலவர் சிகாமணிகளில் கையாடப்பட்டுத் தெய்விக நறுமணங் கமழும் தனித் தமிழ்மொழி விளங்கா நின்றது. அம்மொழியின் கண் அப்புலவர் திலகங்களியற்றிய பலசிறப்பட்ட அருந் தமிழ் நூற்களிற் காலகதியில் இறந்தன போக எஞ்சி இக்காலத்துள்ள நூற்களை நோக்குழி, அக்காலத்தில் நந்தஞ் செந்தமிழ் மொழி பெற்றிருந்த மாட்சிமையும், தமிழகம் கொண்டிருந்த மேன்மையும், தமிழர்கள் பெற்றிருந்த நாகரிக முதிர்ச்சியும் குன்றிடை யிட்ட நந்தா விளக்கெனக் கூறுது புலப்படும். இங்ஙனமாக வளப்புற்றிருந்த சங்க நூற்கள் பலவற்றிலும், சங்க காப்பியமெனப் பெயர் பூண்ட ஐம்பெருங் காப்பிய நூற்களொருசிறப்பட்டன. அவைதாம் திருத்தக்க தேவரியற்றிய சிந்தாமணியும்; இளங்கோவடிகளியற்றிய சிலப்பதிகாரமும்; சீத்தலைச் சாத்தனா ரியற்றிய மணிமேகலையும்; வளையாபதியும் குண்டலகேசியு மென்பன.

இவ் வைந்தனுள், நூலின் பெருமைகளை மேலாக எடுத்துக் காட்டும், மணிமேகலை யென்ற காப்பிய நூலை இயற்றியவர் சாத்தனா ரென்னும் தமிழ்ப் பெரியார். இதனைத் தமிழ் நூல் உரையாசிரியரான பேராசிரியரும், "சீத்தலைச் சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலை" எனக் கூறுதல் காண்க. (தொல்செய் 240). அக்காலத்திய புலவர்களின் வரலாறு போன்றே இவ் வுத்தமக் கவியின் வரலாறும் எளிதில் உள்ளவாறு அறிந்திட முடியாமலிருக்கின்றது. பரம்பரையாகக் கிடைத்துள்ள செவிகளையும், நவீனமாக உள்ள கட்டுக் கதைகளையும் உண்மைச் சரித்திரமாகக் கொண்டு, கற்றறிந்த கவிகளின் வாழ்க்கை நாட்களின் சம்பவங்களை எழுதுவது நகைப்பையும் வியப்பையும் விளைவிக்குமாகலின் கற்றும் கேட்டும் ஆராய்ந்துமே, விடயங்களின் உண்மை வரலாறு இதுவென உணரவேண்டியுள்ளது. சாத்தனார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். வாணிகர் குலத்துதித்தவர். கூல வியாபாரஞ் செய்து வந்தவர்.

**மணிமேகலை ஆசிரியர்.**

(கூலமென்பது நெல்லுப் புல்லு வரகு தினை சாமை இறுங்கு தோரை இராகியென்பன. இதைப் புறப்பாட்டிலும் காண்க. (செ. 99) இவர் செய்துவந்த வியாபாரம் பற்றியே இவருக்குக் கூல வாணிகன் சாத்தனா ரெனப் பெயர் வந்ததென்பர். சாத்தனா ரென்பது தெய்வத்தால் வந்த பெயராகவும் இருக்கலாம். மதுரைச் சீத்தலைச் சாத்தனா ரென்றும், சீத்தலைச் சாத்தனாரென்றும் இவரை வேறு பெயரோடுங் கூறுகின்றனர். சங்க காலப் புலவருள் ஒரு பெயர் கொண்ட மறு புலவர் பலரிருந்தனராகலின், ஒருவரினின்றும் மற்றவரைப் பிரித்துக் காட்டுதற்காக அடைமொழிகள் கொடுத்து அழைக்கப்பட்டு வந்தனர். சாத்தனாரெனப் பெயர் கொண்ட புலவர்களும் அக்காலத்தில் பலரிருந்தமையின் அவர்களினின்றும் வேறுபடுத்த வேண்டி, மணிமேகலையின் ஆசிரியர், இங்ஙனமாகக் கூறப்பட்டிருக்கலாம். அன்றி, இவர் பற்றி யொழுகிவந்த சிறந்ததொரு கொள்கை இவரினின்றும் இணைபிரியா திருக்க வெனப் பெயரோடுங் கூட்டி அங்ஙனமாக உரைக்கப்பட்டு மிருக்கலாம். சீத்தலைச் சாத்தனாரென இப்புலவருக்குப் பெயர் வர இரு காரணங்கள் கூறப்பட்டுள்ளன. அவை, (1) தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றுவித்தற் பொருட்டு வரும் தமிழ் நூல்களில் சொற் குற்றங்களும், பொருட் குற்றங்களுமாகிய மாசு மறுக்களைக் காணுமிடத்துப் பெரிதும் வருத்தமுற்று, அவற்றினை ஆக்கியோர்களைக் கண்டித்துப் பேச

**பெயர்க் காரணம்**

மனங்கொள்ளாராய்ப் 'பிழைகளுள்ளனவே' என்று மனம் பெரிதும் நொந்து, அவைகளைக் காண நேர்ந்ததற்காகத் தமது தலையைக் குத்திக் கொள்வாரென்றும்; அக்காரணம் பற்றித் தமது தலையில் புண்பட்டுச் சீயோடிருந்தமையின், சீத்தலைச் சாத்தனா ரென்பது இவருக்குக் காரணப் பெயராயிற்றென்றும் கூறுவர், உரையாசிரியர் இளம் பூரணர், "சீத்தலைச் சாத்தன், தொடும் புறமருதி யென்பன. சினைப்பெயரொடு தொடர்ந்து வருமுதற் பெயர்" எனக் கூறுதல் இங்கு ஒப்பிட்டுக் காண்க. இவரது தலைக்குத்து, வழுக்களொன்றுமில்லாத வள்ளுவரின் நூலாகிய முப்பாலைக் கேட்ட பின்னர் நீங்கிற்றென்பர். இதனுண்மை மருத்துவன் தாமோதரனார் திருக்குறளின் சிறப்புப்பாயிரமாகிய திருவள்ளுவ மாலையில் அன்னாரின் குறளைச் சிறப்பித்து,

"சிந்நீர்க் கண்டந்தெறி சுக்குத் தேனளாய்
மோந்த பின் யார்க்குத் தலைக்குத்தில்—காந்தி



மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலாற்
றலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு."

என்று புகழ்ந்துள்ள செய்யுளால் வெளிப்படும். இதனால் சாத்தனாரின் தமிழபிமானமும், பரந்த நூற்பயிற்சியும், சிறந்த ஆராய்ச்சித் தன்மையும் நன்கு விளங்குகின்றன. திருவள்ளுவமாலையில் இவரது சாற்றுக்கவி யொன்றுமுளது. அதனாலும் இவரது பாஷாபிமானமும், தேசாபிமானமும் வெளிப்படுகின்றன.

(2) மற்றொரு சாரார் சீத்தலை என்னும் ஊரின் பெயரை இவர் கொண்டனரென்பர். இஃது உண்மையெனக் கொண்டிடின் திருவள்ளுவ மாலையில் "தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" என்ற அடிப்பொருளை வேறு எவ்வாறு கொள்வதென்பது புலப்படவில்லை. எக்காரணம்பற்றி இவருக்கு இப்பெயர் உளவாயிற்றென்பது இக்காலத்தில் நன்கு பெறப்படவில்லை.

கடைச்சங்கத் தொகை நூல்களில் ஒன்றாகிய எட்டுத்தொகை நூல்களில் சில பாக்களே யன்றிச் சாத்தனார், மணி மேகலையென்னும் இந்நூலைத் தவிர வேறு எந்நூலும் செய்துள்ளாரென்பது தெரியவில்லை. புறநானூற்றில், சித்திர மாடத்துத் துஞ்சிய, நன்மாறனை நோக்கி "வழுதி! நீ யாவர்க்கும் அருளினன். பொய்யைச் சகியோன். பகைவர்க்கு ஞாயிற்றையும், எம் போல்வார்க்குத் திங்களையும் ஒப்பை" யென்று அழகுபெற அருங் கருத்தை அமைத்துச் சென்ற செய்யுளின் செவ்வி காண்க. (புறம். 59.)

**சீத்தலைச் சாத்தனாரைப்பற்றிய பிற குறிப்புகள்.**

இப்புலவர் இருந்த காலத்தையும், இந்நூல் வெளிப்போந்து உலகில் உலவிவந்த ஆண்டையும், ஒருவாறாக அறியின் இந்நூலகத்துக் காணப்படும் சரித்திர சம்பந்தமான பல விஷயங்கள் எக்காலத்தை ஒட்டி இத் தென்னிந்திய நாட்டில் நடந்தன வென்பது தெரிய வரும். இவரை மதுரையை அரசிருக்கையாகக் கொண்டு, பாண்டிய மண்டலத்தை யாண்டுவந்த, ஆரியப் படை தந்த நெடுஞ்செழியன், வெற்றிவேற் செழியன், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி யென்ற இந்நால்வரின் காலத்திலு மிருந்தவ ரென்பர் கற்றறிந்தோர். நிரபராதியான கோவலன் சிலம்பின் காரணமாகக் கள்வனெனப் பெயர்பெற்றுக் கொலையுண்டதும்; கற்பலங்காரி கண்ணகியின் சீற்றத்திற் கிரையாகி எரிவாயுட் பட்டுச் சீரொடு விளங்கிய மதுரையம்பதி யடைந்த கேட்டையும்; அத்தொன்னகரின் மன்னன் நெடுஞ்செழியன் செங்கோல் கோணியதின் அவகேட்டிற்குத் தாங்காணாகித் தன்னுயிர் துறந்ததும்; கோவலனது காதற் பரத்தி மாதவியின் மகள் மணிமேகலை உலக வாழ்க்கையை வெறுத்துத் தாயொடும் துறவு கொண்ட செய்தியும்; பின் நிகழ்ந்தன பலவும் சாத்தனார் நேரில் அறிந்தவரென்பதும்; தாம் கண்டவாறு சேரர் பெருமான் செங்குட்டுவனுக்கு அறிவுறுத்தினா ரென்பதும், (சிலப். 25:65–66); அம்மன்னனால் அம்மாதுக்குக் கோயிலொன்று கட்டி வைத்துக் கிரமப்படி நித்திய பூசை நைவேத்தியங்களும் ஒழுங்காக நடக்கும்படி செய்தன ரென்பதும் நூல்களினின்றும் தெரிய வருகின்றன.

**"மணிமேகலை" பிறந்த வகை.**

சேரன் செங்குட்டுவனுக்குக் கண்ணகி மேம்பாடடைந்த செய்தியைப் பேரியாற்றங்கரையில் மலைவளங் காண மனைவியோடு அவனிருந்த சமயத்தில் சாத்தனார் கூறியபொழுது, உடனிருந்த அவனது சகோதரர் இளங்கோவடிகள் கேட்டுக்கொண் டிருந்தனரென்றும்; அதனால் கண்ணகியின் இனிய சரித்திரத்தைப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாகச் செய்தற்கு வேட்கை அவர்க் குண்டாயிற்றென்றும்; அவ்விச்சையை அவர் வெளியிடச் சாத்தனார், "அடிகள் நீரே அருளுக" என்று நவின்றனரென்றும்; அவர் சிலப்பதிகாரத்தைப் பாடிவரச் சாத்தனார் கேட்டு வந்தனரென்றும் கூறப்பட்டுள்ளன. இதன் உண்மை சிலப்பதிகாரத்தில்,

**இளங்கோவடிகள்**

> "உரைசால் அடிக ளருள மதுரைக்
> கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்"

(பதி:88–9) என வந்துள்ளதாலும், அந்நூலின் 'காட்சிக் காதை'யாலும் வெளிப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில், சாத்தனார் கோவலனது சரிதையைக் கூறக் கேட்டுச் செங்குட்டுவன் வருந்தியதாகவும், "நன்னெறியி னின்றும் தவறிய பாண்டியன், தான் செய்த குற்றத்தையுணர்ந்து வந்தனைப் பிற மன்னர்களின் செவியில் தனது செய்கை படுமுன்னரே பெற்று, இறந்தனனாகலின், அவனது கொடுங்கோலும் செங்கோலேயாகு"மென்று கூறியதாகவு முள்ளன. இக்கலைவிகளைக் கொண்டு நோக்குமிடத்துக் கொடுங்கோலஞ்சி உயிர் நீத்த வழுதியும், இச் சேரர் பெருந்தகையும் ஒரு காலத்தவராக இருத்தல் வேண்டுமென்பது மினிரும். "மணி மேகலை"யைச் சாத்தனார்பாட இளங்கோவடிகள் கேட்டு வந்தனரென்பது,

> "இளங் கோ வேந்தனருளொடு கேட்ப
> வளங் கெழு கூலவாணிகன் சாத்தன்
> மாவண் டமிழ்த்திற மணிமேகலை துற
> வாறைம் பாட்டினு ளறிய வைத்தனன்"

(மணி. பதி. 95-8) என்ற அடிகள் விளங்கக் கூறுகின்றன.

இவ்வாதாரங்களால் சாத்தனார், இளங்கோவடிகளின் மனதிற் கிசைந்த நட்பாளரென்பதும்; 'மணி மேகலை'யில் கூறப்பட்டுள்ள சரித்திரம் நிகழ்ந்த காலமும், இந்நூலாசிரியர்களின் காலமும் ஒன்றென்பதும்; இந்நூல் அவரால் தமிழ் மொழியில்தான் பாடப்பட்டதென்பதும்; இருபுலவரும் சேரன் செங்குட்டுவனின் காலத்தவரென்பதும்; ஒருவரியற்றிய நூலை மற்றொருவர் முன்னிலையில் அரங்கேற்றினரென்பதும் வானகத்தெழுந்த மதிபோன்று ஒளிருகின்றன.

**இளங்கோவடிகளும் சாத்தனாரும் சம காலத்தவர்**

சாத்தனார் செங்குட்டுவனது நட்பினரேயன்றி அவனது அவையில் வீற்றிருந்த புலவருமாவ ரென்பதை சிலப்பதிகாரம் கூறுகிறது. (பதிகம், 10; 25; 106). சிலப்பதிகாரத்திற்குச் சிறந்தவொரு உரையெழுதியளித்துள்ள தமிழ்க் கடலெல்லை கண்ட பெரியார் அடியார்க்கு நல்லார், பதிக உரையில், இளங்கோவடிகள் கோவலனது சரிதமொடு மணி மேகலையின் கதையினையும் தாமே தொகுத்து எழுதும்மெண்ணங் கொண்டிருந்தன ரென்றும்; தமது நண்பர் சாத்தனார் மணிமேகலையின்



துறவைப்பற்றிய செய்திகளை நூலாக அமைத்துள்ளன ரென்பதறிந்து தாம் கொண்டிருந்த எண்ணம் துறந்தனரென்றும் மொழிந்துள்ளனர். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதி முடித்தற்கு முன்பே சாத்தனார் மணிமேகலைத் துறவைப் பாடி முடித்தனரென்பது, இளங்கோவடிகள் "மணி மேகலை மேலுரைப் பொருண் முற்றிய சிலப்பதிகார முற்றும்" எனக் கூறுதலால் விளங்கும். (சில. நூற்கட்டுரை.)

சேரன் செங்குட்டுவனின் கால நிருணயத்தால் அவன் காலத்திலிருந்த இப் புலவர்களின் காலமும் இவரால் இயற்றப்பட்ட நூற்களின் காலமும், ஒருவாறாக இந்நூற்க ளியற்றப்பட்ட சங்கத்தி னிறுதிக்காலமும் தெரியவரும். செங்குட்டுவனின் வரலாறுகளை உணருதற்குச் சாதகமாகக் கிடைக்கப்பட்டுள்ள இலக்கியங்கள் பெரிதும் மதிப்புக்குரியன. இவ் வேந்தனின் உடன்பிறந்தவரும், துறவு பூண்ட பெரியாரும், தமிழாசிரியருமாகிய இளங்கோவடிகள் தாம் எழுதியுள்ள சிலப்பதிகாரத்தில் தமது மூத்தோனின் வாழ்க்கை வழிகளைத் தாம் நேரிற் கண்டவாறு விளங்கக் கூறியுள்ளனர். செங்குட்டுவனின் காலத்தை ஆராய்ந்த பெரியார் பலர், டாக்டர் பர்னெல், டாக்டர் கால்டுவெல் என்னும் மேனாட்டுப் புலவர்கள், தமிழர் கி. பி. எட்டு அல்லது ஒன்பதாவது நூற்றாண்டுகளுக்கு முன்னர் நன்னூற்களைக் கொண்டாரல்லர் எனக் கூறியொருபுறம் தமது கருத்துக்களை வெளியிட்டனர். காலம் சென்ற ஸ்ரீமான் கனகசபைப் பிள்ளையவர்கள் தமது புத்தகத்தில் (Tamils 1800 years Ago) சிலப்பதிகாரம் முதலிய சங்க காப்பியங்கள் கி. பி. ஒன்று அல்லது இரண்டாவது நூற்றாண்டினவைகளெனக் காரணங் காட்டி நிரூபிக்கின்றனர். ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளையவர்களும் சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சி பல செய்து, பத்துப் பாட்டைப்பற்றித் தாமெழுதியுள்ள கட்டுரையில் அக்கருத்தையே கொண்டுள்ளனர். (Christian College Magazine) தற்காலத்திய சரித்திர ஆராய்ச்சியாளர்கள், இச்சேரனை 2, அல்லது 3-ஆம் நூற்றாண்டினனாகவே கருதுகின்றனர். ('செந்தமிழ்' 4-ம் தொகுதி 525-7-பக்கம்,) செங்குட்டுவனது சரித்திரத்தை விரிவாக எழுதியுள்ள கற்றறிவாளர் ஸ்ரீமான், மு. இராகவையங்காரவர்கள், தாமெழுதியுள்ள அந்நூலில் பல காரணங்கள் காட்டி, இச்சேரன் மற்றும் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டவனெனக் கூறுகின்றனர். அவர்களின் கருத்துப்படி அச்சேரன், 4-அல்லது 5-ம் நூற்றாண்டினனாவன். பண்டிதர் சூர்ய நாராயண சாஸ்திரி யவர்கள், தமது தமிழ்மொழி வரலாற்றில், 'மணிமேகலை' ஆக்கப்பட்ட காலத்தைக் கி. பி. 100—600; ஆண்டுகளுக் குட்பட்ட கடைச் சங்கத்தின் 'பிற்கால' மென்று தலைப்பி லடக்கியுள்ளனர். பலவேறாக உள்ள இத்தகைய கருத்துக்களைத் திரட்டி, ஸ்ரீமான். சீனிவாசப்பிள்ளை யவர்கள் தமது "தமிழ்மொழி வரலாற்"றில்,"சங்கத்திறுதிக்காலம் இன்னதென்பதைப் புலவர் பல வகையாகக் கூறுகின்றனர். சிலர் கி. பி. பதினோராம் நூற்றாண்டு என்றும்; சிலர் எட்டாம் நூற்றாண்டு என்றும்; சிலர் ஐந்தாம் நூற்றாண்டு என்றும்; சிலர் மூன்றாம் நூற்றாண்டின் துவக்கம் என்றும்; இன்னும் பல வகையாகவும் கூறுவர். சரித்திர ஆராய்ச்சிக்காரர் பலருடைய கொள்கையாகிய 3-ம் நூற்றாண்டின் துவக்கத்தையே சங்கத்திறுதிக்காலம் என எனது கொள்கையாகக் கொண்டு எழுதுகின்றேன்" என்று தெளிவுடக் கூறியுள்ளது நோக்கற்பாலது.

**சாத்தனாரின் காலம்**

மேற்காட்டிய கொள்கைகளில் சேரன் செங்குட்டுவனது காலமும் சங்கத்திறுதிக்காலமும், கி. பி. 1-முதல் 6-ம் நூற்றாண்டு வரையிலும், முன்னும் பின்னுமாக, ஒன்றற்கொன்று மாறாக இருப்பினும், சரித்திர ஆராய்ச்சியினரின் கொள்கைப்படி, சங்கத்திறுதிக்காலமும், செங்குட்டுவன் காலமும், கி. பி. 2. அல்லது 3-ம் நூற்றாண்டாக இருத்தல் வேண்டுமெனக் கொள்ளுதல் இழுக்குடைத்தாகாது. விரிவஞ்சி அவ்வவர் கூறும் காரணங்கள் வரையப்படவில்லை. செங்குட்டுவனின் சகோதரர் இளங்கோவடிகளும், அவரது நண்பர் சாத்தனாரும் அக்காலத்தவராகவே இருத்தல் வேண்டும். எனவே 'மணிமேகலை' எழுதப்பட்ட காலமும், இந்நூலகத்துக் கூறப்பட்டுள்ள பழக்க வழக்கங்கள் அநுசரிக்கப்பட்டு வந்த காலம், அவ்வாண்டுகளாகவே இருத்தல் வேண்டும். இவ்விஷயமாகப் புலவர்கள் பலவிதமாக எண்ணுவது அவ்வவர் நூற்களில் விரிவாகக் காண்க.

**நூலின் காலம்**

மணிமேகலை முதலிய ஐம்பெருங் காப்பியங்களும் சங்க நூற்களென்று அக்காலத்திலும், இக்காலத்திலும் கூறப்பட்டு வந்தபோதிலும், கால ஆராய்ச்சியாளர் இவற்றைச் சங்க காலத்தில் எழுதப்பட்டுச் சங்கத்தின் அங்கத்தினர்களால் ஏற்புடைத்தெனக் கொள்ளப்பட்ட சங்க நூற்களல்ல வென்கின்றனர். ஆயின் வருணனை, நடை, விஷயம் முதலியவற்றில் இவை சங்க நூற்களின் லக்ஷணங்களைக்கொண் டிருத்தலால் கடைச் சங்க மிருந்த காலத்தை யொட்டிய சங்க காலத்திய நூலெனத் தமிழறி மக்களால் கொண்டாடப்படுகின்றதென்பர். நூற் பரிசோதகர்கள் பலர் பலவிதமாக இவ் விஷயத்தைக் கூறுகின்றனர். ஒரு சாரார் கால ஆராய்ச்சி செய்திட்டு இதனைச் சங்க காலத்திய நூலல்லவென்றும், சங்க நூற்களின் பூரண அம்சங்களையும் ஒருங்கேகொண் டிருத்தலின் சங்க நூலே யென்றும் ஆதாரங்காட்டி அறைகின்றனர். மற்றொரு சாராரோ இது சங்கத்தினரின் அங்கீகாரத்திற்குக் கொடுக்கப்பட்டு அவர்களின் போற்றுதலைப் பெற்றதாகக் காட்டுதற்குப் போதிய சான்றுகளில்லையென்றும்; கடைச் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் இந்நூலாசிரியர் சாத்தனாரு மொருவராயிருந்தனரெனக் கூறப்படும் காரணமொன்றைக்கொண்டே, அவரியற்றிய இந்நூலும் சங்கநூலேயெனக் கூறுவது இழுக்குடைத்தாகு மென்பர். எக்கருத்து எவ்வெவர் எக்காரணத்தால் கொண் டிருப்பினும் பரம்பரையாக வழங்கி வருமாறு இது சங்க காப்பியமெனக் கூறுதலே ஏற்றதாகும்.

(தொடரும்.)

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் யாத மாதம் வரும் சஞ்சிகையின் மேலுறை விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

# சத்தியாக்கிரக நீக்கம்

## காந்தியடிகள் கூறும் காரணம்

சென்ற சில வருஷங்களாக, அகில இந்திய காங்கிரஸ் மகாசபை தேசத்துக்குச் சுயராஜ்யம் பெறுவதற்காக அநுஷ்டித்து வந்த சத்தியாக்கிரக மென்னும் ஆயுதத்தை இனி நிறுத்திவிட வேண்டுமென்று அதை ஆரம்பித்து வைத்தவரும், அந்த சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவருமான மகாத்மா காந்தியடிகள் யோசனை கூறியுள்ளார். அவர் இந்த கைய முடிவுக்கு வந்ததன் காரணத்தையும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் விவரமாகக் கூறியுள்ளார். அதன் சாராம்சமாவது:—சத்தியாக்கிரக ஆசிரம வாசிகளுடன் கலந்து பேசியதன் பயனாக பூரண சுயராஜ்யம் சித்திபெற சத்தியாக்கிரகம் ஒரு மார்க்கமாக இருக்க வேண்டுமாயின், தற்போதைய நிலைமையில் ஒரே ஒருவர் அதிலும் நான் ஒருவனே சட்டமறுப்புக்கான பொறுப்பை வகிக்க வேண்டுமென்றும், வேறெவரும் தற்போதைக்குக் கூடாதென்றும் நான் தீர்மானம் செய்தேன். சத்தியாக்கிரகத்தின் கருத்து பூரணமாகப் பொதுஜனங்களுக்கு விளங்கவில்லை என்றே நான் உணருகின்றேன். அச்செய்தி நாட்டில் பரவுகையில் இடையே பல அன்னிய விஷயங்கள் அதில் புகுந்துவிட்டன. ஆன்ம சக்தி என்னும் ஆயுதத்தை ஆன்மீக சம்பந்தமற்ற இதர வழிகளின் மூலம் பிரயோகிப்பதால் அதன் சக்தி குறைந்துவிடுகிறதென்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆன்மார்த்தச் செய்திகள் தானாகப் பரவக்கூடியவை.

'சத்தியாக்கிரக மென்பது சுத்தமாக ஆன்மார்த்த ஆயுதம். உலக சம்பந்தமாகத் தோன்றுபவைகளை முன்னிட்டும் அதை உபயோகிக்கலாம். அதன் சக்தியை உணராத ஆண் பெண்களும் அதைப் பிரயோகிக்கலாம். ஆனால் அதை நடத்துபவர் இவ்வாயுதம் ஆன்மார்த்தமான தென்பதை அறிந்திருக்க வேண்டும். நான் சத்தியாக்கிரக நிபுணனாகி வருகிறேன் எனக் கூறுவேன். நான் இன்னும் சத்திய சோதனை செய்து வருகிறேன் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சத்தியாக்கிரகி தனக்கு முன்னுள்ள அடுத்த படியையே பார்க்கலாமே யன்றி அதற்கப்பால் பார்க்கக் கூடாது. ஆசிரம வாசிகளுடன் பேசிய பின் நான் தனியாக யாவற்றையும் ஆலோசித்தேன். தனிப்பட்ட குறைபாடுகளுக்கன்றி சுயராஜ்யத்துக்காகச் சட்ட மறுப்பு செய்வதை நிறுத்தி வைக்குமாறு எல்லா காங்கிரஸ்காரர்களுக்கும் யோசனை கூற வேண்டுமென்னும் முடிவுக்கு வந்தேன். சத்தியாக்கிரக

விஷயத்தை அவர்கள் எனக்கே விட்டுவிட வேண்டும். என்னைவிட இந்த சாஸ்திரத்தை அதிகமாக அறிந்து ஜனங்களின் நம்பிக்கையையும் பெற்ற வேறொருவர் முன்வராதவரை என் வாழ்நாளில் என் அனுமதிபெற்று என் மேற்பார்வையில் இவ்வியக்கத்தை மேற்கொண்டு நடத்தலாம.

'சத்தியாக்கிரகத்தை முதலில் கைக்கொண்டு அதை நடத்திவைத்தவன் என்னும் முறையில் நான் இந்த அபிப்பிராயத்தைக் கூறுகிறேன். என் யோசனையை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பின்பற்றிச் சுயராஜ்யப்போர் நடத்தி வருபவர்கள் இனி தயவுசெய்து சட்டமறுப்பை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தியாவில் விடுதலைப்போராட்டத்தின் நன்மைக்கு இதுவே மேலானவழி என்பதை நான் நிச்சயமாக உணர்ந்திருக்கிறேன். மனித வர்க்கத்தினர் கையாளும் ஆயுதங்களில் இதுவே மகத்தானது. இதில் நான் மனப்பூர்வமான நம்பிக்கை கொண்டிருக்கிறேன். பலாத்காரத்துக்கோ அன்றி ஆயுதத்துக்கோ பதிலாக சத்தியாக்கிரக ஆயுதம் உபயோகப்படுத்தலாமென்று கூறப்படுகிறது. எனவே பயங்கர இயக்கத்தினர் மனதிலும் தேசம் பூராவின் ஆண்மையையும் ஒடுக்கி பயங்கரப் புரட்சிக்காரர்களை வேருடன் ஒழிக்க விரும்பும் சர்க்கார் மனதிலும் சத்தியாக்கிரகத்தின் தத்துவம் பதியவேண்டுமென்பதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். ஆனால் பலர் பலவித எண்ணங்களுடன், சட்டமறுப்பு செய்ததன் பலன் மிகப் பெரிதாக இருக்கிறதாயினும் பயங்கரப் புரட்சியினர் மனதையோ, அல்லது சர்க்காரின் மனதையோ கவரவில்லை. கலப்பற்ற சுத்தமான சத்தியாக்கிரகம் இருபாலரின் மனதையும் நிச்சயம் கரைத்திருக்க வேண்டும். ஒரே சமயத்தில் தக்க யோக்கியதையுள்ள ஒருவரே இவ்வாயுதத்தை உபயோகிப்பதன் மூலமே இதன் உண்மையை அறியமுடியும். 'சத்தியாக்கிரகம் செய்ய எந்த நிமிஷமும் தயாராக இருக்கவேண்டியவர்கள் என்ன செய்யவேண்டும்? அவர்கள் முதலில் இதை கற்று அறிந்து தானாக வருமை பூண்டு சுயநல எண்ணங்களை விட்டு இதைச் சிறப்பிக்கவேண்டும். சட்டமறுப்பை இதுவரை செய்து வந்தவர்கள் இனி தேசிய நிர்மாண வேலைகளில் ஊக்கம் காண்பிக்கவேண்டும். தாங்களாகவே கையால் நூற்று கைத்தறியில் நெய்து கதரைப் பரப்பவேண்டும். எவரும் குறைகூறாத முறையில் நல்லொழுக்கத்துடன் வாழ்க்கையை நடத்தி வகுப்பு ஒற்றுமை பரவச் செய்யவேண்டும். தீண்டாமையை அடியோடு ஒழிக்கவேண்டும். மதுபானங்களை உபயோகிக்கும் மக்களிடம் நேர்முகமான சம்பந்தம் வைத்துக்கொண்டு அவர்களைச் சீர்படுத்தவேண்டும். சமதர்மம் பொதுவாகப் பரவச் செய்யவேண்டும். ஏழைகள் இவ்வித தொண்டு செய்யலாம். மற்றவர்கள் தேசத்திற்கு முக்கியமான சிறிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் வேலையில் ஈடுபடலாம். சட்டத்துக்கும் சர்க்காருக்கும் தாங்களாகக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்னும் கடமை அறிந்தவர்களே சட்டமறுப்பு இயக்கத்தில் சேரலாமென்பதை உணரவேண்டும்.'






அதிசீக்கிரத்தில் பெரும் பணக்காரனான ஒருவர் தம் பேர் பிரஸ்தாபமாக, தாம் ப[illegible] பள்ளிக்கூடத்தில் தம் செ[illegible] ஓர் கட்டடம் கட்டி வைக்க நினைத்து பழைய பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டரிடம் போய் தம் எண்ணத்தை வெளியிட்டு, தாம் படிக்குங் காலத்தில் எந்த வகைப் படிப்பில் அதிக உற்சாகங் காட்டினாரோ அப்படிப்பை விர்த்திபண்ணும் விஷயமாக ஓர் கட்டடம் கட்டத் தான் முன்வந்திருப்பதாகக் கூறினார்.

ஹெட்மாஸ்டர்:—(சற்று யோசித்துவிட்டு) ("நீங்கள் போர்டிங் பள்ளி மாணவருக்கு ஒரு படுக்கை யறை கட்டிக்கொடுத்தால்நன்றாயிருக்கும். நீங்கள் படிக்குங் காலத்தில் சதா தூங்கிக்கொண்டே தானிருப்பீர்கள்."

***



மோட்டார் பஸ்ஸில்உட்கார்ந்திருந்த ரெங்கநாதன் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார். பக்கத்திலிருந்த சாமிநாத ஐயர் முகத்தில் சிகரெட் புகை கப் கப் என்று அடித்துக்கொண்டே யிருந்தது. ஐயர் தாங்க மாட்டாமல், "சிகரெட் புகைக்க வேண்டுமானால் வீட்டிற்குப்போனபின் புகைக்கிறதுதானே" என்று சற்று எரிச்சலுடன் சொன்னார். ரெங்கநாதன், "என்ன ஐயர்வாள், இந்த சிகரெட் புகைக்கு இந்தப் பயம் பயந்தால் வருகிற உலக யுத்தத்தில் ஜெர்மானியன் விஷப் புகை விடப்போகிறானே அப்போது என்னதான் செய்யப்போகிறீர்களோ!"



ஓவர்ஸியர் மனைவி:—"உன் கணவன் இப்போ என்ன வேலை செய்கிறான்?"

மற்றவள்:—"இஞ்சினீர் வேலை"

ஓ. மனைவி: — "இஞ்சினீர் வேலையா? ஐயோ! அவனுக்கு ஒரு கோடு முதலாய் இழுக்கத் தெரியாதே".

மற்றவள்:—அந்த வேலைக்குக் கோடு ஏன் இழுக்க வேண்டும்? இஞ்சிச் சாற்றை எடுத்து இஞ்சி மூரபா செய்து விற்க வேண்டியது தானே".

***

ஒரு தனவான் ஒரு பழைய மோட்டார் கார் ஒன்று வாங்கி அது சரியாக ஓடாததனால் ரிப்பேர் செய்ய கம்பெனிக்குக் கொண்டுபோனார். கம்பெனிக்காரன் அதில் உள்ள கெடுதல்களை வினவ "அவர் ஊதுகுழல் தவிர மற்றவை யாவும் சப்தம் செய்கின்றன. அதற்காகத்தான் கொண்டுவந்தேன் என்றார்.

***



உபாத்தியாயர்:—"என்னடா! நீ கோபாலனுடைய பவுண்டன் பேனாவைத் திருடி உன் பாக்கெட்டிலேயே வைத்திருந்தும் கேட்டால் இல்லையென்று சாதித்துவிட்டாயே. இதுதானா நான் உனக்குப் படித்துக் கொடுத்தது?"

பையன்:—"நான் செய்தது குற்றமானால் 'உடையது விளம்பேல்' என்னும் பாட்டிற்கு அர்த்தம் எனக்குச் சரியாய் விளங்கும்படி நீங்களே தான் சொல்லிக்கொடுங்கள்".

***

உபாத்தியாயர்:—'அடே கஜூர், கணக்குப்போடாமல் ஏன் சும்மா உட்கார்ந்திருக்கிறாய்?

கஜூர்:—'இல்லீங்கசார், கணக்கு தப்பாபோட்ட தப்புனு திட்டுறீங்க. சரியா இருந்தா காப்பி அடிச்சேனு திட்டுறீங்க. அதனாலேதான் சும்மா இருக்கேன், ஸார்.





மதுவிலக்குப் பிரசாரகர் (நாவிதனைப் பார்த்து) "நீ கள் குடிக்கிறாயென்று கேள்விப் பட்டேனே. உண்மைதானா?"

நாவிதன்:— "என்னங்க சாமீ! நீங்க எல்லாரும் என்னைப் பார்த்து "குடி மகனே! குடி மகனே!"(அம்பட்டனே) என்று சொல்லும்போது, நான் குடிக்காமல் வேறென்ன செய்றது?"

***

ஒருவர்:—'என்ன ஸார், கொசுக்கடியை உங்களால் தாங்கமுடியாதா? அது ஒரு பிரமாதமா என்ன?

மற்றவர்:—'நீங்கள் கும்பகோணமா ஸார்?'

***

டாக்டர்:—"எஜமான் இருக்கிறாரா?"

வேலைக்காரன்:- இருக்கிறார். ஆனால் இன்றைக்கு யாரையும் பார்க்கமுடியாதென்று சொல்லியிருக்கிறார்."

டாக்டர்:—பார்க்க முடியாதா? இன்று காலையில் என்னோடு பேசிக்கொண்டிருக்கும்போது அவருக்குக் கண்ணில் ஏதும் கோளாறு இல்லையே!



***

அவன்:—நீ குடிகாரனென்று நான் கேள்விப்பட்டேனே, உண்மைதானா?

அவன்:—என்ன செய்கிறது! பாவம்! நீ பார்த்துக் குடிக்க சொல்லும்போது உன் தாட்சண்யம் தட்டாமல் கொஞ்சம் குடிப்பேன்.



தாய்:— "சாவித்திரிக்கு சங்கீதம் என்ன வருமோ இல்லியோ? பழைய உபாத்தியாயர் அவளுக்குச் சங்கீதத்திற்கான ஹேதுக்கள் எதுவுமே இடையாதுன்னு அவள் மேல் பழி போடுவரே!"

சாவித்திரியின் சங்கீத வல்லமையை உணர்ந்த புது உபாத்தியாயர்:— "ஆஹா! என்ன ஹேதுக்கள் வேண்டியது? சாவித்திரிக்கு வாயுங்கூட இல்லாமலா போயிருந்தது!"

***

முருகன்:—"டாக்டர் என்னை மாமிசம் அதிகமாக சாப்பிடப்படாது என்று சொன்னார்."

கேசவன்:—"நீ அவரைக் கோபமாகப் பேசினையா?"

முருகன்:—"ஆம், முதலில் நான் அப்படிதான் செய்தேன், ஆனால் அவர் எனக்கு பில் அனுப்பின பிறகு, அவர் சொல்லியது சரி என்று தெரிய வந்தது."

***

சந்துரு:—தாத்தா, இன்றைக்கு மணிமாத்திரம் என் பக்கத்தில் இல்லாவிட்டால் என்பாடு ரொம்பவும் கஷ்டம்தான்.

தாத்தா:—என்ன, என்ன நடந்தது?

சந்துரு:—பரீக்ஷையில் காப்பியடிக்கக் காண்பித்தான் தாத்தா!

***

டாக்டர்:—(தூக்கமில்லாத வியாதியைத் தீர்த்ததற்காக அவ்வியாதியைச் சொஸ்தப்படுத்திக்கொண்ட ஓர் மனிதனை நோக்கி) நீர் எப்போது உன்னுடைய பில்லுக்குப் பணம் கட்டப்போகிறீர்?

அந்தமனிதன்:—அது எனக்கு தெரியவராது. இப்போது எனக்கு நல்ல நித்திரை வந்துவிடுகிறது. அச்சமயம் என் ஜேபியிலிருந்து பணத்தை எல்லாம் என் பெண்சாதி திருடிக்கொள்ளுகிறாள்! நான் என்ன செய்யட்டும்.

***

மனைவி:—என்னருமை கண்ணாளா! நான் நேற்று பகல் தங்கள் காதில் அதிக ரகசியமான சங்கதியொன்றைச் சொன்னேனே, அது கவனத்திலிருக்கிறதா?

கணவன்:—என்னருமை கண்ணாட்டி! கண்ணுக்குப் பார்வை சற்று மட்டமாயிருக்கிறதுபோல் தோன்றுகிறது. என் வாயையன்றோ நீ காதென்று நினைத்தாய்! வாய்க்குப் பேசும் சக்தியேயொழிய கேட்கும்சக்தி கிடையாதே.




வால்முளைத்த குழந்தை:—லண்டன் ஆஸ்பத்திரி யொன்றில் பிறந்த குழந்தைக்குச் சுமார் 2 அங்குல நீளமுள்ள வால் முளைத்திருக்கிறதாம். அது முதலில் அரையங்குலமாக இருந்ததாம். அது அதிக சுருட்டையாக இருக்கிறதாம்.

***

காதுக்குப் பதில் பற்கள் உபயோகம்:—டாக்டர் பிரான்வில் என்னும் செவிடர் தமது சொத்தைப் பற்களின் வாயிலாக ஆகாயவசனி பிரசங்கத்தைக் கேட்கும் நூதன முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். அவர் ஒலி பெருக்கும் கருவியின் நடுவில் ஒரு குச்சியை வைத்து, அதன் மற்றொரு முனையைத் தமது சொத்தைப் பற்கள்மீது வைப்பதால், அதன்வாயிலாக ஒலியின் அசைவுகள் மூளைக்குச் செல்கிறதாம்.

***

19 முறை படையெடுத்த மாணவர்:—வார்ஸா இன்ஜினீயரிங் கல்லூரியில் வாசித்துவந்த ஒரு மாணவர், இன்ஜினீயர் பரீக்ஷைக்கு 19 தடவை சென்றும் அதில் தேறாது போய்விட்டாராம். கடைசியாக, 20வது முறை அவர் அப்பரீக்ஷைக்குச் சென்று தேர்ச்சிபெற்றாராம்.

***

சாம்பல் மழை:—சமீபத்தில் காபிக்கா ஆல்மா என்னும் தேசத்தில் சாம்பல் மழை பெய்ததாம். அதனோடு, ஆகாயத்தில் சுழல்காற்றும் வீசிற்றாம்.

***

மிகப் பழைய கோதுமை விதைகள்:—மசெஞ்சோ என்னும் நகரில் கல்லறையொன்றைத் திறந்து பார்க்கையில், அதனுள் 6000 வருஷங்களுக்கு முந்தின கோதுமை விதைகள் காணப்பட்டனவாம். இவற்றைப் பரிசீலனை செய்த டாக்டர் டானியல் ஹாமில்டன், இம்மாதிரியான கோதுமைகள் உலகத்திலேயே இல்லையென்று கூறுகிறார்.

***

448 பவுன் நிறையுள்ள மங்கை:—மேரிலிஞ்ச் என்னும் 18 வயதுள்ள மங்கை 448 பவுன் தேக நிறையுடையவளாயிருக்கிறாளாம். அவள் தையல் வேலையை நன்றாகச் செய்கிறாளாம். ஆனால் சினிமாவுக்குமட்டும் செல்வதில்லையாம்.

***

இரத்தம் வடியும் சிலை:—அஸ்டி என்னுமிடத்திலிருக்கும் கிறிஸ்தவ கோயிலிலுள்ள சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து சிலை காயத்திலிருந்து இரத்தம் வடித்துகொண்டிருக்கிறதாம். அதைப் பரிசோதனை செய்து பார்த்ததில் மனித இரத்தம்போலவே இருக்கிறதாம்.




திரு. ரூஸ்வெல்ட் அமெரிக்கத் தலைவராக வந்த ஒருவருட காலமாக 22,000 தந்திகளும் 16,20,000 காகிதங்களும் அவருக்கு வந்திருக்கின்றனவாம்.

* * * *

பிலிப்ரீல் என்பவர் 7—1—1834 அன்று டெலிபோன் என்னும் பேசுங்கருவியைக் கண்டுபிடித்தாராம்.

* * * *

உலகில் மொத்தம் 56,62,91,000 கிறிஸ்தவர்களும், 21,40,30,000 முஸ்லீம்களும், 21,04,00,000 இந்துக்களும் இருக்கிறார்கள் எனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

* * * *

இங்கிலாந்தில் நிமிஷமொன்றுக்கு 832883 கப் காப்பி செலவாகின்றதாம்.

* * * *

வேலையில்லாத பிரிட்டன் சிறுவர்கள் இருவர் தங்களுக்கு வேலையகப்படுமா என்று ஒரு வருடமாக 52108 மைல்கள் அலைந்து திரிந்திருக்கிறார்களாம்.

* * * *

சிகாகோ என்னுமிடத்தில் 2 வயதுக் குழந்தை சிறு மோட்டார் சைகிலொன்றைத் தானாகவே ஓட்டுகிறதாம்.

* * * *

லண்டனில் வெளியாகும் "யூனிவர்ஸ்" என்னும் வாரப்பத்திரிகை 67,5000 பிரதிகள் விற்பனையாகின்றனவாம்;

* * * *

24,00,00 மைல் தூரத்திலுள்ள சந்திரனிடமிருந்து வெளிச்சம் பூமிக்கு வருவதற்கு ஒன்றரை விநாடி நேரமாகிறதாம்.

* * * *

லண்டன்மா நகரிலுள்ள வியாபாரசபை யொன்றில் நடந்த டைப்ரைட்டிங் போட்டியில் ஒரு குருட்டுப்பெண் இரண்டாவது பரிசு பெற்றாளாம்.

* * * *

ஜர்மனியில் ஆல் கொகால் என்னுஞ் சாராயம் 100-க்கு 80 விகிதம் உருளைக்கிழங்கிலிருந்து எடுக்கப்படுகிறதாம். அவ்விதம் எடுக்கப்படும் சாராயத்தை வடிகட்டுந் தொழிற்சாலைகள் 30,000 இருக்கின்றனவாம்

* * * *

இங்கிலாந்து, மக்கள் கல்வியபிவிருத்திக்காக நிமிடமொன்று 650 பவுன் செலவு செய்கின்றதாம்.

# ஆசிரியர் குறிப்புக்கள்

## சத்தியாக்கிரக நிறுத்தம்

காந்தியடிகள் நாட்டு மக்கட்குச் சட்டமறுப்பை நிறுத்திவைக்குமாறு யோசனை சொல்லிவிட்டார். தம்மைத் தவிர இனிமேல் யாரும் சத்தியாக்கிரகம்-சட்டமறுப்பு செய்யக்கூடாது என்பதற்குச் சரியான சமாதானம் கூறியிருக்கிறார். சத்தியாக்கிரகம் ஒரு பெரிய ஆன்மார்த்த ஆயுதம் என்பது காந்தியடிகளின் அபிப்பிராயம். தேர்ச்சிபெற்ற அநுபவசாலிகளே அந்த ஆயுதத்தைக் கையாளவேண்டும் என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெளிவாய் எடுத்துக்காட்டியிருக்கிறார். "சத்தியாக்கிரக தர்மத்தை ஜனங்கள் இன்னும் சரியானபடி தெரிந்துகொள்ளவில்லை என்று எனக்குத் தோன்றுகின்றது. அத் தர்மத்தை அனுஷ்டித்துக் காட்டுவோருடைய தவறே இதற்குக் காரணம்" என்று காந்தியடிகள் தம்மீது பழியைச் சுமத்திக் கொள்ளுகிறார். இதுவே பெரியோர்களின் இயற்கை என்பதைத் தவிர அப்பழியை அவர்மீது சுமத்த நாம் விரும்பவில்லை.

---

## ஆந்திர களாவந்துல மகாநாடு

சென்றமாதம் மசூலிபட்டணத்தில் 9-வது ஆந்திர களாவந்துல (தேவதாசி) சீர்திருத்த மகாநாடு நடைபெற்றது. அம் மகாநாடு அச்சமூக முன்னேற்றத்திற்குரிய அநேக தீர்மானங்களைச் செய்திருக்கிறது. அவற்றுள் "கலியாணங்களில் மேளக் கச்சேரி செய்யப்போவது நமது சமூக முன்னேற்றத்திற்குப் பெருங் களங்கம். ஆகையால் அதை நீக்கிவிட வேண்டும்" என்பது ஒரு தீர்மானம். இத் தீர்மானத்தை நாம் தமிழ்த் தேவதாசி வகுப்பினருக்கும் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். ஆந்திரநாட்டிலுள்ள தேவதாசி வகுப்பினர் கல்வி ஒழுக்க விஷயங்களில் பெரிதும் சிரத்தைகாட்டி வருகின்றனர். மேளக்கச்சேரிக்குப் போவதை இழிவாகக் கருதுகின்றனர். ஏன்? உண்மையில் அத்தொழில் மிக மிகக் கேவல நிலைமையை அடைந்து விட்டது. இச் சமூக ஆண்கள் விசேஷ காலங்களில் கச்சேரிகட்குப் போனால் மனிதர்களாகப் பாவிக்கப் படுகிறார்கள் இல்லை. எல்லாருக்கும் குனிந்து குனிந்து வணக்கஞ் செய்யவேண்டும். கைகட்டி வாய் பொத்திக்கொண்டு பேசவேண்டும். இது தமிழ்நாடெங்கும் இப்பொழுது அநுபவத்தில் உள்ள நிலையாகும். இவர்களிடம் உள்ள கலைத் திறத்தைக் கண்டு பாராட்டும் உயர் வகுப்பினர் என்போர் பிறவி காரணமாக இவர்களை இழிவாகக் கருதுகின்றனர். இந்த நீசத்தனத்தை எப்படி ஒழிப்பது? அதற்கு ஆந்திர சகோதரர்கள் காட்டியுள்ள வழியைக் கவனித்துக் கடைப்பிடிப்பார்களாக? இவர்களைப்போலவே பாட்டுக் கச்சேரிகட்குச் செல்லும் பிராமணர் முதலிய உயர் வகுப்பினர் என்பவர்கள் கௌரவமாகப் போற்றப்படுகிறார்கள் என்பதையும் இங்கே நினைவூட்ட விரும்புகின்றோம்.

---

## சதிர்க்கச்சேரி வேண்டாம்

ஷை ஆந்திர கனாவந்துல மகாநாட்டினர் அச்சமூகப் பெண்கள் சதிர் ஆடும் தொழிலை விட்டொழிக்க வேண்டும் என்றும் தீர்மானம் செய்திருக்கின்றனர். விசேஷ காலங்களில் இளம்பெண்களை அலங்கரித்துப் பகிரங்கமாய் நாட்டியம் ஆடச் செய்வது இந்து சமூகத்திற்கே மானக்கேடாகும். இந்தத் துர்வழக்கம் நம்முடைய பரிசுத்த தேவாலயங்களில் எப்படிப் புகுத்தப்பட்டது என்று எமக்குப் புலப்படவில்லை. ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மையார் அவர்கள் பெண்கள் சதிர் ஆடுவதை அழுத்தமாய்க் கண்டித்து வருகிறார். ஆனால் இதற்கு எதிர்ப்பும் இல்லாமல் இல்லை. "நாட்டியம் ஒரு சிறந்த உயர் கலை. அதைப் பாழ்படுத்தக்கூடாது" என்னும் கூச்சல் கிளம்பியது. நாட்டியம் உயர்ந்த கலையாயிருக்கலாம். அவ்வுயர்கலையை எல்லா வகுப்புப் பெண்களும் கற்றுக்கொண்டு பகிரங்கமாய்ச் சதிர் ஆட முன் வருவார்களா? அப்படி வந்தால் மாத்திரமே உயர்கலை என்பதற்கு அர்த்தம் உண்டு. ஒரு குறிப்பிட்ட சமூகப் பெண்கட்கு மட்டும் அவ்வுயர் கலையை வற்புறுத்துவான் ஏன் என்று கேட்கின்றோம். கொழுத்த வாலிபர்கள் நிறைந்துள்ள கூட்டங்களில் இளம் பெண்கள் அலங்காரம் செய்துகொண்டு காமரஸம் ததும்பப் பாடி ஆடுவதை அறிவுடையோர் உயர் கலையாக மதிக்கமாட்டார்கள். எனவே, ஆந்திர தேசச் சகோதரி சகோதரர்கள் காட்டிய நல்வழியைப் பின்பற்றுமாறு தமிழ்த் தேவதாசி வகுப்பினரைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். ஷை மகாநாட்டினர் சென்னையில் உள்ள "மியூஸிக் அக்கடமி" யார் சதிர்க் கச்சேரிகட்கு ஆக்கம் அளித்து நாட்டை விபசாரத்திற்குத் தூண்டக்கூடாது என்றும் தீர்மானம் செய்திருக்கின்றனர்.

---

## மத்திய மாகாண சர்க்காரின் விபரீதப் போக்கு

இந்தியா மாத்திரம் அல்ல—உலகமே பூகம்பத்தால் கஷ்ட நஷ்டங்கள் அடைந்துள்ள பீகார் மக்கள்பால் அநுதாபம் காட்டி உதவி புரிந்து வருகின்றது. வைஸிராய் முதல் எல்லாரும் பூகம்பக் கஷ்ட நிவாரண நிதிக்குப் பொருள் திரட்டி வருகிறார்கள். மன்னர்பிரானும் கூட நன்கொடை அளித்திருக்கிறார். எனவே பீகார் பூகம்பக் கஷ்ட நிவாரணத்திற்கு உதவி புரிவதில் அரசியல் சம்பந்தம் எதுவும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. தபாலாபீஸ்களிலுங் கூடப் பீகார் பூகம்ப நிதி அனுப்ப மணியார்டர் கமிஷன் இல்லை என்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. உண்மை இவ்வாறாக, மத்திய மாகாண அரசாங்கத்தார் மாத்திரம் திடீரென்று விபரீத வழியில் இறங்குவதற்குரிய காரணம் எமக்கு விளங்கவில்லை. "எந்த முனிஸிபாலிடியும் பீகார் பூகம்ப நிதிக்குப் பணம் அனுப்பக் கூடாது" என்று அந்த மாகாண அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனராம். முனிஸிபல் செலவைத் தவிர வேறு செலவு செய்யக்கூடாது என்பது அவர்கள் கூறும் காரணம். சரி. பெரிய பதவியில் உள்ளவர்கட்கு உபசாரப் பத்திரங்களை வாசித்து அளிக்கும் செலவு முனிஸிபல் செலவுதானா என்று கேட்கின்றோம்.

---



## தீனபந்து ஆண்ட்ரூஸ் கருணை

தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூஸ் அவர்கள் மேனாடுகளில் தாம் செல்லும் இடந்தோறும் பீஹார் பூகம்பக் கஷ்டநஷ்டங்களை எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறார். அவர் சமீபத்தில் ஸ்காண்டிநேவியாவில் பல முக்கிய இடங்களில் இந்திய பூகம்பக் கஷ்டங்களைப் பற்றிப் பிரசங்கம் செய்திருக்கிறார். அவருடைய சொற்பொழிவுகள் ஜனங்களிடையே மிகுந்த சிரத்தையை உண்டாக்கி இருக்கின்றன என்று தெரிகிறது. டாக்டர் கெர்லோல் என்பவர் சர்வதேச தொண்டர்படையுடன் பீகாரில் ஊழியம் புரிய வந்திருக்கிறார். தீனபந்து ஆண்ட்ரூஸ் அவர்களின் நன்முயற்சியால் ஸ்காண்டிநேவியா முதலிய இடங்களிலுள்ள இளைஞர்களும் இங்கே தொண்டுபுரிய வருவார்கள் என்று தெரிகிறது. இந்திய மக்களிடம் அன்பும் ஆதரவும் காட்டிவரும் ஆண்ட்ரூஸ் அவர்கட்கும் மற்ற அநுதாபிகட்கும் எமது மனமார்ந்த வாழ்த்து உரிமை செய்கின்றோம்.

---

## தொழிலாளருக்கு லாபத்தில் பங்கு

மகாத்மாகாந்தியடிகள் ஏழைத் தொழிலாளர்களிடம் அளவிலாக் கருணை கொண்டவர். எல்லாரும் இன்புற்றிருப்பதே மகாத்மாவின் லட்சியமாகும். தொழிலாளர்களுக்குத் தம்மாலியன்ற வரையில் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப உதவி செய்வதில் சிறிதும் பின் வாங்காதவர். அப்படியிருந்தும் தொழிலாளர் தலைவர்கள் என்றும் சமதர்ம வாதிகள் என்றும் கூறிக்கொள்ளும் ஒரு சிலர், மகாத்மா முதலாளிகளின் கையாளாக இருப்பதாகக் கூறி வருகின்றனர். இக் கூற்றைப் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்பது நிச்சயம். சென்றமாதம் ஆமதாபாத் ஆலைகளின் தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட தகராறில் நிரந்தரமாகச் சமரசம் ஏற்படுத்தும்பொருட்டு மகாத்மா கூறிய யோசனையில் தொழிலாளருக்குக் குறைந்த பட்ச வாழ்க்கைக்கு அவசியமான சம்பளம் கொடுப்பதுடன், லாபத்திலும் ஒரு சிறிது பங்கு கொடுக்க யோசனை கூறியுள்ளார். அதன்படியே இப்போது முதலாளிகள் சங்கத்தாரும் தொழிலாளர் சங்கத்தாரும் ஒரு திட்டத்தைத் தயாரித்து வருகின்றனர். தொழிலாளருக்கு லாபத்தில் பங்கு அளிப்பதென்பது சமதர்மத்தின் அஸ்திவாரமாகும். மகாத்மா வாயால் பிரமாதமாகப் பேசாவிட்டாலும் சமய சந்தர்ப்பம் ஏற்படும்போதெல்லாம் சமதர்ம முறையைச் சிறுகச் சிறுக இந்திய வாழ்க்கையில் புகுத்த ஏற்பாடு செய்துவரும்போதும் அவரைப் பற்றிச் சிலர் பிசகாகக் கூறுவதானது வருந்தத்தக்கதாகும்.

---

## செடில் தடை வெற்றி!

தெய்வத்தின் பேரால் பாமர ஜனங்கள் உடல்களில் ஊசிகளைக் குத்திக்கொள்ளல், முதுகுகளில் குத்திய கொக்கிகளில் சிறு தேர்களைக் கட்டி இழுத்தல் போன்ற சித்திரவதை மூட வழக்கங்களை ஒழிக்கவேண்டும் என்று நாம் அடிக்கடி எழுதிவருவது நேயர்கட்குத் தெரியும். சென்ற மாதம் வீரசிங்கம்

பேட்டையில் மாரியம்மன் திருவிழாவில் திருவையாறு மாஜிஸ்ட்ரேட் பிறப்பித்த 144-வது தடையுத்தரவு காரணமாக ஷை மாஜிஸ்ட்ரேட்டும் மற்று மிரு போலீஸ் உத்தியோகஸ்தர்களும் கொல்லப்பட்ட செய்தியைப்பற்றியும் நாம் எழுதி யிருக்கிறோம். அதன் பின்னர் தஞ்சை ஜில்லாவிலும், வேறு இடங்களிலும் கொண்டாடப்பட்ட திருவிழாக்களில் செடில் குத்தும் கோர வழக்கம் அடியோடு நிறுத்தப்பட்ட செய்தியை அறிந்து நாம் மகிழ்ச்சிப்பெருக்கு அடைகின்றோம். அரசாங்கத்தார் பிறப்பித்த 144-வது தடை யுத்தரவே செடில் குத்தியாடும் அநாகரிக வழக்கத்தைத் தடை செய்தது. இங்ஙனமே மோகரம் போன்ற விசேஷ நாட்களில் பாமரமக்கள் உடல்கள் எங்கும் கரியைப் பூசிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வதையும் தடை செய்யவேண்டும் என்று விரும்புகின்றோம். சட்டசபை மெம்பர்கள் இத்தகைய அநாகரிக வழக்கங்களைத் தொலைக்க முன்வருவார்களாக.

---

## தமிழில் பேசக்கூடாதாம்!

சென்ற ஏப்ரல் மாதம் 24ம்தேதி நடைபெற்ற சென்னை நகரசபைக் கூட்டத்தில் சாக்கடைக்குழாய் போடுவதற்கான டெண்டர்களைப்பற்றிய விவாத சந்தர்ப்பத்தில் ஸ்ரீமான் ஜி. செல்வபதி செட்டியார் தமது கருத்தைத் தமிழில் தெரிவிக்கத் தொடங்கினார். மேயர் மிஸ்டர் லேடன் குறுக்கிட்டுத் தமக்குத் தமிழ் தெரியாதென்றும், ஆதலால் அவர் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்றும் சொன்னார். "என்னால் ஆங்கில மொழியில் பேச முடியாது. தாய் மொழியில்தான் பேச இயலும்" என்றார் ஸ்ரீமான் செல்வபதி செட்டியார். இக்காலத்தில் எல்லா விவகாரங்களும் தாய்மொழி வாயிலாகவே நடைபெற வேண்டும் என்ற கிளர்ச்சி நாடெங்கும் செய்யப்பட்டு வருகிறது. கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் கூட எல்லாப் பாடங்களும் தாய் மொழி வாயிலாகவே போதிக்கப்படல் வேண்டும் என்ற கருத்து வலிமை பெற்று வருகிறது. இந்நிலையில் ஜனப் பிரதிநிதிகளான சிறந்த ஊழியர்கள் நகர பரிபாலன விவாதங்களை அந்நிய மொழியாகிய ஆங்கிலத்திலேயே நடத்தவேண்டும் என்று கூறுவது ஒரு சிறிதும் நியாயமாகத் தோன்றவில்லை. நகரசபையில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையோருக்குத் தமிழ் தெரியும். தலைவருக்குத் தமிழ் தெரியாது என்றால் அவர் ஒரு மொழி பெயர்ப்பாளரை வைத்துக்கொள்ள வேண்டுமேயொழிய அங்கத்தினர்கள் தாய் மொழியில் பேசக்கூடாது என்று தடைசெய்வது பொருத்தமாய் இல்லை. சென்னை சட்ட சபையில் சில அங்கத்தினர்கள் தாய் மொழியிலேயே பேசி வருவதையும் இச் சமயத்தில் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

---

## ஆலயப்பிரவேசமும் ஸ்ரீ சத்தியமூர்த்தியும்

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் தம்மை ஒரு காங்கிரஸ் தலைவராகவும், தேசிய வாதியாகவும் சொல்லிக்கொள்ளுகிறார். தென்னாட்டில் புத்துயிர் பெறும் சுயராஜ்யக் கக்ஷியின் தலைவராக விளங்கவும் ஆசைப்படுகிறார். இத்தகையவர் தீண்டாமை என்னும் களங்கத்தைப் போக்கச் செய்யப்படும் நன் முயற்சிக்கு எதிரிடையா யிருப்பது ஆச்சரியமா யிருக்கிறது. இவர் சென்ற மாதம் கும்பகோணத்தில் ஒரு கூட்டத்தில் பேசியபோது, "ஆலயப் பிரவேச



உரிமைக்காகச் சட்டம் செய்வதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்" என்று கூறினார். உலகம்போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகள் ஆலயப்பிரவேச உரிமைக்குச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று விரும்பி அதற்கு ஆதரவு காட்டி வருகிறார். உண்மைத் தேசிய வாதிகள் எல்லாரும் அதற்கு அநுகூலமாகவே இருக்கிறார்கள். காங்கிரஸ் தீண்டாமை என்னும் தீமையை அடியோடு ஒழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. பழைய சுயராஜ்யக் கட்சித் தலைவர்களாகிய ஸி. ஆர். தாஸும், பண்டித மோதிலால் நேரு போன்றவர்களும் தீண்டாமையைப் போக்கித் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றும் திருப்பணியில் முனைந்து நின்றனர். சிறந்த காங்கிரஸ்வாதி என்றும், சுயராஜ்யக் கக்ஷித் தலைவர் என்றும் சொல்லிக்கொள்ளும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் இவ்விஷயத்தில் இன்னும் குறுகிய மனப்பான்மை காட்டிக் கொண்டிருப்பது வருந்தத்தக்கதாகும். தேசியத் தலைவராகிய இவருக்கும் ஸ்ரீமான்கள் எம். கே. ஆச்சாரியா, ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியார் போன்ற வைதிகத் தலைவர்கட்கும் என்ன வித்தியாசம் என்று அறிய விரும்புகின்றோம்.

---

## பெரியார்களின் பிரிவு

சென்ற ஏப்ரல்மீ 24உ மங்களவாரம் உண்மையாகவே ஒரு அமங்கள நாள் ஆகிவிட்டதை அறிந்து வருத்தமும் ஆச்சரியமும் அடைகின்றோம். அன்று ஸர் ஸி. வி. குமாரசாமி சாஸ்திரியார், டாக்டர். ரங்காச்சாரியார், ஹாஜி ஸர் இஸ்மெயில் சேட், ஸர். சங்கரன் நாயர் ஆகிய நான்கு பெரியார்களும் காலஞ் சென்றனர். இந்நால்வரும் தங்கள் தங்கள் தொழில்களில் தலை சிறந்தவர்களாக விளங்கினார்கள். ஸர் ஸி. வி. குமாரசாமி சாஸ்திரியார் சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜாகவிருந்து ஓய்வு பெற்றவர். சட்டத்தில் சிறந்த அறிவு படைத்தவர். நல்ல கல்விமான். டாக்டர் ரங்காச்சாரியார் சத்திர சிகிச்சையில் பேரும் புகழும் பெற்றவர். ஏழை மக்கள்பால் மிகவும் அன்பும் இரக்கமும் கொண்டு வாழ்ந்தார். இவருடைய பிரிவு சென்னை மாகாணத்திற்கே பெரிய நஷ்டமாகும். ஹாஜி ஸர் இஸ்மெயில் சேட் முஸ்லிம் சமூகச் சிரேஷ்டர். பெரிய வர்த்தகர். பரோபகாரி. ஸர். சங்கரன் நாயர் தென்னாட்டு மாபெருங் கிழவர். சுயேச்சை புத்தியும் அஞ்சா நெஞ்சமும் படைத்தவர். இவர் காங்கிரஸ் மகா சபைக்குத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். ஆதியில் சென்னையில் பப்ளிக் பிராஸிக்யூட்டராக நியமனம் பெற்றுப் படிப் படியாக உயர் பதவியை அடைந்தார். ஸர். சங்கரன் நாயர் சென்னையில் அட்வகேட் ஜெனரலாகவும் ஹைக்கோர்ட் ஜட்ஜாகவும் இருந்தார். பின்னர் ராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபை அங்கத்தினராகவும், இந்தியா மந்திரி சபையின் அங்கத்தினராகவும் இருந்து அரிய ஊழியம் புரிந்திருக்கிறார். பஞ்சாபில் நடைபெற்ற அக்கிரமங்களை கண்டித்ததின் பயனாக பெரிய அவதூறு வழக்கில் இவர் உட்பட நேர்ந்தது. அதில் மிகுந்த நஷ்டம் அடைந்தார். ஸர். சங்கரன் நாயர் சிறந்த சமூக சீர்திருத்தக்காரர் என்பதை யாரும் மறப்பதற்கில்லை. ஷை நான்கு பெரியார்களின் பிரிவும் ஈடு செய்ய முடியாத பெரிய நஷ்டமாகும். அவர்களைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தாருக்கு எமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

---

# நாவல்

## நீல அறையின் மர்மம்

(எல். எஸ். வாஸன்.)

(798-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான்:—நன்றாக யோசித்துச் சொல்லுங்கள்—என்றேன்.

என்னுடைய எண்ணங்களெல்லாம் 'சாரதா'வின்பேரிலேயே யிருந்தது. "கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டாற்போ லிருக்கிறதேயொழிய இன்ன பேர்வழிதா னிருக்கவேண்டுமென்று என்னால் சொல்லவே முடியாது" என்று பாலாமணியம்மாள் பதில் சொன்னாள்.

நான் சந்தேகங் கொண்டிருக்கும் 'சாரதா'வைப்பற்றி இந்தம்மாளிடம் சொல்லலாமாவென்று சிறிதுநேரம் யோசனையாக விருந்தேன். ஆனால் இது நியில் இச்சமாசாரத்தை வெளிப்படுத்துவதைக் காட்டிலும் நானே இவ்விரக சிய மறிந்ததின் அநுகூலத்தினால் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டேன்.

நான்:—(பாலாமணியம்மாளைப் பார்த்து) இந்த ஸ்திரீயுடன் மீனா சுமார் இருபது நிமிஷங்களுக்குப் பேசிக்கொண்டிருந்தா ளென்றல்லவா சொன்னீர்கள்?—என்றேன்.

பாலாமணி:—ஆம். சுமார் இருபது நிமிஷங்களுக்கு மீனா என்னை விட்டுப் பிரிந்திருந்தாள்.

நான்:—இந்த இருபது நிமிஷங்களுக்குள்ளாகவே இந்த மர்ம ஸ்திரீ வீட்டைவிட்டு வெளியே சென்றிருக்கவேண்டும்.

பாலாமணி:—ஆம், அவள் வந்தது எல்லோருக்கும் தெரியுமே யொழிய அவள் சென்றது யாருக்கும் தெரியாது.

நான்:—இருக்கட்டும்; இருக்கட்டும்; இந்த ஸ்திரீயைக்கூட டாக்டர் நடேசன் கண்டுபிடித்துவிடுவார். இந்த ஸ்திரீயை எவராவது கண்டு பிடிக்க முடியுமென்பது உண்மையானால் அவர் நமது டாக்டர் நடேசன்தான் என்பதில் ஆட்சேபனையில்லை.

பாலாமணி:—இந்த ஸ்திரீயைக் கண்டுபிடிப்பது பிறகு ஆகட்டும். முத லில் மீனாவை இந்த மூர்ச்சையிலிருந்து எழுப்பும்படிச் சொல்லுங்கள்—என்று மீனாவைப் பார்த்தவண்ணம் மிகுந்த கவலையுடன் சொன்னாள்.



இவ்வாறு நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் டாக்டர் நடேசன் ரிக்ஷாவி லிருந்திறங்கி உள்ளே வந்தார்.

தான் கடையிலிருந்து வாங்கிவந்த சில மருந்துப் பொ மேஜையின்மேல் வைத்து இவைகளையெல்லாம் ஒன்றன்பி பிரித்தார். நிறத்தினாலும் குணத்தினாலும் சில மருந்துகளை கொண்டேன். ஆனால் எல்லாவற்றையும் அறிந்துகொள்ள ஏனென்றால் சுமார் ஏழு அல்லது எட்டு பொட்டணங்கள யான செந்தூரமே யிருந்தது. இந்த செந்தூரங்கள் ப மாதிரியாக தோன்றியபடியால் இவைகளில் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இவைகளெல்லாவற்றையும் கலந்து டாக்டர் நடேசன் மீ ளுக்கு இன்ஜெக்ஷன் செய்தார். பிறகு ஐந்து நிமிஷங்களுக்கு ப பலனைக் கவனித்துக் கொண்டிருந்தார். நானும் அசையாமலே பார்த்த வண்ணமாக நின்று கொண்டிருந்தேன்.

இந்த மூன்றாவது இன்ஜெக்ஷன் செய்யப்பட்டதில் மீனாவி தில் வெளுப்பு மாறிப் பழைய நிறம் கொஞ்சங் கொஞ்சமாக வந்து டிருந்தது. சாம்பல் நிறமாக விருந்த அதரங்கள் விகாரமான சிவப்பு நிற யடைந்தன. மீனாவுடைய தேகம் புதிய நிலைமையை விட்டுவிட்டுக் கொஞ் சங் கொஞ்சமாகப் பழைய நிலைமைக்கு வந்து கொண்டிருந்தது.

இதைக் கூர்மையுடன் கவனித்துக் கொண்டிருந்த டாக்டர் நடேசன் மீனாவின் கரத்தைப் பிடித்து நாடி பார்த்துவிட்டு, "இவ்வளவு சீக்கிரம் இந்த மருந்து வேலை செய்யுமென்று நான் நினைக்கவில்லை. நல்லது; இன்னுஞ் சில நிமிஷங்களுக்கெல்லாம் இப்பெண் நம்முடன் பேச ஆரம்பிப்பது நிச்சயம்" என்றார். இதைக் கேட்க என்மனம் பூரித்தது. பாலாமணியம்மாளுக்கு உண்டான சந்தோஷத்திற்கும் எல்லையே யில்லை.

இரண்டு நிமிஷங்கள் கழிந்தன. மீனாவுடைய முகத்தில் ஒருவித பிர காசம் உதித்தது. இரத்த ஓட்டம் வேகமாயிருந்தது. நான் மீனாவுடைய தேகத்தை ஸ்பரிசித்துப் பார்த்தேன். ஜில்லென்றில்லாமல் உஷ்ணமா யிருந்தது. நாடிகள் வேகமாக அடிக்க ஆரம்பித்து விட்டன. இன் னும் இரண்டு நிமிஷங்கள் சென்றபின் அவள் தனது கண்களைத் திறந்து ஆச்சரியத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். தற்சமயம் என்னு டைய மனமானது ஆச்சரியத்தினாலும் கரை கடந்த சந்தோஷத்தினா லும் என்னவிதமாகத் துடி துடித்துப் பதைக்கும் என்பதை நேயர்களே நான் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்......மீனா இறக்கவில்லை! என் மனைவி புன்னகையுடன் என்னைப் பார்க்கின்றாள்!!

என் கட்டழகி என்னைக் கண்ணுற்றுப் பார்த்தபோது நான் குனிந்து அவளை யன்புடன் நோக்கி, "நான் யாரென்று உனக்குத் தெரியவில்லையா?... என் பெயர் லோகநாதன்!" என்றேன்.

இதற்கு அவள் மிகுந்த ஈனக்குரலில் "உங்களை நன்றாய்த் தெரியும்!... ஆனால் என்ன நடந்தது? அவள் எங்கே?" என்றாள்.

"அவள் என்றால் யார்?......உன்னுடன் பேசிவிட்டுப்போன ஸ்திரீயா?" என்று நான் கேட்டேன்.

"ஆம். அவன் எங்கே" என்று ஆவலுடன் கேட்டான்.

...பார் என்றும் எங்கு போயிருக்கிறு னென்றும் எங்களுக்குத் ...வெகுநேரமாய் மூர்ச்சையாகிப் படுத்திருக்கிறாய்! இதோவிருக் ...டாகன் உனக்குத் தக்க சிகிச்சை செய்து உனக்கு உயிரைக் ...ன்று நான் கூறினேன்.

...ழுது உன் உடம்பு எப்படி யிருக்கிறது?" என்று கேட்டார் ...ன்.

அதிக தாகமாயிருக்கிறது" என்றான் மீனன்.

டாக்டர் நடேசன் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் பிராந்தியும் கலந்து கொடுக்க மீனன் இதை பருகினன்...சில நிமிஷம் ...ரம் அவன் எழுந்திருந்து உட்கார்ந்துகொண்டு தைரியத்துடன் ...த்தான். எவ்வளவு சீக்கிரமாக அவன் மூர்ச்சையாகி விழுந்தனனோ சீக்கிரத்தில் இப்பொழுது மூர்ச்சை தெளிந்து தைரியங்கொண்டு

..

...வன் என்னவிதமாக மூர்ச்சையானன் என்பதைக் கேட்டேன். எங்க ...கல்லாம் எப்படி நேர்ந்ததோ இதேவிதமாக அவனுக்கும் நேர்ந்திருக் ...து.

டாக்டர் நடேசன்:—(மீனனைப் பார்த்து) அம்மா! திடீரென்று உன் னுடைய சுவாதீனம் கெட்டுப்போய்விட்டதா? அல்லது கொஞ்சங் கொஞ்ச மாக ஸ்வாதீனமில்லாமற்போய்விட்டதா!—என்று கேட்டார். இதற்கு மீனன், டாக்டர் நடேசனைப் பார்த்து "ஆரம்பத்தில் என்னுடைய தேகம் எங்கு பார்த்தாலும் அசைவற்றுப்போய்விட்டதே தவிர, புத்தி ஸ்வாதீனம் அழியவில்லை. ஆனால் வாய்திறந்து பேசுவதற்கு சக்தி கிடையாது. டாக்டர் லோகநாதம் பாலாவுடன் பேசிக்கொண்டிருப்பதுபோல் எனக்குக் கேட்டது. ...னல் என்னல் கத்தமுடியவில்லை. அப்பால் கொஞ்சங் கொஞ்சமாக ஸ்வா ...னம் அழிந்துவிட்டது. நான் இறந்துபோய்விட்டதாக நீங்கள் தீர்மானித்து விடுவீர்களென்பது எனக்குத் தெரியும்...இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், எனக்குக் கொஞ்சம் ஸ்வாதீனமிருக்கும்பொழுது, ...த தேகவலியைத் தாங்கமுடியாமல் உயிரோடு புதைக்கப்பட்டால் என்னசெய்வதென் றெண்ணினேன்" என்றான்

டாக்டர் நடேசன்:—ஆனல் கடைசிவரை நீ புத்திஸ்வாதீனத்துடன் இல்லை?

மீனன்:—இல்லை. இங்கு எவ்வளவு நேரம் நான் படுத்த படுக்கையாயிருக் கிறேன்?—என்று கேட்டான்.

இதற்கு பாலாமணி "சுமார் இரண்டரை மணி நேரமாகப் பேச்சு மூச் சில்லாமலிருந்தாய்!" என்று சொல்லிவிட்டுக் கண்ணீருதிர்த்தாள்.

நான்:—(மீனனைப்பார்த்து) இப்பொழுது தேகத்தில் எந்த பாகத்திலும் வலியில்லையே! நன்றாகப் பேசும்படி பலம் உண்டாகிவிட்டதல்லவா?— என்று கேட்டேன்.

இதற்கு மீனன் "இப்பொ... ...வ தெரியவில்லை" என்று சொல்லிக்கொண்டே... ...ன்றான்.

187518

187518

ஆனந்தபோதினி Regd. No. M. 1190.

# "பிரசண்டவிகடன்"

## மாதம் இருமுறை வெளிவரும்

## ஒரு ஹாஸ்யப் பத்திரிகை.



இதில் சிறப்பாக அரசியல், சமூக வியல், சமயவியல் சம்பந்தமான எல்லா விஷயங்களும் விலாப் புடைக்கச் சிரிக்கச் செய்யும் தோர ணையில் தமாஷாகவும், வேடிக்கை யாகவும், விநோதமாகவும், கேலி யாகவும் வெளிவரும். ஏராளமான அபூர்வ அதி விசித்திரப் படங்கள் பத்திரிகையை அலங்கரித்து வரும். தேச சமூக விடுதலைக்கு உழைப் பது. இன்றே சந்தாதாரராகச் சேர முந்துங்கள்..

ஆண்டுச் சந்தா தபால் கூலி

யுட்பட உள் நாடு ரூ. 1—8—0.

வெளி நாடு ரூ. 2—8—0.

தனிப்பிரதி விலை அணா ஒன்று.

குறிப்பு:—ஏஜண்டுகளாக விரும்புவோர் நமது காரியாலயத் திற்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளலாம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம் புஸ்தகசாலைகளிலும் "சுதேசமித்திரன்" புஸ்தக சாலை களிலும், எல்லா ஊர்களிலுமுள்ள ஏஜண்டுகளிடமும் "பிரசண்ட விகடன்" ஒரு அணாவுக்கு விற்கப்படும்.

ஏஜெண்டுகள் இல்லாத ஊருக்கு ஏஜண்டுகள் தேவை.

மானேஜர், "பிரசண்ட விகடன்" ஆபீஸ்.

நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்.

PRINTED & PUBLISHED BY N. MUNISAMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
NO 6 LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற (ரிஜிஸ்டர்டு.)

## “சகுந்தலா” கூந்தல் வளரும்

### பரிமளத் தைலம்

ஆழாக் 5 எண்ணெய் அடங்கிய




ஒன் 1-க்கு விலை அணா 12

இத்தைலம் பரிமளம் யாவருக்கும் இன்பத்தை யளிக்கும். இது கூந்தலை நீளமாக வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணியச் செய்யும். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல வியாதிகளையும் நிவர்த்தி செய்யும். கண்ணில் நீர்வடிதல், தலையில் புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தேக களைச்சல், சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், மலேரியா கூலம், ஞாபகமறதி இவைகளைப் போக்கடித்துத் தேக ஆரோக்கியத்தைத் தந்து வாசனையை உண்டாக்கும். இந்தத் தைலம், பல வைத்தியர்களால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதில் ஒரு தரம் தைலம் வாங்கிப் பார்த்தால் இதன் அருமை விளங்கும்.

# கிருஷ்ண சஞ்சீவி



தலைவலி, பாரிச வாயு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள் கொட்டின விஷம் இவைகளைத் தீர்ப்பதில் இது முதன்மை பெற்றது. நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியைத் தடவி நன்றாய் இரண்டு மூன்று நிமிஷங்கள் வரை தேய்த்தால், அது மாயமாய் ஓடிவிடும். இளங் குழந்தைகளுக்குக் காணும் வைத்திய நோய்களுக்கும் இதை உபயோகிக்கலாம். இதன் புட்டிகள் ஆயிரக் கணக்காகச் செலவழிந்து கொண்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும், பிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும். இதன் விலை புட்டி 1-க்கு அணா 8. டஜன் 1-க்கு ரூ. 5

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால் பெட்டி நெ. 167. மதராஸ்